திருக்கோயில்

"என் கடன் பணி செய்து கிடப்பதே"

CONNEMARA PU...
12 JUL ...
MADR...



திருமால்

மாலை 11] சௌமிய - ஆவணி - செப்டம்பர் 1969 [மணி 12

தமிழ் நாடு அரசின் அறநிலைய



திருவல்லிக்கேணி ஸ்ரீ பார்த்தசாரதிப் பெருமாள் கோயிலுக்கு
நமது அறநிலைய அமைச்சர் மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா, B.A. அவர்கள்
வருகை தந்தபோது, பூரண கும்பத்துடன் வரவேற்றுச் சிறப்பிக்கப் பெறுதல். (24-8-69)

பொருளடக்கம்

1. கம்பர் கவியுள்ளம்
2. திருவானைக்கா அகிலாண்ட நாயகி மாலை
3. உபதேச நூல்களின் உயர்த்தி
4. திருவள்ளுவம்
5. அபிராமி அந்தாதி
6. மகாபாரதம்
7. கண்ணகத்தில் காதல்
8. தருமபுர ஆதீனத்தில் பாராட்டு
9. துளசியின் சிறப்பு
10. கட்டுரைப் பட்டியல்

சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள்

ஆண்டுச் சந்தா ரூ. 10/-

தனி இதழ் விலை ரூ. ஒன்று

'திருக்கோயில்' இதழின் சந்தாதாரர்கள் ஆகச் சேர விரும்புபவர்கள் "திரு. ஆணையர் அவர்கள், அறநிலைய ஆட்சித்துறை, சென்னை-34" என்னும் முகவரிக்கு ரூபா பத்து அனுப்பி எப்போது வேண்டுமாயினும் சந்தாதாரர்கள் ஆகச் சேர்ந்து கொள்ளலாம்.

அல்லது, அவ்வவ் வட்டார அறநிலைய் உதவி ஆணையாளர்களின் அலுவலகங்களிலும், மேற்படி சந்தாத் தொகையைச் செலுத்தி சேரலாம்.

சந்தாதாரர்கள் தங்களுடைய சரியான முழு முகவரியைத் தெரிவித்துதவுதல், இதழ்கள் தவறுமற் சேர்தற்கு மிகவும் இன்றியமையாதது.

—ஆசிரியர்



மாலை 11] சௌமிய - ஆவணி - செப்டம்பர், 1969 [மணி 12

கம்பர் கவியுள்ளம்

முன்னுரை :

தமிழ்மொழிக்கு எத்தனையோ பல சிறப்புக்கள் உண்டு. ஏராளமான இனிய சிறந்த கவிதைகளைப் பெற்றிருத்தலும் அவைகளுள் ஒன்று. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கும் முற்பட்ட காலம் தொட்டே, தமிழிற் சிறந்துயர்ந்த கவிதை இலக்கியங்கள் தோன்றி வளர்ந்து வருகின்றன. தமிழைப்போலப் பழமையும் பெருமையும் வாய்ந்த, சிறந்த கவிதை இலக்கியங்களைப் பெற்றுள்ள மொழிகள், உலகில் ஒரு சிலவே யாகும். தமிழ் நூல்களுள் ஒவ்வொன்றும், ஒவ்வொரு துறையில் தனிச் சிறப்புடையது. பொதுவாக எல்லா வகையான மக்களும் எளிய இனிய முறையிற் கவிதையின்பம் துய்த்து மகிழ்தற்குத் துணைபுரிவது, கம்ப ராமாயணம் என்னும் கவின் மிகு நூலே எனலாம்.

அதன்கண் கதையின் சிறப்பும், கருத்தின் வளமும், கவிதையின் எழிலும் ஒருங்கே பொருந்தி ஒளிர்கின்றன. எல்லாச் செல்வங்களையும் பெற்று, இவ்வுலகம் முழுவதையுமே அரசாட்சி புரிந்தாலும்; தேவருலகம் சென்று, அங்கே கற்பகமர நிழலில் அமர்ந்து, எத்துணைப் போகங்களைத்தான் நுகர்ந்தாலும்; கற்றவர்களின் உள்ளத்தினைக் களிப்படையச் செய்வது கம்பநாடன் கவித்தை ஒன்றேயாகும். அதனைப் போலக் கற்றவர்களின் உள்ளத்தைக் களிதுளும்பச் செய்வது வேறு பிறிதொன்றில்லை.

> " கம்ப நாடன் கவிதையிற்போற்
> கற்றோர்க் கிதயம் களியாதே. "

கம்பநாடரின் கவிதைச் சிறப்பு, கட்டுரைத்தற்கு எளியதொன்றன்று. பெண்களிலெல்லாம் திருமகள் போலவும், விண்மீன்களிலெல்லாம் சூரியன் போலவும், உலகிலுள்ள மலைகளிலெல்லாம் இமயமலை போலவும், ஈடும் எடுப்பும் இன்றிச் சிறந்துயர்ந்து திகழ்வது கம்பராமாயணம். அதனைப் போன்ற கவின்மிக்க நூல் வேறொன்றனை நாம் காண்பதரிது.

"In the Ramayana of Kamban, the world possesses an epic which can challenge comparison not merely with the Iliad, and the Aeneid, the Paradise Lost and the Maha Bharatha, but even with its original itself, namely, the Ramayana of Valmiki."

—V. V. S. Aiyer.

"கம்பரா மாய ணம்போற்
கவின்மிகு நூலும் காணேம்."

கம்பராமாயணம் உலகப் பெருங்காப்பியங்களுள் ஒன்று. உலகப் புகழ்பெற்ற இலியதம், ஈனிதம், துறக்கநீக்கம், மகாபாரதம், போன்ற பெருங்காப்பியங்களுடன் மட்டுமே யன்றித், தனக்கு மூலமுதல்நூல் ஆகிய வான்மீகி ராமாயணத்துடனும் கூட, அது சரிநிகர் சமானமாகத் திகழத்தகும் சிறப்புடையது.

இவ்வாற்ருல், கம்பராமாயணம் கவின்மிகச் சிறந்த ஒருபெருங் கவிதை இலக்கியம் என்பதும், கம்பர் தலைசிறந்த ஒருபெருங் கவிஞர் என்பதும் தெளிவாம். கம்பரின் கவித்திறனை யுணர்வதற்கு அவர்தம் நூல் முழுவதுமே சான்ருகும். எனினும் 'நெஞ்சின் மிக்கது வாய்சோரும்' என்னும் உண்மைக்கு ஏற்ப, அவர் தம் நூலின் இடையிடையே தமக்கே இயல்பான கவிதையுள்ளமும் உணர்வும் வெளிப்படுமாறு, கவிதையோடு தொடர்புடைய செய்திகளை உவமைகளாக ஆங்காங்குக்கூறிச் செல்லுதல், அவருடைய தனிப்பெருஞ் சிறப்பினை யாவர்க்கும் அறைகூவி விளக்குகின்றது.

(1) கவிஞரும் சொல்லும்

அயோத்திமா நகரம் கவிஞர்கள் அனைவராலும் புகழப்பெற்றது. வடநூல் முனிவர்கள் பலரும் போற்றி வாழ்த்தியது. தேவர்களும் கூடத் தம்முடைய உலகத்தை விட்டு இறங்கிப் போந்து, தங்கி வாழ்வதற்கு விரும்புகின்ற அத்துணை மாட்சிமை வாய்ந்தது.

"செவ்விய மதுரம் சேர்ந்தநற் பொருளிற்
சீரிய கூரிய தீஞ்சொல்
வவ்விய கவிஞர் அனைவரும், வடநூல்
முனிவரும் புகழ்ந்தது ; வரம்பில்
எவ்வுல கத்தோர் யாவரும் தவஞ்செய்து
ஏறுவான் ஆதரிக் கின்ற
அவ்வுல கத்தோர் இழிவதற்கு அருத்தி
புரிகின்றது, அயோத்திமா நகரம்."

—நகரப்படலம், 1.

இப்பாடலின்கண் அயோத்திமா நகரினைப் புகழ்தலே, கம்பரின் கருத்தாயினும், கவிஞர்களைப் பற்றியும், அவர்கள் வழங்கும் சொற்களைப் பற்றியும்கூட, அவர் இடைப்பிறவரல் போலக் குறிப்பிட்டிருக்கும் திறம், நினைத்துணர்ந்து மகிழத் தக்கது. கவிஞர்கள் கையாளும் சொற்கள் செம்மையுடையவை ; மதுரம் சேர்ந்தவை ; நற்பொருள் உணர்த்துபவை ; சீரியவை ; கூரியவை ; தீவியவை (இனிமை மிக்கவை) என்கின்ருர். இத்தகைய சொற்களைக் கையாளும் திறமை பெற்றவர்கள்தான், கவிஞர்கள் ஆவர் எனவும் சுட்டுகின்ருர்.

"செவ்விய மதுரம் சேர்ந்தநற் பொருளிற்
சீரிய கூரிய தீஞ்சொல்
வவ்விய கவிஞர்"

எனவரும் வரிகள், கம்பரின் கவிதை யுணர்வையும், கவிதை குறித்து அவர் கொண்டிருந்த பல அநுபவம் மிக்க கருத்துக்களையும், புலப்படுத்துதல் காணலாம்.

(2) புன்கவியின் தெளிவின்மை.

அயோத்திமா நகரம் உயர்ந்த மதில்களை உடையது. அம்மதில்களைச் சுற்றி ஆழமான பெரிய அகழி அமைந்துள்ளது. அதன்கண் உள்ள நீர், தெளிவு இன்றிக் கலங்கியிருக்கின்றது. அணுகுதற்கு இயலாதபடி அதற்குப் பல காவல்கள் அமைந்துள்ளன. மேலும் அங்கே ஏராளமான கொடிய முதலைகளும் உண்டு. இங்ஙனம் அகழியானது, ஆழமும் கலக்கமும் காவலும் உடையதாய், முதலைகளும் நிறைந்திருக்கும் தன்மையினை, அரிய இனிய பல உவமைகளாற் கம்பர் அழகுற விளக்குகின்ருர்.

அகழியின் பரப்பு, கடல் போன்றது ; அதன் ஆழம், பொன் விலை மகளிர் மனம் போன்று, அளவிட்டு அறிய முடியாதது ; அதன் கலக்கம், நல்ல புலமை நலம், நிரம்பப்பெருத ஒருவனின் புன்கவியைப் போலத் தெளிவு இன்றி மருள் விளைவிக்கும் தன்மையது. அதற்கு அமைந்துள்ள காவல், கன்னிமகளிர் தங்கி வாழும் அந்தப்புரம் போலப் பகைவரால் எளிதில் அணுகுதற்கு இயலாத அருமைப்பாடு வாய்ந்தது; அங்கே வாழும் வலிய கொடிய முதலைகள், நம்மை நன்னெறியிற் செல்ல விடாமல், புன்னெறியில் வீழ்த்தி வருத்துகின்ற ஐம்பொறிகளைப் போன்றவை.

அன்னமா மதிலுக்கு ஆழிமால் வரையை
அலைகடல் சூழ்ந்தென அகழி,
பொன்விலை மகளிர் மனம்எனக் கீழ்ப்
போய்ப்,
புன்கவி எனத்தெளிவு இன்றிக்,

கன்னியர் அல்கும் தடம்என யார்க்கும்
படிவரும் காப்பின தாகி,
நன்னெறி விலக்கும் பொறிஎன, எறியும்
கராத்தது நவிலலுற் றதுநாம் !

—*நகரப்படலம், 14.*

அகழியின் இயல்பினை விளக்குதற்கு அழகிய ஐந்து உவமைகளை ஆராய்ந்து கூறியருளிய கம்பர், ‘புலமை நிரம்பாத நிலையில் ஒருவன் பாடும் புன்கவிகள் பொருட்டெளிவு இல்லாமல், பயில்வோர்க்கு ஐயங்களை மிகுவித்து மயக்கமே விளைத்துக் கேடுசூழும்’ என்னும் உண்மையினை, உணர்த்தியிருத்தல் உளங்கொளத் தக்கது.

(3) செஞ்சொற் கவியின்பம்.

இராமபிரான் விசுவாமித்திர முனிவருடன் மிதிலைமா நகருக்குச் செல்கின்றார். மிதிலை நகரின் அழகிய பல்வேறு காட்சிகளைக் கண்டு மகிழ்ந்து கொண்டே, அதன் வீதிகளில் அவர் நடந்து போகின்றார். அதுபோது மிதிலை நகர அரண்மனையின்கண் உள்ள கன்னிமாடத்தின் மேலிடத்தில், அன்னங்கள் கூடி விளையாடி இன்புறும் இடத்திற்கு முன்புறத்தில், சீதைப்பிராட்டி நின்று கொண்டிருக்கின்றாள். அங்ஙனம் சீதை நின்றுகொண்டிருத்தலை இராமபிரான் காணநேர்கின்றது. அந்தச் செய்தியைக் கம்பர் சொல்ல வருகின்றார்.

சீதையின் அழகினை இராமபிரான் காண்கின்றார். சீதையோ பேரழகு வாய்ந்தவள். அவளது அழகின் அளப்பருஞ் சிறப்பினையெல்லாம் விளக்க முயல்கின்றார் கம்பர்! அவருக்கு ஓர் உவமை போதவில்லை. பல உவமைகளைக் கூறுகின்றார். பொன்னின் சோதியும், பூவின் நறுமணமும், தேனின் தீஞ்சுவையும் போலச் சீதைப்பிராட்டி பொலிந்து தோன்றினாள் என்கின்றார். அப்போதும் அவருக்கு மனநிறைவு ஏற்படவில்லை. ஆதலின் ஒரு சிறந்த கவிஞன், செம்மையான சொற்களால் யாத்த ஒரு சிறந்த கவிதையினால் விளையும் இன்பம் எத்தகையதாக இருக்குமோ, அவ்வாறு சீதை பொலிந்து நின்றாள் எனப்பாடி இன்புறுகின்றார்.

பொன்னின் சோதி, போதினில் நாற்றம்
பொலிவே போல்,
தென்னுண் தேனில் தீஞ்சுவை,
செஞ்சொற் கவியின்பம்
கன்னிம் மாடத் தும்பரின் மாடே
கனி பேடோடு
அன்னம் ஆடும் முன்றுறை கண்டு
ஆங்கு அயல் நின்றார்.

—*மிதிலைக்காட்சிப்படலம், 23.*

ஒரு காலத்து ஒரு பொறிக்கு மட்டுமே இன்பந் தரவல்ல பொருள்கள், உலகிற் பல உண்டு. ஆனால் ஐம்பொறிகளுக்கும் ஒரு சேர இன்பம் தரவல்ல பெருமை, பெண்களுக்கே யுரியதாம். இதனைக் “கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்றறியும் ஐம்புலனும் ஒண்டொடி கண்ணேயுள” எனத் தெய்வப் புலவர் திருவள்ளுவர் கூறுவர். அம்முறையிற் சீதைப் பிராட்டியின் பேரழகு, இராமபிரானின் ஐம்பொறிகளுக்கும் ஒரு சேரப் பேரின்பம் தரவல்ல நிலையிற் சிறந்து பிறங்கிற்றாம். இதனை விளக்குவதற்குக் கம்பர் பொன்னின் சோதி, போதினில் நாற்றம், தேனில் தீஞ்சுவை என்பனவற்றோடு, **செஞ்சொற் கவியின்பம்** எனவும், சீதைப்பிராட்டி பொலிந்து திகழ்ந்தாள் எனக் குறிப்பிட்டருளியுள்ளார். இதனால், கம்பர் வெறும் கவிஞர் மட்டுமேயல்லர், கவிதையின்பம் இனைய தென்று அநுபவித்துணர்ந்து திளைத்தவரும் ஆவர் என நாம் உணரலாம். இல்லையேல், சீதையினையே அவர் “செஞ்சொற் கவியின்பம்” என்று சிறப்பித்து உருவகம் செய்து பாடியிருத்தல் இயலாது என்பது திண்ணம்.

(4) சான்றோர் கவி:

இராமபிரான் தன் தந்தையாகிய தசரதனின் கட்டளைப்படி, சீதையோடும் இலக்குவனோடும் காட்டிற்குச் செல்லுகின்றார். அங்கே அகத்திய முனிவர், ‘நீவிர் உறைவதற்கு ஏற்ற இடம் கோதாவரிக் கரையில் உள்ள பஞ்சவடி என்னும் ஆச்சிரமமே யாகும்’ என்று கூறுகின்றார். வழியில் அவர்கள் சடாயுவைச் சந்தித்து மகிழ்கின்றனர். சடாயு அவர்களுக்குப் பஞ்சவடிக்குச் செல்லும் வழியினைக் காட்டுகின்றார். மூவரும் கோதாவரி நதி தீரத்தை அடைகின்றனர். அக் கடவுள்மா நதியின் அழகும் சிறப்பும் கண்டு இன்புறுகின்றனர்.

இங்ஙனம் கோதாவரியினை வீரர் கண்டார் என்பதொன்றே, கம்பர் பாட வேண்டுவது ஆயினும், கோதாவரியின் வெள்ளம் போல, அவர் தம் கவிதையுள்ளத்திற் கற்பனை வெள்ளம் பெருகிவிடுகிறது ஆதலின், கோதாவரி நதியினைச்

சான்றோர் கவிதையோடு ஒப்பிட்டுக் காட்டி, உள்ளம் களிதுளும்புகின்றார் கம்பர்!

கோதாவரி நதியானது, தான் பாயும் நாட்டிற்கு அழகும் சிறப்பும் அளிக்கின்றது; செழிப்பை யுண்டாக்கி விளை பொருள்களை மிகுவிக்கின்றது; வெள்ளப் பெருக்கின் மிகுதியினால் பற்பல கால்வாய்களின் வாயிலாக எங்கும் பரவி நிறைகின்றது; இறங்கு நீர்த் துறைகள் பலவற்றை அங்கங்கே கொண்டு ஒளிர்கின்றது; மலை காடு வயல் மணல்வெளி கடற்கரை என்னும் ஐவகை நிலப்பகுதிகளின் வழியாகவும் ஓடிப் பாய்ந்து பயன் தருகின்றது; பளிங்கு போல விளங்கி மிகவும் தெளிந்து காணப்படுகின்றது; வற்றாத பெரு நதி யாதலால் குளிர்ச்சி நிரம்பி இடையறாமல் ஓடிக் கொண்டேயிருக்கின்றது.

சான்றோர் அருளிய கவிதையோ, நாட்டிற்குச் சிறப்பை யளித்து உலகுக்கும் நலம் பயக்கின்றது; அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நாற்பெரும் பொருள்களையும் நல்குகின்றது; கற்பவர்களின் அறிவுக்கு விருந்தாக அமைகின்றது; அகத்திணை புறத்திணை என்னும் பொருட்டுறைகளை யுடையதாய்ப் பயில்பவர்க்குக் கவலைகளை நீக்கி ஆறுதல் அளிக்கின்றது; குறிஞ்சி முல்லை பாலை நெய்தல் மருதம் என்னும் ஐந்திணை வளங்களையும், அவற்றிற்குரிய புணர்தல் இருத்தல் பிரிதல் இரங்கல் ஊடல் என்னும் ஐவகை ஒழுகலாறுகளையும் பற்றிச் செவ்விதின் விளக்குகின்றது; நமக்கு எழும் ஐயங்களை நீக்கித் தெளிவு பெறச் செய்கின்றது; மெல்லென்ற ஓசையுடன் தடையறச் செல்லும் நடையழகு பெற்று விளங்குகின்றது. இங்ஙனம்,

1. புவியினுக்கு அணியாதல்
2. ஆன்ற பொருள் தருதல்
3. புலத்திற்றுதல்
4. அவியகத்துறைகள் தாங்கல்
5. ஐந்திணை நெறி அளாவல்
6. சவியுறத் தெளிதல்
7. தண்ணென்று ஒழுகல்

என்னும் பலவகை ஒப்புமைகளும், கோதாவரி நதிக்கும் சான்றோர் கவிதைக்கும் இடையே விளங்குதலைச் சுவைபெருகவும், சிலேடை என்னும் அணிநலம் அமையவும் பாடியிருக்கும் கம்பரின் கவிதைத்திறம், சாலவும் பாராட்டிக் களிப்பதற்குரியது.

புவியினுக்கு அணியாய், ஆன்ற
 பொருள்தந்து, புலத்திற் றாகி,
அவியகத் துறைகள் தாங்கி,
 ஐந்திணை நெறிய ளாவிச்,
சவியுறத் தெளிந்து, தண்ணென்
 றொழுக்கமும் சான்று, சான்றோர்
கவிஎனக் கிடந்த கோதா
 வரியினை வீரர் கண்டார்!

(5) கவிஞர் சொற்பொருள்.

இராமபிரான் சபரிக்கு வீடுபேறு அளித்த பின்னர்ப் பம்பை என்னும் பெரிய பொய்கையினை அடைகின்றார். ஆதலின் கம்பர் அதன் சிறப்பினைப் புனைந்து பாட முற்படுகின்றார். பம்பைப் பொய்கை மிகவும் அழகானது. கீழே பாதாளம் வரையில் ஆழ்ந்து சென்று, நாகர்கள் வாழும் இடம் இதுதான் என்று காட்டக் கூடிய தன்மை அதற்கு உண்டு. அத்தகைய அதன் ஆழம், சிறந்த கவிஞர்கள் பயன்படுத்தும் சொற்களின் பொருள்கள் எங்ஙனம் மிகவும் ஆழ்ந்து ஆழ்ந்து நுணுகிச் செல்லுமோ, அங்ஙனம் பெரிதும் நெடிது ஆழ்ந்து சென்றுள்ளது என்கின்றார்.

எற்பொரு நாகர்தம் இருக்கை ஈதெனக்
கிற்பதோர் காட்சிய தென்னினும் கீழுறக்
கற்பகம் அனையஅக் கவிஞர் நாட்டிய
சொற்பொருள் ஆம்எனத் தோன்றல் சான்றது

—பம்பைப் படலம், 5

கற்பக மரம் நினைத்த பொருளை யெல்லாம் விரைந்து கொடுக்க வல்லதாதல்போல, உள்ளத்திற்கு இனிய பொருள்களைப் பற்றியெல்லாம், உடனே தங்கு தடையின்றி விரைந்து பாட வல்லவர்களே கவிஞர்கள்! அத்தகைய சிறந்த கவிஞர்கள் வழங்கும் சொற்கள் மாட்சி மிக்கனவாக விளங்கும். அவற்றின் ஆழ்ந்த அழகிய நுண்பொருள்கள், ஆராயுந்தோறும் மேன்மேல் விரிந்து வளர்ந்து செல்லும் இயல்பினவாகத் திகழும். இவ்வுண்மையினைக் கம்பர் இப்பாடலிற் செம்மையுற விளக்கியிருக்கும் தன்மை, கற்போர்க்குக் கழிபேருவகை பயப்பதாகும்.

(6) நாவரும் கிளவிச் செவ்விநடை :

இராமபிரான் திருவுள்ளப்படியே சுக்கிரீவன், வானர வீரர்களை நான்கு திசைகளுக்கும் உய்த்துச் சீதையைத் தேடி வருமாறு அனுப்புகின்றான். அதுபோது சுக்கிரீவனின் கட்டளைக் கேற்பத் தென்றிசை நோக்கிச் செல்ல உள்ள அநுமான் பால், இராமபிரான் சீதைப்பிராட்டியின் அடையாளங்களையெல்லாம் எடுத்துக் கூறி யருள்கின்றார். சீதையின் நடையழகு தேவர்களும் கண்டு வியந்து வணங்கத் தக்கது. அன்னத்தின் நடையோ, பிடியின் நடையோ, அதற்கு ஒரு சிறிதும் ஈடாக மாட்டா. சிறந்த புலவர் பெருமக்களின் நாவிலே இருந்து பெருகும் அழகிய கவிதையின் நடையும் சொல்லும் (Style and Diction), எத்துணை அழகும் சிறப்பும் உடையனவாக மிளிருமோ, அத்தகைய நடையழகினை யுடையவள் சீதை என்று, இராமபிரான் இயம்பியதாகக் கம்பர் கவினுறப் பாடியருள்கின்றார்.

பூவரும் மழலை அன்னம்
புனைமடப் பிடியென் றின்ன
தேவரும் மருளத் தக்க
செலவின எனினும் தேறேன் ;
பாவரும் கிழமைத் தொன்மைப்
பருணிதர் தொகுத்த பத்தி
நாவரும் கிளவிச் செவ்வி
நடைவரும் நடையள் நல்லோய் !

—நாடவிட்ட படலம், 64.

இதன்கண் 'குலவிச்சை கல்லாமற் பாகம் படும்' என்றபடி, தொன்று தொட்டுப் பாரம்பரியமாக வரப்பெறும் புலமை சிறப்புடையதாகலின், அத்தகைய புலவர் பெருமக்களைத் தொன்மைப் பருணிதர் என்று சிறப்பித்தார். அத்தகைய சிறந்த புலவர்களுள்ளும் ஒரு சிலர்க்கே முயல வேண்டாமல் எளிதாகக் கவிபாடும் ஆற்றலும் பேறும் வாய்க்குமாகலின் 'பாவரும் கிழமை' என்று பாராட்டினர். அனைய கவித்திறம் அமையப் பெற்றவர்களின் நாவினின்று மலரும் சொற்களும் சொற்றொடர்களும் தாமே ஒழுங்குபட்டு வரிசையின் அமைந்து, செம்மை மிக்க சிறந்த நடையழகு வாய்ந்து திகழுமாகலின், 'தொடுத்த பத்தி நாவரும் கிளவிச் செவ்வி நடை' எனப் போற்றிப் புகழ்ந்தார். இவ்வாற்றல் நமக்குக் கம்பரின் நல்ல கவிதை யுள்ளம் புலனாதல் காணலாம்.

(7) நல்லியல் நவையறு கவிஞர் சொல் :

போர்க்களத்தில் வச்சிரமுட்டி, பிரகத்தன், துன்முகன் முதலிய வீரர்கள் இறந்துபட்ட செய்தி, இராவணனின் செவிகளை எட்டுகின்றது. அதுகேட்டு வருத்தமும் சீற்றமும் அடைந்த இராவணன், தானே போர்க்களத்திற்குப் புறப்பட்டுப் போகின்றான். போர் முனைக்கு இராவணனே போந்துள்ளான் என்னும் செய்தியினை, இராமபிரான் அறிகின்றார். அவரும் போர்ப்பறந்தலைக்குச் செல்ல விரும்பினர். அதன் பொருட்டுத் தம் வற்கலை யாடையின்மேல், வயிரவாளை எடுத்து அணிந்தார். சேவடியில் வீரக்கழல் சேர்த்தினர். மார்பிற் கவசம் தரித்தார். பின்னர்த் தம்முடைய தோளில் அம்புப் புட்டில் ஆகிய தூணியைத் தாங்கினர். அத்தூணி எத்தகையது தெரியுமா? சிறந்த நல்ல குற்றமற்ற கவிஞர்களின் நாக்குப் போன்றது அது! அதனில் இடையறாது குறைவின்றிப் பெருகிக் கொண்டே இருக்கும் அம்புகளோ, இணையற்றுச் சிறந்த நல்லியல் நவையறு கவிஞர்தம் நாவினின்று இடையுறாமல், தங்கு தடையின்றிப் பெருகி வெளிப்பட்டுக் கொண்டே இருக்கும் ஆற்றல் மிக்க அழகிய அரிய சொற்கள் போன்றவை என்கின்றார் கம்பர்!

பல்லியல் உலகுறு பாடை பாடுஅமைந்து
எல்லையில் நூற்கடல் ஏற நோக்கிய
நல்லியல் நவையறு கவிஞர் நாவரும்
சொல் எனத் தொலைவிலாத் தூணி
தூக்கினன்

—முதற்போர் புரிபடலம், 114

கவிஞர்கள் என்போர் எந்த ஒரு நூலையும் முறையாகக் கற்று முயலாமலே, வாயில் வந்தவாறு வெறும் சொற்சதிர்களால் வரம்பின்றிப் பாடி விடுபவர் அல்லர். "கல்லாதான் ஒட்பம் கழிய நன்று ஆயினும் கொள்ளார் அறிவுடையார்" எனத் திருவள்ளுவர் கூறுதற்கேற்ப, அத்தகையவர்களின் கவிகள் 'நன்கவி' எனப் போற்றப்பெறுமல் 'புன்கவி' எனவே இகழ்ந்து புறக்கணிக்கப்படும். ஆதலின் கவிஞர்கள் என்போர் நல்ல மொழியறிவு பெற்றிருத்தல் வேண்டும். எனவே 'பல்லியல் உலகுறு பாடை பாடு அமைந்து' என்றார். பல மொழிகள் பயிலுதல் இயலாவிடினும், தாம் அறிந்த மொழியிலாதல் ஆழ்ந்த புலமை கைவரப் பெற்று, அதன்

எல்லையற்ற நூற்கடலை எல்லை கண்டு கற்று வல்லவர்களாக விளங்குதல் வேண்டும். ஆதலின், 'எல்லையில் நூற்கடல் ஏற நோக்கிய' என்றார். மேலும் கவிஞர்கள் என்போருக்கு நற்பண்பு-நல்லொழுக்கம்—நற்குறிக்கோள் என்பன மிகவும் இன்றியமையாதன வாகலின், அவை யனைத்தும் அமையப் பெற்றவர்களே, சிறந்த குற்றமற்ற கவிஞர்கள் எனத் தக்கவர் ஆவர் என்பது, கம்பரின் கருத்து. எனவே, 'நல்லியல் நவையறு கவிஞர்' என்றார். இத்தகைய கவிஞர்களுக்கே,

"எனைவைத்தி எனைவைத்தி எனச்சொற்கள்
இடையிடைநின் றிரந்து வேண்ட,
இனிவைப்பாம் இனிவைப்பாம்....''

என்று கூறக் கூடிய முறையில், அவர் தம் தூய நாவினின்று சீரிய சொற்கள் இடையறாமல் தொடர்ந்து தாமே வெளிப்படும். இவ்வுண்மையினை வலியுறுத்த 'நவையறு கவிஞர் நாவரும் சொல்' என்றார்.

இராமபிரான் போருக்குப் புறப்பட்டு, அம்புப் புட்டிலை எடுத்துத் தம் தோளில் அணிந்து கொண்டார் என்று சொல்லவரும் இடத்தில், இங்ஙனம் கவிஞர் பெருமான் ஆகிய கம்பர், தம் கவியுள்ளத்தின் இயல்பு புலப்படும் வண்ணம், கவிஞர்களின் இயல்பினையும், அவர்களுக்குரிய அளவிலாச் சொல்வளத்தின் நிறைவையும், உவமையாக எடுத்துக் காட்டிப் பாடியிருக்கும் திறம், கழிபேருவகை விளைவிப்பதாகும்.

(8) ஆற்றற் கவிஞரின் அங்கதம்

இராமபிரான் அநுமன் மீது இவர்ந்து போர்க்களம் சென்றார். அரக்கர் எறிந்த படைக்கலங்களை யெல்லாம் வானர வீரர்களின் உடலிற் படாதபடி தடுத்து விலக்கினார். முதல் நாட் போரிலேயே, இராவணன் ஒருவன் மட்டுமே எஞ்சி நிற்க, எதிர்த்து வந்த அரக்கரை யெல்லாம் அழித்தொழித்தார். இராவணனின் வில்லை ஒடித்தார். அவனது தேர் குடை கொடி ஆகிய அனைத்தையும் பொடிப் பொடி ஆக்கினார். தம் அம்பொன்றினால், அவனுடைய மணி முடியையும் இடறிக் கீழே விழுமாறு செய்தார். அதனால் இது காறும் போருக்குச் சென்றால் 'வெல்லும் அவ்வளவு அல்லது தோற்றிலா விறலோன்' ஆகிய இராவணன், செய்வதறியாமல் திகைத்து வெள்கி நின்றான்.

அப்போது இராவணன் எவ்வாறு இருந்தான் தெரியுமா? ஒருவன் எவ்வளவுதான் சிறப்பும் செல்வாக்கும் மிக்கவனாக இருந்தாலும், ஆற்றல் நிறைந்த ஒரு நல்ல பெரிய கவிஞனின் பகைமையை வருவித்துக் கொண்டு, அவனால் அங்கதம் (Satire) என்னும் வசைகவி (Lampoon) யினைப் பாடப் பெறுவான் எனின், அதன் விளைவாகத் தன் சிறப்பும் செல்வாக்குமெல்லாம் அழிந்தொழிந்து போக, எவ்வாறு அவன் இழிவடைந்து தாழ்ந்து வருந்தி நிற்பானோ, அவ்வாறு இராவணனும் இராமபிரானால் மணிமுடியிழந்து இழிதகவுற்று வருந்தி நின்றானாம்.

மாற்ற ருந்தட மணிமுடி
இழந்தவாள் அரக்கன்,
ஏற்றம் எவ்வுலக கத்தினும்
உயர்ந்துளன் எனினும்,
ஆற்றல் நல்நெடுங் கவிஞன்
அங்கதம் உரைப்பப்
போற்ற ரும்புகழ் இழந்தபேர்
ஒருவனும் போன்றான்.

— முதற்போர்புரி படலம், *249.*

இப்பாடலில் கவிஞர்களின் இணையிலா ஆற்றலையும், அவர்களின் அன்பைப் பெறாமற் பகைமையை அடைந்து அங்கதம் பாடப் பெறுபவர்கள் கேடுற்று வருந்துதலையும், கவிஞர்பிரான் ஆகிய கம்பர் குறிப்பிட்டருளியிருத்தல், கருதியுணரற் பாலது. 'வில்ஏர் உழவர் பகைகொளினும் கொள்ளற்க; சொல்ஏர் உழவர் பகை' எனத் தெய்வப் புலவர் திருவள்ளுவர் தாமும் கூறியிருத்தல் காணலாம்.

(9) பல் அலங்காரப் பண்பு :

இராமபிரானால் மணிமுடி இழந்த இராவணன் போர்க்களத்தினின்று, பூதலம் என்னும் நங்கை தன்னை நோக்கி, வெறுங்கையோடு இலங்கை புக்கான். சானகி நகுவள் என்றே அவன்மனம் நாணத்தாற் சாம்பியது. அந்நிலையில் பாட்டனாகிய மாலியவான் இராவணன்பால் வந்து, அவனுக்கு ஆறுதல் கூறி, உற்றது வினவினான். அதுபோது இராவணன் இராமபிரானின் பல்வகை ஆற்றல்களையும் எடுத்துக்கூறி வியந்து பின்வருமாறு புகழ்கின்றான்.

இராமனின் வில்லாற்றலுக்கு இணையே இல்லை. வேதங்கள் உண்மை தவறினாலும், அவனுடைய அம்புகள் தம் குறி தவறமாட்டா. அவைகள்

பல திறப்பட்டன. அவைகள் மேன்மேற் கிளைத்து, ஒன்று பத்து நூறு ஆயிரம் எனப் பெருகிக் கொண்டே செல்லும் இயல்பின. சிறந்த கவிஞர்களின் நாவினின்று தடைப் படாமல் நிரலே இயைந்து வெளிப்படும் பொருள் பொதிந்த சொற்கள் போலவும், அச் சொற் களால் முறையே அமையும் எதுகை மோனை முதலிய தொடை வகைகள் (Rhymes and alliterations) போலவும், அவற்றில் இயைந்து அழகுற அமையும் இசைத்திறங்கள் (Rhythms) போலவும், அவ்விசைத்திறன் அமைந்த செய்யுட் களுக்கு இனிமையூட்டும் பலவகை அணிகள் (Figures of speech) போலவும், இராமபிரானின் வில்லினின்று புறப்படும் அம்புகள் எல்லாம் வியத்தகு செயல்கள் புரிகின்றன. 'ஒப்புவேறு உரைக்க லாவதில்லை. வேதம் தப்பின போதும், அன்னான் தனு உமிழ் சரங்கள் தப்பா' என்கின் றான் இராவணன் !

நல்லியற் கவிஞர் நாவிற்
பொருள்குறித் தமர்ந்த நாமச்
சொல்லெனச், செய்யுள் கொண்ட
தொடைஎனத், தொடையை நோக்கி
எல்லையில் செல்வம் தீரா
இசைஎனப், பழுது இலாத
பல்லலங் காரப் பண்பே
காகுத்தன் பகழி மாதோ.

— கும்பகருணன் வதைப்படலம், 22.

இவ்வினிய பாடலின்கண் கவிஞர்களின் சிறப்பினை 'நல்லியற் கவிஞர்' என்றும்; அவர் தம் நாவினின்று வெளிப்படும் சொல்லின் இயல் பினைப் 'பொருள் குறித்து அமர்ந்த நாமச் சொல்' என்றும்; அச்சொற்களினால் செய்யுளும், செய்யுட் டொடைகளும், செய்யுட்கு அழகுதரும் சிறந்த அணிவகைகளும் அமையும் அருமைப் பாட்டினைப் பல்லலங்காரப் பண்பே என்றும்; கம்பர் குறிப்பிட்டருளியிருத்தல், நினைத்தொறும் மகிழ்ச்சி விளைவிப்பதாகும்.

(10) புலவர் சொற்றுறை :

இலக்குவனுக்கும் கும்பகருணனுக்கும் இடையே போர் நிகழ்கின்றது. கும்பகருணன் தன் தோள்கொட்டி ஆர்ப்பரித்தான். அவ் வார்ப்பரிப்பு கூற்றுவனையும் துணுக்குறச் செய்தது. அவனால் வானரப் படையில் ஓர் பாதியின் மேலும் அன்று தேய்ந்தது. அது கேட்டுச் சினந்து, சுமித்திரை பயந்த சிங்கம் ஆகிய இலக்குவன், அரக்கர்களைச் சென்று தாக்கினான். ஒரு சிலர் கைகள் வெட்டுண்டன. ஒரு சிலர் செவி அறுபட்டனர்; வேறு சிலரின் மூக்குகள் தனித்து விழுந்தன. மற்றும் சிலர் கால்கள் முறிந்தனர். பிறர் சிலருடைய கண்கள் பழுதுற்றன. இங்ஙனம் இலக்குவனின் அம்புகள் பகைவரின் ஒவ்வோர் உறுப்பினையே அறுத் தொழித்தமை, புலவர் பெருமக்கள் சிலர் தமக் குக் கொடுக்கப் பெறும் பொருளின் அளவிற்கு ஏற்றபடி கொடுப்போரைப் புகழ்ந்து செய்யுட்கள் இயற்றி முடித்தலைப் போன்றுவிளங்கியது.

சிலவ ரைக்கரம் ; சிலவ ரைச்செவி ;
சிலர் நாசி ;
சிலவ ரைக்கழல் ; சிலவ ரைக்கண் ;
கொளும் செயலால்
நிலவ ரைத்தரு பொருள்வ ழித்தண்
தமிழ் நிரப்பும்
புலவர் சொற்றுறை புரிந்த வும்போன்
றன சரங்கள்.

— கும்பகருணன் வதைப்படலம், 226.

(11) தமிழ்நெறி வழக்கம் :

இராவணனின் மூலபல சேனைகள் யாவும் போரில் மடிந்தொழிந்து போகின்றன. அதனை அவன் கேள்வியுறுகின்றான். அச்செய்தி உண்மைதானா என்று அறியத் தானே நேரிற் போர்க்களம் காணப் போதருகின்றான். அங்கே அவன் பல துயரம் மிக்க காட்சிகளைக் காண்கின் றான். அவனது கண்களில் இருந்து வருத்தத் தினால் நீர் கொழிக்கின்றது; சீற்றத்தினால் குருதி கொப்பளிக்கின்றது. இராமன் தன் வில்லினின்று பொழிந்த அம்புகளினால் அரக்கர் பல்லாயிரவர் இறந்து கிடத்தலையும், இரத்த வெள்ளம் ஆறு போலப் பெருக் கெடுத்துக் கடலிற் சென்று கலத்தலையும், கடல் அதனையுண்டு உமிழ்ந்து அலைமோதுதலையும், இராவணன் கண்டான்.

குமிழிநீ ரோடும் சோரிக்
கனலொடும் கொழிக்கும் கண்ணான்,
தமிழ்நெறி வழக்கம் அன்ன
தனிச்சிலை வழங்கச் சாய்ந்தார் ;
அமிழ்பெருங் குருதி வெள்ளம்
அற்றுவாய் முகத்தில் தேக்கி
உமிழ்வதே ஒக்கும் வேலை
ஓதம்வந்து, உடற்றக் கண்டான்.

— இராவணன் களங்காண் படலம், 25.

இப்பாடலிற் கம்பர் இராமனின் ஒப்புயர் வற்ற வில்லைத் தனிச்சிலை என்று பாராட்டுகின் றார். அவ்வில்லின் ஒப்புயர்வற்ற தன்மையினை விளக்க, வேறு பிற மொழிகளுக்கு இல்லாத இலக்கண நெறி முறைகளும் (Grammatical refinements), மரபு வழக்குகளும் (Idiomatic usages) ஆகியவற்றை, ஒப்பற்ற நிலையில் பெற்று விளங்கும் ஒப்புயர்வற்ற தமிழ்மொழியின் சிறப்பே, அவ்வில்லுக்கு ஏற்ற உவமையாகும் எனக் கருதி, 'தமிழ்நெறி வழக்கம் அன்ன தனிச்சிலை' எனப் புகழ்ந்து போற்றுகின்றார். கம்பர் தமிழ்ப் பெருங் கவிஞர். தமிழால் உயர்ந் தவர். தமிழை உயர்த்தியவர். தமிழ் மொழி நூற் கடலின் ஆழமெலாம் கண்டு அளந்தறிந்த தமிழ்ப் பெரும் புலவர். தமிழின் அருமை பெருமைகள் அனைத்தையும் தகவுற உணர்ந் தவர். அதனால்தான் அவர்தம் தமிழியற் கவிதை நெஞ்சம், இராமனின் இணையற்ற வில்லுக்கு உவமைகூற வருங்கால், தமிழ்நெறி வழக்கின் தன்னிகரற்ற தன்மையினை எடுத்துக் காட்டி யருள்கின்றது. இதனாற் கம்பரின் கவிதை யுள்ளமும், தமிழுள்ளமும் நமக்கு நன்கினிது விளங்குதல் காணலாம்.

முடிவுரை :

இதுகாறும் கூறிவந்த வாற்றால், கம்பரின் பெருமையும், அவர்தம் கவிதையின் அருமையும், அனைவர்க்கும் புலனாகும். இதுபற்றியே நம் தேசீயகவிஞர் சுப்பிரமணிய பாரதியார்,

யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல்,
வள்ளுவர்போல், இளங்கோ வைப் போல்,
பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை;
உண்மை வெறும் புகழ்ச்சி யில்லை...

எனப் பெருமுழக்கம் புரிந்தருளினார். இத்தகைய பெருங் கவிஞர்பிரான் ஆகிய கம்பர் அருளிய காவியத்தினை, முறைப்படி ஆராய்ந்து கற்றின்புறு தல் நம் அனைவருக்கும் கடமையாகும்.

அணிசெய் காவியம் ஆயிரம் கற்கினும்
ஆழ்ந்தினி திருக்கும் கவியுளம் காண்கிலார்

எனப் பாரதியார் பாடியிருப்பது போன்று, கதைச் சுவை ஒன்று மட்டுமே கருதியன்றி, ஆழ்ந்து இனிதமைந்திருக்கும் கம்பர்தம் கவியுளத்தையும் கண்டு மகிழும் முறையில், நாம் அவர்தம் நூலைக் கற்றல் இன்றியமையாதது. ''நாங்கள் இந்தியாவை இழந்தாலும் இழப்போம்; ஆனால் எங்கள் ஷேக்ஸ்பியரை இழக்க ஒருகாலும் ஒருப்படமாட்டோம்'' (2) எனக் கூறிப், பிற நாட்டார் தம்முடைய நாட்டுக் கவிஞர்களையும், அவர்கள் இயற்றிய நூல்களையும் பெரிதும் மதித் துப் போற்றி வருதலைப் பின்பற்றி, நாமும் கம்பர் போன்ற பெருங்கவிஞர்கள் பலரும் அருளிய நூல்களை ஆராய்ந்து கற்றுப் பயன் அடைந்து, நலம்பெற முற்படுவோமாக!

— ஆசிரியர்.

---

(2) ''Consider now, if they asked us, will you give-up your Indian Empire or your Shakespeare, you English..Really it were a grave question...Indian Empire, or no Indian Empire; we cannot do without Shakespeare. Indian Empire will go, at any rate, some day; but this Shakespeare does not go, he lasts forever with us; we cannot give-up Shakespeare.''

—**Thomas Carlyle ; The Hero As Poet**

திருவானைக்கா, தலவரலாற்றுச் சிற்பம்

திருவானைக்கா அகிலாண்ட நாயகி மாலை

முன்னுரை :

திருவானைக்கா என்பது தேவாரப் பாடல் பெற்ற சோழநாட்டுச் சிவ தலங்களுள் ஒன்று. இதனைப் பஞ்சபூத தலங்களுள் ஒன்று என்றும் பெரியோர் கூறுவர். காஞ்சிபுரம், திருவாரூர் (பிருதிவி), திருவானைக்கா (அப்பு), திருவண்ணாமலை (தேயு), திருக்காளத்தி (வாயு), சிதம்பரம் (ஆகாசம்) ஆகிய ஐந்தும் பஞ்சபூதத் தலங்கள் எனப்படும்.

திருவானைக்கா அப்புத்தலம் எனப்படுவதற்கு ஏற்ப, இக்கோயிலின் கருவறையில் சிவலிங்கத் திருவுருவம் எழுந்தருளியுள்ள இடத்தைச் சுற்றிலும், இடையறாது எப்பொழுதும் நீர் ஊறிக் கொண்டிருத்தல் காணலாம். அதனால் இங்குள்ள பெருமானுக்கு ''நீர்த்திரள் நாதர்'' என்பது பெயர். ''திருவானைக்கா வுளானைச் செழுநீர்த்திரளைச் சென்று ஆடினேனே'' என்பது திருநாவுக்கரசர் திருத்தாண்டகம்.

திருவானைக்கா என்னும் இத்தலத்திலுள்ள அம்பிகைக்கே 'அகிலாண்டநாயகி' என்பது பெயர். இவ்வம்பிகையின் மீது திரிசிரபுரம் மகா வித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்கள் பாடிய சிறந்த கவிதை நூலே, ''திருவானைக்கா அகிலாண்ட நாயகி மாலை'' என்பது. அம்பிகையின் சிறந்த துதிப்பாடல் இலக்கியங்களுள் ஒன்றாக மதித்துப் போற்றத் தகுந்த, இவ்வரிய இனிய நூலின் கவிதைச் சுவைப் பொருள்களை மட்டும், ஈண்டுச் சுருக்கமாகக் கண்டு மகிழ்வோம் :—

நிலவும் வெயிலும் :

அகிலாண்ட நாயகி அணிந்துள்ள மாணிக்கத் தோடுகள், சிறந்த ஒளி வீசித் திகழ்ந்து, புது வெயில் எறிக்கின்றன : அப் பெருமாட்டியின் சிவந்த திருவாயினின்று அரும்பும் புன்முறுவல், அழகிய இனிய ஒளியைத் தோற்றி, இள நிலா எறிக்கின்றது : இங்ஙனம் வெயிலும் நிலவும் ஒருங்கே பரப்பும் அம்பிகையின் சிறந்த தோற்றம், காண்பார் கண்களுக்கு அரிய விருந்தாக அமைந்து திகழ்கின்றது. (1)

கடைக்கண் பார்வை :

அகிலாண்ட நாயகியே ; வட திசையில் உள்ள குபேரனும் நாணும்படி அளவிறந்த செல்வம் பெற்றும், தென்றிசையில் உள்ள பொதிய மலையில் விளங்கும் அகத்தியரும் நாணும்படி சிறந்த கல்வியில் தேர்ந்தும், மிகவும் உயர்ந்த பெருமையுற்றுத் திகழ்பவர்கள் எல்லோரும், நின்னுடைய தாமரை மலர் போன்ற திரு முகத்தின் கடைக்கண் பார்வையருள் முழுவதும் பெற்றவர்களே யன்றோ! (2)

அம்மி மிதித்தல் :

அகிலாண்ட நாயகியே! திருமணக் காலத்தில் சிவபெருமான் தம் திருக்கையால் எடுத்து அம்மியாகிய கல்லின் மீது வைத்த நின் திருவடிகள், என்னுடைய கைகளுக்கும் எளிவந்து, என்னுடையமனம் ஆகிய கல்லின் மீதும் எழுந்தருளித் தங்கும் என நினைந்து, உன்னை யான் பலகாலும் துதிக்கின்றேன். (3)

துணை அழைத்துவா :

அடியவன் ஆகிய என்னை, மிகவும் கொடியவன் என்று நினைத்துக் கொண்டு, என் முன் வந்து

அருள் புரிவதற்கு நீ அஞ்சுகின்ருய் எனில், முன்னொரு காலத்தில் கொடிய கூற்றுவனை யுதைத்த நின் கணவரைத் துணையாக அழைத்துக் கொண்டேனும் வந்து, நீ எனக்கு அருள்புரிவாயாக! (4)

மாபாதகனுக்கு அருளிய மாட்சி :

"நீ மிகவும் பாவி! உன் முன்னே வருவதும் வந்து அருள் புரிவதும், என்னுடைய இயல்புக்குச் சிறிதும் தகாது" என்று நீ கூறுவையே யானுல், மதுரையில் முன்னே ஒரு காலத்தில் மாபாதகம் செய்த ஒருவனுக்கு, அருள் புரியும் பொருட்டுச் சிவபிரானேடு எழுந்தருளிப் போந்த அருட் குணம் உடையவள் அல்லவோ நீ! அதனை நீ மறந்து விட்டாயோ? (5)

ஞானப்பால் ஈந்த புகழ் :

முன்பு ஒரு காலத்தில் சிவபெருமான் பணித்தருளியவாறு, புகலி (சீர்காழி) யில் தோன்றிய குழந்தையாகிய திருஞான சம்பந்தர்க்கு ஞானப்பால் அளித்தாய்! அதனுல் ஏற்பட்ட புகழ் நினக்கே முழுவதும் உரியதாகாமல், சிவபிரானுக்கும் உரியதாயிற்று. என்னைத் தொண்டு கொண்டு, எனக்கு நீ அங்ஙனம் அளிப்பாயானுல், நினக்கே முழுப் புகழும் உண்டாகும். (6)

பித்தன் எனும் பெயர் :

திருவானைக்கா அகிலாண்ட நாயகியே! ஆன்மாக்கள் செய்யும் அளவற்ற பிழைகளையும் பொறுத் தருள்பவள் நீ! அத்தகைய நின்னைச் சிவபிரான் தன் அழகிய திருமேனியில் பாதியளவில் மட்டுமே வைத்தான். ஆனுல் மூன்று பிழைகள் மட்டுமே பொறுக்கும் இயல்புடைய, தண்ணீர் ஆகிய கங்காதேவியைத் தன் தலையிலுள்ள சடை முடிமேல் தூக்கி வைத்துக் கொண்டான். இதனுல் தான் சிவபிரான் 'பித்தன்' என்ற ஒரு பெயரைப் பெற்ருன் போலும்! (7)

அங்குசமும் பாசமும் :

அகிலாண்ட நாயகியே! நின்னுடைய திருக்கைகளில் அங்குசம்—பாசம் என்னும் இரு கருவிகளையும் நீ வைத்துக் கொண்டிருக்கின்ருய். அதற்குக் காரணம் யாதோ? நின்னுடைய கணவர் ஆகிய பிரணவகுஞ்சரம் (சிவபெருமான் ஆகிய யானை), நின் கையிலுள்ள வில்லாகிய கரும்பை விரும்பி, வலிமையினுற் கவர்ந்து கொள்ளுதல் கூடும் என்று கருதியே, நீ அவற்றை நின் திருக்கையில் ஏந்தியிருக்கின்றனை போலும்! (8)

இழப்பு :

யான் எனது என்னும் செருக்கினை இழந்தவர்கள், நின்னை ஒரு போதும் இழக்கமாட்டார்கள். இஃது உண்மை தான் என்று மறைகள் முழங்குகின்றன. முழங்கினும், அதனையுணர்ந்து கொள்ளாத சழக்கன் ஆகிய யான், நின்னை இழந்து, (யான் எனது என்னும் செருக்கினை இழக்க விரும்பாமல்), உழன்று கொண்டிருக்கின்றேன். என்னுடைய தீ வினைக்கும் ஓர் இறுதியுண்டோ? (9)

நினக்கே அடைக்கலம் :

கண்ணப்பர் கண்ணைப் பெயர்த்து அப்பியும், சிறுத் தொண்டர் குழந்தையை அரிந்து உணவு சமைத்தும், சண்டேசுரர் தம் தந்தையின் கால்களை வெட்டியும் வழிபட்டது போல, மற்றும் பற்பல செயற்கருஞ் செயல்களைச் செய்து வழிபடுபவர்களுக்கே, நின் கொழுநன் ஆகிய சிவ பெருமான் அருள் புரிவார். எளியேனுல் அத்தகைய செயல்களைச் செய்ய ஒரு சிறிதும் இயலாது. அதனுல், யான் அவரை விட்டு விட்டு, நின்னையே அன்புடன் அடைக்கலமாக வந்து புகுந்தேன். என்னைக் காப்பாற்றுவது நின் கடமையே ஆகும். (10)

மருதநிலமும் உவர்நிலமும் :

அகிலாண்ட நாயகியே! 'வழிபடும் அடியார்களுக்கு மட்டுமே, யான் திருவருள் புரிவேன். வழிபடாமற் பழிபடும் தீவினையாளருக்கு, யான் அருள் வழங்குதல் இல்லை' என்று கூறி, நீ என்னை வெறுத்து ஒதுக்கி விட வேண்டா! மேகமானது விளைந்து பயன்படும் நல்ல மருத நிலத்தில் மட்டுமே பெய்வதில்லை. பயன்படாத உவர் நிலத்திலும் கூட, மேகம் மழை பொழிகின்றதன்ருே? (11)

சிபாரிசு செய்யும் திறம் :

'கொடியவன் ஆகிய இவனுக்கும் அருள் புரிந்தருள்க' என்று நின் கொழுநன் ஆகிய சிவ

பெருமானுக்கு என்னைக் குறித்துப் பரிவுரை (சிபாரிசு) கூற, நீ நின் அளவில்லாத அருள் காரணமாக எண்ணுவாயானால், ஒன்று செய்தருள்க. சிவபெருமான் நின்னுடைய ஊடலைப் போக்குவதற்காக, நின் திருவடிகளில் விழுந்து வணங்க முற்படும் பொழுதே, என்னைப் பற்றி நீ அவரிடம் பரிவுரை கூறியருளுதல் வேண்டும். அது தான் உடனே பலித்து நிறைவேறும். (12)

[" மனைவி உயர்வும் கிழவோன் பணிவும், நினையுங் காலைப் புலவியுள் உரிய " என்னும் தொல்காப்பியச் சூத்திரம், ஈண்டு அறிந்து இன்புறற்பாலது.]

முத்தொழிற்கும் மூலம் :

அகிலாண்ட நாயகியே! சிருக்கு (நெய்த் துடுப்பு), செபமாலை, சங்கு, சக்கரம், சூலம், வேல் முதலிய படைகள் பலவற்றையும் நீ ஏந்திக் கொண்டிருக்கும் இயல்பினால், பிரமன் திருமால் உருத்திரன் ஆகிய மும்மூர்த்திகளும் செய்கின்ற மூவகைத் தொழில்களுக்கும், மூலம் நீயே என்பதனை, யான் அறிந்து கொண்டேன். (13)

தாய் தந்தை மனைவிமகன் சுற்றத்தினர் என்பவரைக் கொன்று அடைந்தவர்க்கே நின் கணவன் அருள் செய்வான்; ஆனால் நீயோ நின் திருவடியை அடைந்தவர்களுக்கு எல்லாம் விருப்பத்தோடு அருள்புரிவாய் என்பதை உணர்ந்து, யான் நின்னை அடைந்தேன்.

(இங்ஙனம் கொலை செய்தோர் முறையே பரசுராமர், சண்டேசர், செருத்துணையார், சிறுத்தொண்டர், கோட்புலியார் என்பவராவர்.) (14)

தண்டப் படை :

குற்றியை (வரப்பை) அடைந்த பசும் புல்லை, உழுபவர்களின் கொடிய நாஞ்சிற்படை (கலப்பை) என்ன செய்யமுடியும்? அதுபோல நினையே புகலிடமாக அடைக்கலம் புகுந்த என்னைக் கூற்றுவன் பற்றிய தண்டாயுதம் ஆகிய படை யாது செய்ய இயலும்?

[தண்டம் (படை), தண்டம் (பயனற்றது) என்பது கருத்து. இஃது ஒருவகைச் சொல்லாட்சி நயம்(Pun) எனப்படும்.] (15)

நீர்த்திரள்நாதர் அச்சம் :

அகிலாண்ட நாயகியே! நீருருவாய் விளங்கும் திருவானைக்காச் சிவபெருமான், நீருருவாகிய கங்கை என்னும் ஒரு பெண்ணை, அயனும் அறிய முடியாத சடைக்காட்டிலே மறைத்து வைத்திருக்கின்றான். அது நினக்கு அஞ்சியே போலும்! இல்லையேல், நினக்குக் கொடுத்த பாதியிடம் போக மற்றுப் பிறிதொரு பாகம் எஞ்சி இருக்கின்றதே! அதனை அவளுக்கு இடமாகக் கொடுத்திருக்கலாம் அன்றோ! (17)

தலை அடி சூட்டல் :

இமயமலையின் அடியிலே உதித்து வளர்ந்து, வெண்ணாவல் மரத்தின் அடியில் வாழ்பவர் (சம்பு கேசுவரர்) ஆகிய பெருமானை மணந்து கொண்ட அகிலாண்ட நாயகியே! அலையின் தன்மையைப் பொருந்தி, மனமானது ஒரு நிலையில் நில்லாமல் அலைந்து திரியும் அடியவன் ஆகிய என்பால் இரக்கம் கொண்டு, என் புல்லிய தலையின் மேல் நின் திருவடி மலரைப் பதியவைத்து, 'பிடி அடி' என்று கூறி வெருட்டுபவன் ஆகிய இயமன், என்னைத் தன் தடியினால் அடித்து வருத்தாமல், அவனிடமிருந்து என்னை விலக்கிக் காப்பாற்றி ஆட்கொண்டருள்வாயாக! (18)

தாய் மருந்துண்டல் :

'இருவினையாகிய கயிற்றால் கட்டுண்டு உழல்கின்ற கொடியவன் ஆகிய இவனுக்கும் அருள் புரிந்தருள்க' என்று என்மீது இரக்கம் கொண்டு, நின் கணவருக்கு வற்புறுத்திக் கூறுக. இங்ஙனம் கூறுதலில் நீ வருத்தம் (சிரமம்) கருதற்க. அது நின்னுடைய அருட்பண்புக்கு அமையாது. குழந்தை அடைகின்ற நோய்களுக்குத் தாயைத் தவிர, மருந்து உண்பவர்கள் வேறு யார் இருத்தல் இயலும்!

[" பாலுண் குழவி பசுங்குடர் பொறுதென, நோயுண் மருந்து தாயுண்டாங்கு " எனவரும் குமரகுருபரர் திருமொழியை, ஈண்டு நினைவு கூர்ந்து இன்புறுதல் தகும்.] (19)

அழகிய செயல் :

எடுப்பது பிச்சை, ஏந்துவது ஓடு, இயக்குவது காளை மாடு, உடுப்பது புல்லிய தோல் எனக் கொண்டுள்ள, வறுமை மிக்க ஒருவர்க்கு மனைவியாய் வாழ்க்கைப்பட்டுள்ள நீ, உலகிலுள்ள உயிர்களெல்லாம் வாழுமாறு முப்பத்திரண்டு அறங்களையும் வளர்த்தருள்கின்றாய்! இது மிகவும் வியக்கத்தக்க அழகிய செயலேயாகும். (20)

சகோரமும் காகமும் :

அகிலாண்ட நாயகியே! முற்பிறவிகளில் தவம் புரிந்து, மலம் முழுவதும் போக்கிக் கொண்ட மோன மெய்ஞ்ஞானியர்களைத் தவிர,

மற்றையோர் நின் அருளைப் பெறுதல் இயலுமோ? வானத்தில் உதிக்கும் சந்திரனின் நிலவு ஒளியைச் சகோரப் பறவை தான், கவர்ந்துண்டு களிக்க முடியுமே யன்றி, காகம் அதனையுண்டு களித்தல் இயலுமோ (21)

ஓதிமமும் குரண்டமும் :

தொண்டு செய்தலை விரும்பி, மனம் முதலிய கருவிகள் அனைத்தையும் நின் திருவடிகளிலேயே செலுத்திவரும் தூயவர்களே யன்றி, மற்றை யோரும் தேவர் முதலியவர்களும் கூட, நின் திரு வடிகளை அடையப் பெறுவார்களோ? அளவற்ற சிறப்பினையுடைய கங்கை யாற்றினை, ஓதிமம் (அன்னம்) அடைய முடியுமே யன்றி, மற்றைக் குரண்டம் (காகம்) அடையக் கூடுமோ? (22)

குயிலும் அரிட்டமும் :

இடையறாத பேரன்பினால் உண்மையுணர்வு கொண்டு நின்னைத் துதிப்பவர்களின் இனிய துதி களின் முன்னே, உடம்பின் நிழல் போலச் சிறிதும் விட்டுப் பிரியாமல் வினைகள் தொடரப் பெறும் பாவியேன் ஆகிய யான், அன்பு இன்றிப் பொய்யுணர்வு கொண்டு துதிக்கும் புல்லிய துதிகள், தேமாஞ் சோலைகளில் வாழ்ந்துபாடி மகிழும் குயில்களின் இனிய குரலின் முன்னே, வெறுப்பினை விளைவிக்கும் வகையில் மிகவும் இன்னாததாக, அரிட்டம் (கழுதை) கதறிக் கத்து தலுக்கே ஒப்பாகும். (23)

கருப்பஞ்சாறு :

வேதங்களெல்லாம் துதிக்கும் நின்னுடைய சிறந்த புகழை வழுத்திய பெரியோர்களின் நாக்குகள், பிற புல்லிய தெய்வங்களின் புகழையும் கூற முற்படுமோ? இனிமை நிறைந்த கருப்பஞ் சாற்றை விரும்பி யுண்ட நாக்கானது மிகவும் கச ப்புவாய்ந்த நிம்பநெய் (வேப்ப எண்ணெய்) யை யும் விரும்புதல் கூடுமோ? (24)

கோயில் புகாதவர்கள் :

அகிலாண்ட நாயகியே! நின் திருக்கோயில் புகாதவர்களே, வீடு தோறும் பிச்சைக்குப் புகு வார்கள். எமன் உலகில் நரகம் புகுவார்கள்! எத்தனையோ பல பிறவிகளை எடுக்கக் கருக்குழி களில் புகுவார்கள். இத்தகைய தீவினையாளர்கள் புகாத நின்னுடைய கோயிலில், ஏழையேன் புகு ந்து நின்னைத் தினமும் வணங்க அருள் புரிவா யாக! (25)

பரிசன வேதி :

நினைக்கவும் கூடாத பல கொடிய பாதகங் களை எல்லாம் செய்கின்ற பாதகன் நான்! என்று லும் நினது திருவருளிற் கலந்தால், யான் தூய்மை பெறுதல் அரியதோ? செய்யத் தகாத கொலையைச் செய்கின்ற வாள், இரும்புக் கருவி தான் எனினும், பரிசனவேதி தீண்டுமாயின், அது பொன்னாக மாறுதல் திண்ணமே யன்றோ?

[பரிசனவேதி—இழிந்த உலோகங்களை உயர்ந்த பொன்னாக மாற்றுவது) The Alchemist's Stone). இதனை 'இரசகுளிகை எனவும் கூறுவர். சித்தியார்சுபக்கம், 314 : 319] (26)

என் செயல் யாது?

முழுவதுமே குணத்தை ஆராய்ந்தால், ஆட் கொள்ளல் இயலாது. திருமால் முதலியவர்களிடத் திலும் நீ கலந்து உணர்த்தாவிடில், அவர்கள் ஒன்றை உணர்வரோ? இறைவன்பால் அவர்கள் புரிந்த குற்றங்கள் எண்ணில்லாதவை. அவர் களே குற்றம் புரிவராயின், ஒன்றும் போதா நாயேனின் செயல் எத்தகையதாக இருக்கும் என்று கூற வொண்ணுமோ? (27)

அழத் தெரியாத குழந்தை

'அழுத பிள்ளை பால் குடிக்கும்' என்பது உலகில் வழங்கும் பழமொழி. அதற்கேற்ப, நீ சீர்காழிக் குழந்தை அழுதபோது இனிய முலைப் பாலை அளித்தாய்! குழந்தை அழாவிட்டாலும் கூட, இரக்கம் கொண்டு பால் தரும் தாய்மார்கள் உலகத்தில் இருக்கின்றார்கள் அல்லரோ? யான் அழத் தெரியாத சிறு குழந்தையைப் போன் றவன். எளியேற்கும் நீ அருள் செய்தல் வேண்டும். (28)

யாருக்குப் புகழ்

அழுத குழந்தை ஒன்றுக்கு (உபமன்னிய முனிவர்க்கு), அம்பலத்தில் ஆடுகின்ற பெருமான் முன்பு ஒரு முறை இனிய பால் அளித்தான். பசித்து அழுத இளங்குழந்தை ஒன்றுக்கு (திரு ஞான சம்பந்தர்க்கு), நீயும் முன்பு ஒரு முறை பால் அளித்தாய்! இங்ஙனம் நீவிர் இருவருமே இரு குழந்தைகளுக்கு இனிய பாலை அளித்திருக் கின்றீர்! எனினும், நினக்குக் கிடைத்த புகழ் போல, இறைவனுக்குப் புகழ் ஏற்பட்டிருக் கின்றதா? கூறுவாயாக. (29)

["பாலுக்குப் பால்கன் வேண்டி அழுதிடப் பாற்கடல் ஈந்த பிரான்" எனவரும் திருப்பல்லாண்டுப் பாடல் ஈண்டு நினைவு கூர்தற்குரியது.]

எது சிறந்தது

இடையறாத அன்பு பெருக நீ பூசை செய்ததலால், இனிது உளம் உவந்து சிவபெருமான் எழுந்தருளி விளங்கும் குளிர்ந்த நிழலையுடைய வெண் நாவல் மரமோ? அல்லது தேவர்கள் உறைதரப் பெற்ற கற்பக மரமோ? இரண்டினுள் எது சிறந்தது என்று கூறியருள்க. (30)

பிறைச் சுவடு :

சிவபிரானின் திருமுடியில் சிறிய பிறைக் கொழுந்து வீற்றிருக்கின்றது. அதனால் தேவ தேவராகிய அவர்தம் திருமுடியின் மேல் அவ் இளம்பிறையின் சுவடு காணப்படும். அது கண்டு யாருக்கும் ஐயம் ஏற்படாது. அத்தகைய சுவடு வேறு எவரிடத்தும் காணப்படாது. அங்ஙனமாக வேதங்களுக்கும் எட்டாத நின்னுடைய திருவடியிலும், அவ் இளம்பிறையின் சுவடு காணப்படுதற்குக் காரணம் யாது? மறையாமலும் சினவாமலும் எனக்குக் கூறி அருளுக.

[ஊடலில், சிவபிரான் தமது திருமுடி தோய அம்பிகையின் திருவடிகளில் வீழ்ந்து பணிதலால், அவர்தம் திருமுடியில் உள்ள பிறையின் சுவடு, அம்பிகையின் பாதங்களிலும் காணப்படுகின்றது என்பது குறிப்பு.] (31)

பாதியே கவர்ந்தாய்

மலரம்புகளை ஏவிய மன்மதனின் உடலை எரிக்கு உணவாகும்படி செய்த சிவபெருமானின் உடம்பில் முழுவதையும் கவராமல் பாதியை மட்டுமே நீ கவர்ந்து கொண்டாய். முழுவதையும் கவர்ந்து கொண்டிருந்தால், எல்லாப் பொருள்களின் உள்ளும் பரவி வியாப்பியப் பொருளாக அவன் மறைந்திருத்தலினால், உனது பெருமையை ஒருவரும் உணர முடியாமற் போயிருக்கும். அதற்காகத்தான் யாவரும் நின் பெருமையை உணரும்படி சிவபெருமானின் திருமேனியில் பாதியை மட்டுமே நீ கவர்ந்தாய் போலும்! (32)

காடுபுக்க காரணம்

திருமால் முன்பு ஒருகால் மோகினி வடிவம் எடுத்தார்; தவ வலிமையுடையோர் (தாருகவன முனிவர்கள்) பலரையும் மயக்கினார்; ஆனால், சடை முடியையுடைய சிவபெருமான் முன்னே மயங்கினார்; அம்மயக்கத்தில் அவரைப் புணர்ந்து ஐயனார் என்னும் குழந்தையையும் பெற்றார். ஆயினும் அவர் தனித்துக் காடுபுக்கு வாழ்தலின் காரணம் யாது? தான் காதலித்தவரின் உடலிற் பாதியை நீ கவர்ந்து கொண்டாய் என்பதுதான் போலும்!

[" மாயோன் மேய காடுறை புலகம் " என்னும் தொல்காப்பிய நூற்பாவும், " அங்கண் முல்லையின் தெய்வம் என்று அருந்தமிழ் கூறும் செங்கண்மால் " எனவரும் சேக்கிழார் திருமொழியும் ஈண்டுக் கருதற்பாலன] (33)

வேறு அலேம் :

சிவபெருமான் நின்னைப் போலவும், நீ சிவபெருமானைப் போலவும், ஆண்டில் சிவராத்திரியாகிய ஒரு நாளில் விளங்கப் பெறுதல், சிவமும் சக்தியுமாகிய யாம் இருவரும் எமக்குள் வேறுபாடு உடையோம் அல்லோம் என்னும் உண்மையினை உலகுயிர்களாகிய குழந்தைகளுக்குத் தெரிவிக்கும் அருளினாலேயே போலும் (34)

எறும்பின் வளை

அகிலாண்ட நாயகியே! 'நம்முடைய கருணையானது சிறந்த தவமுடையவர்களிடத்தில் மட்டுமே பெருகிப் பரவும்; புன்மை (இழிந்த) இயல்பு உடையவர்களிடம் சென்று கலவாது' என்று கூறி, என்னை நீ புறக்கணித்தல் வேண்டா. பொங்கி எழுந்து பெருகி ஓடிவரும் வெள்ளமானது, மிகப் பெரிய கடலில் மட்டுமேயன்றி, மிகவும் சிறிய ஓர் எறும்பின் வளையினுள்ளும் சென்று புகுந்து ஓடிக் கலக்கின்றது அன்றோ! (35)

பித்தன் என்று எண்ணேல்

விடை ஊர்தியை உடைய சிவபெருமான், தனது சடையாகிய காட்டில் வாழ்கின்ற கங்கையாகிய தன் காதலி, தனியாக இருத்தல் இயலுமோ? என்று எண்ணி, அவள் உயிர்வாழ்தற் பொருட்டே, மனைவியாகிய நினக்குரிய கொன்றை மாலையைத் தன் சடைமுடியில் சூடிக் கொண்டான். அன்னப் பெடையைப் போன்ற நடையை உடைய அகிலாண்ட நாயகியே, இவ்வுண்மை உணராது நீ அவனைப் பித்தனென்று எண்ணிக் கொண்டிருத்தல், பெரிய பிழையே ஆகும். (36)

உலகுயிர்க்குத் தாய்

உலகத்தில் உள்ள உயிர்களை எல்லாம் குழந்தைகளாய்ப் பெற்றெடுத்து அவைகளுக்கு ஒரு துன்பமும் வராமல் கருணையினால் வளர்த்து

வருகின்ற நீ, மலைமகள் எனும்படி மலையரை யனுக்கு மகளாகத் தோன்றிப், புறவு கிளி மயில் பூவை ஆகிய பறவைகளை முன்பு விரும்பி வளர்த்த தன்மை என்னே ! (37)

காமாட்சி

திருமாலின் மார்பில் விளங்கும் திருமகளும், பிரமனின் நாவில் இருக்கும் கலைமகளும், சூரியன் தோன்றுதலால் கட்டு அவிழ்கின்ற தாமரை மலரின் மீது அமர்ந்து வாழ்வதாக, உலக மக்கள் கூறுவர். நின்னுடைய முகமாகிய தாமரை மலரி லேயே அவ் இருவரும் வாழ்கின்றனர்கள் என் பதனை, இவ்வுலக மக்கள் உணரவில்லை. இவர் களின் அறியாமை நிலையை யான் என்னென்று கூறுவேன் !

[அம்பிகையின் வலக்கண்ணுகைத் திருமகளும், இடக் கண்ணுகைக் கலைமகளும் விளங்குகின்றனர் என்பது குறிப்பு. திருமகளையும் கலைமகளையும் தனக்கு இருகண்களாகக் கொண் டிருத்தல் பற்றியே, அம்பிகைக்குக் காமாட்சி என்பது பெய ராயிற்று, கா-கலைமகள் ; மா-திருமகள், அட்சம்-கண் ; அட்சி-கண்ணுகை உடையவள். காமாட்சி ஆகிய அம்பிகையை வழிபடுவோர், கல்வியும் செல்வமும் நிரம்பப் பெறுவர் என்பது கருத்து.] (38)

திருமகளும் கலைமகளும்

மலர்மாது பூமாது என்னும் பெயர்களால் சிலர் திருமகளையும் கலைமகளையும் குறிப்பர். ஏனெனில், திருமகளும் கலைமகளும் தாமரையால் தாங்கப்படுபவர் எனப் பொருள் கூறுவர். இங் ஙனம் மூன்றும்வேற்றுமை உருபும், 'படு' எனும் செயப்பாட்டு வினை உறுப்புச் சொல்லும் விரித்துப் பொருள் கொண்டால்தான், திருமகளும் கலைமக ளும் அங்ஙனம் குறிக்கப் பெறுவர்.

பழவினை :

அகிலாண்ட நாயகியே ! நாயினேன் நின்னை இடைவிடாது பாடித் துதிக்கின்றேன். ஆயினும் என்னுடைய பழவினைகள் சிறிதும் ஒழியாமைக்கு உரிய காரணம் யாது ? அறிவோடு அன்றி அறியாமையினுல் பாடித் துதித்தலினுல் எனது பழவினைகள் ஒழியவில்லை எனின், அஃது எவ்வாறு பொருந்தும் ? நெருப்பை நினைத்தோ மறந்தோ தொட்டாலும், அது தவருமல் சுடத் தானே செய்யும் ! அதுபோல, யான் அறிவு முதிர்ந்தோ அல்லது அறியாமை மிகுந்தோ நின்னைத் துதித்தாலும், என் பழவினைகள் நீங்கி விடுதல் வேண்டுமல்லவா ? (40)

சொற்கள்

அழகிய கையில் ஏந்தியுள்ள கிளியின் சொற்களையும், ஆறு திருமுகங்களை உடைய முருகனுகிய குழந்தையின் மழலை மொழிகளையும், சங்கக் குழையணிந்த சிவபிரான் நின் ஊடல் தணியும்படி கூறுகின்ற இனிய பணிமொழிகளை யும், கேட்டு மகிழ்கின்ற நின் செவிகளுக்கு, நாயினேனது புன் சொற்கள் ஒரு பொருட் டாமோ ? அப்புல்லிய சொற்களைக் கேட்டு, என்பால் நீ இரக்கங் கொள்வது எங்ஙனம்? (41)

ஞாயிறு எங்கு எழில் என் :

அகிலாண்ட நாயகியே! என் செவிகள் ஒப்பில்லாத நின்னுடைய புகழையே கேட்பன வாக. கண்கள் நின் சிறந்த திருவுருவினையே காண்பனவாக வாய் நின்னையே புகழ்ந்து பாடுவதாக. கைகள் நின் திருவடித் தொண்டி னையே செய்வன வாகுக. இந்நிலை எனக்கு வாய்த்து விட்டால், பின்னர் எனக்குச் சூரியன் எத்திசையில் தோன்றினுல்தான் என்னே ? (42)

திருவைந் தெழுத்து

அம்மையே! திருவைந் தெழுத்தை ஓதுகின்ற முறைகள் ஒன்றில், முன்னேயுள்ள மூன்று எழுத்துக்களுள், சிவபெருமானுக்கும் எனக்கும் நடுவே நீ எழுந்தருளி விளங்குகின்ருய். அதனுல் பின்னுள்ள இரண்டு தீமைகளினின்று நீக்கி, நின் கணவராகிய சிவபெருமானேடு என்னைச் சேர்ப் பிக்கும் ஆற்றல், நினக்கே அன்றி வேறு யார்க்கு உளதாகும்.

[திருவைந்தெழுத்தை ஓதும் முறைகளுள் ஒன்று' நமசிவய என்பது. இதன்கண் முன்னேயுள்ள மூன்று என்பது 'சிவய' என்பது. இம் மூன்றினுள் சி சிவத்தையும், வ அம்பிகையையும், ய உயிரையும் குறிக்கும். ஆதலின். 'சிறியேற்கும் பதிக்கும் நீ நடுவிற் பொலிகின்ருய்' என்ருர். பின் தீதுறும் இரண்டு என்றது, நம என்பன. இவை முறையே மறைப்பாற்றலையும், மலத்தையும் குறிக்கும். சிவத்தோடு உயிரைக் கொண்டுபோய்ச் சேர்ப்பிப்பது திருவருளே யாதலின், அம்பிகையை 'நின் பதியோடும் எனை ஒன்ருக் கும் திறன் நினக்கு அன்றி யார்க்கு உளது ? ' என்ருர்.] (43)

நீ வியாப்பியமா ?

வேதத்தைச் சிவபெருமான் கோவணமாகக் கொண்டான் ; நீ மேகலையாகக் கொண்டாய் ; அவன் மாதேவன் ; நீயோ மாதேவி. இவ்வாற் ருல் நீவிர் இருவருமே சமநிலையினர் ஆவீர் ! இங்ஙனமாகவும், சிவபெருமானுக்குள்ளே

அடங்கி, நீ வியாப்பியப் பொருளாக இருக்கின்றாய் என்று, சிலர் சொல்வது எங்ஙனம் பொருந்தும்? (44)

தேவொடு மாறுளாய் கொல்லோ!

நின் கொழுநன் ஆகிய சிவபெருமான், அரி (திருமால்) தொடருகின்ற மலர்போன்ற திருவடிகளை யுடையவன்; அன்னம் (பிரமன்) தொடருகின்ற சடை முடியை யுடையவன்; ஆனால் நீயோ, அரி (வண்டுகள்) தொடரும் தலைமுடியையும், நடையழகு கண்டு மகிழ்ந்து அன்னங்கள் தொடரும் மெல்லிய பாதங்களையும் கொண்டுள்ளாய்! ஈது என்? நீ நின் கணவருடன் ஏதேனும் மனமாறுபாடு கொண்டுள்ளனையோ? (45)

அம்மையின் திறமை:

அம்மையே! திரிபுரம் எரித்த காலத்தில், சிவபெருமான், மேருமலை ஆகிய நின் தந்தையை வில்லாக வளைத்தான். அவ்வீரப் பெருஞ்செயலை யுணர்ந்து, நீ நின் முலையாகிய மலையால் தழுவிக் குழையும் படி செய்து, சிவ பெருமானை வென்று, மேரு மலையாகிய தந்தையின் உள்ளம் மகிழும்படி செய்துவிட்டாய்! நின் திறமை புகலுதற்கு அடங்குமோ? (46)

வன்னி:

வேத முதல்வன் ஆகிய சிவபெருமானைப் போல, நீயும் உன்னுடைய மலர்போன்ற திருக்கையில் வன்னி ஏந்தினாய்; அவனது திறமையும், நின்னுடைய திறமையும், ஒரு தன்மையிலேயே உள்ளன. ஆயினும், அவன் ஏந்தியிருப்பது ஏழு நாக்குகளை யுடையது; எனினும் அவை பேசுந் தன்மையன அல்ல. நீ ஏந்தியிருப்பதோ, ஒரேயொரு நாக்கு மட்டுமே யுடையது; எனினும் செவிக்கினிய சொற்களைப் பேச வல்லது! இவ்விரண்டினுள் எது சிறந்ததென்று நீ கூறியருள்க.

[வன்னி என்பது, முறையே நெருப்பையும், கிளியையும் குறிக்கும். சிவபிரான் தன் கையில் நெருப்பை ஏந்தியுள்ளான். அம்பிகை கிளியை ஏந்தி யுள்ளாள். நெருப்பு ஆகிய அக்கினித் தேவன் ஏழு நாக்குகளை யுடையவன் என்பது கவி மரபு.] (47)

உணராத் தன்மை:

சூரியன் மேற்குக் கடலில் மறையும்; சந்திரன் கிழக்குக் கடலில் உதிக்கும் என்று உலக மக்கள் கூறுவர். நின்னுடைய ஒரு கையிலுள்ள தாமரையில் சூரியன் மறைவான்; நின்னுடைய கணவர் ஆகிய சிவபெருமானின் திருமுகத்திற் சந்திரன் உதிப்பான் என்று, உலக மக்கள் உணர்ந்து கொள்ளாத தன்மை என்னே? (48)

நீயும் செய்க!

வெண்நாவல் மரத்தின் கீழ் எழுந்தருளியுள்ள நின் கணவர் ஆகிய சிவபெருமான், பெரிய வழக்குத் தொடுத்து, நீதி மன்றத்தில் ஏறி, நிரம்பவும் விவாதம் செய்து, திருநாவலூரில் தோன்றிய சுந்தரமூர்த்தி சுவாமிகளை ஆட்கொண்டார். நீயும் அருள்கூர்ந்து, அங்ஙனம் ஒரு செயலைச் செய்து என்னை ஆட்கொண்டால் நலமாக இருக்கும் என்று யான் நினைக்கின்றேன். (49)

மாயோன் அல்லேன்:

மிகுந்த புகழை உடைய நின் கணவராகிய சிவபெருமானின் திருவடிகளுக்கு வழிபாடு புரிவதாலும், ஒரு மலர் குறைந்தாலும், அதற்கு ஈடாகக் கண்ணை இடந்து அப்புதல் வேண்டும். அங்ஙனம் செய்வதற்கு யான் திருமால் அல்லேன் ஆதலின், நின்னுடைய திருவடிகளையே அருச்சித்து வழிபடுவதற்காக யான் நின்னை அடைந்தேன்.

ஈது என்னே!

அறம் என்று சொல்லப் பெறும் அளி(வண்டு) அமர்கின்ற நின்கையானது தாமரை மலர்போன்றதாகும். நின் செங்கை ஆகிய தாமரைப் பூவின் மலர்ச்சியை மாற்றி விடும் என்று உலக மக்கள் கூறுவர். இங்ஙனம் கூறுவது என்னே.

[சந்திரன் தோன்றினால் தாமரை குவியும். இது இயற்கை நிகழ்ச்சி. இதனை ஆசிரியர் தம் கற்பனையின் மாட்சிமையால் மாற்றிப் பாடி மகிழ்விக்கின்றார். அம்பிகையின் செங்கை தாமரை மலர் போன்றது என்றும், அதனது மலர்ச்சி அழகு கண்டு சந்திரன் ஒளிமழுங்குகின்றான் என்றும், ஆசிரியர் செய்துள்ள கற்பனைத்திறம் போற்றற்பாலது.] (51)

ஆற்றுதல் தகாது:

ஓவியம் போலும் அழகிய திருவுருவை உடைய அகிலாண்ட நாயகியே! நீ விளையாட்டாக நின் கணவரின் திருமுகத்தில் உள்ள கண்களைக் கையால் அணைத்து மறைக்கும் காலம் நினக்கு ஒரு சிறு கணத்தின் கூறே ஆயினும், அது தேவர் முதலிய பல உயிர்களுக்கும் எத்த

ணையோ பல கோடி யுகங்கள் ஆகிவிடும். அதனால் நீ அவருடன் அங்ஙனம் விளையாடுதல் தகுதியன்று.

[சிவபிரானுக்கு ஞாயிறு திங்கள் தீ என்னும் முச்சுடர்களுமே கண்களாக விளங்குதலின், அம்பிகை அக்கண்களை ஒரு சிறு கண நேரம் மூடி விளையாடினாலும், அது தேவர் முதலிய பல உயிர்களையும் பல கோடி யுகங்கள் இருளிற் கிடந்து உழன்று வருந்தும் படி செய்யும் ஆதலின், அவ்விநோதம் நீ ஆற்றுதல் தகாது' என்றார்] (52)

மதிக்குலம் அன்றோ ?

சிவபெருமானின் கண்களை மூடி நீ விளையாடிய பொழுது, சூரியனாகிவலக்ய கண்ணையும், சந்திரனாகிய இடக் கண்ணையுமே மூடினாய். நெருப்புக் கண்ணாகிய மூன்றாவதாக உள்ள நெற்றிக் கண்ணை மூடாமல் விடுத்தாய். அதற்குக் காரணம், முன்னம் நீ மலையத்துவச பாண்டியன் செய்த பெருந்தவத்தின் பயனாக வேள்வித் தழலில் நீ தோன்றியருளிய வாஞ்சையினாலேயே போலும்! ஆயினும், பாண்டியர்கள் சந்திர குலத்தைச் சேர்ந்தவர்களாயிற்றே! அதனை நீ எண்ணிப் பார்த்திலையோ ?

பெருமை என்புகல்வேன் :

அழகு தோன்றுதற்கு நிலைக்களமான நின் திருக்கைகளுக்கு, அணிகலன்கள் பலவற்றை அணிவித்து, அக்கைகளை மிக்க விருப்பத்தோடு ஏந்தித் தாங்குகின்ற திருமகளையும் கலைமகளையும், விரும்பிச் சுமக்கின்ற செந்தாமரை வெண்டாமரை மலர்களை, மிக்க பெருந்தவம் உடையன என்று பெறலரும் பெருந்தவத்தை என்னென்று புகழ்வது ?

[நமக்கு இனியராயினார் இருபுறத்தும் இருந்து கை கொடுப்ப அவர் தம் கைகளின் மீது தமது கைகளை அமர்த்திக் கொண்டு, உலாப்புறப்படுதல், பெரு நிலையிலுள்ளோர்க்கு இயல்பு. இதனைத் திருமடங்களின் தலைவர்கள் பாற் காணலாம். இம் முறையில் இருபுறத்தும் நின்ற திருமாலும் கலைமகளும் கைகொடுத்த, அம்மையின் திருக்கைகளையும் தாங்கும் பெருமையும் உரிமையும் பெறுவர். ஆதலின் 'அனைய மாதர்கள் இருந்தவப் பெருமை என் புகல்கேன்? என்றார்.] (54)

சிலம்புகளை அணிந்த அம்பிகையின் திருவடிகள், ஊடற் காலத்தில் சிவபிரானின் திருமுடியை ஏற்றித் தாக்கும். அதற்குத் காரணம், தனது அவகிய கையின்று தோன்றிய கங்கையாகிய பெண்ணைத் திருமுடியில் எடுத்து வைத்துச் கொண்டது போலவே, தனது சிலம்பின் மணிகளினின்று தோன்றிய பெண்களையும், சிவபெருமான் செய்யாமற் போயினனே என்றும் சிற்றமே போலும் !

[தேவர்கள் சூர பதுமனால் தாம்படும் துயரங்களைக் கேட்ட சிவபெருமான், அவர் தம் துயர் தீர்ப்பதன் பொருட்டு, முருகனைத் தோற்றுவிக்கத் திருவுளங் கொண்டு, தனது திருமுகங்களினின்று ஆறு தீப்பொறிகளை வெளிப்படுத்தினார். அவற்றின் வெம்மை கண்டு, அம்மையும் அஞ்சி நடுங்கிச் சிறிது ஓடினாள். அப்போது அவள் கையினின்று சங்கையும் சிலம்பின் மணிகளினின்று மகளிர் ஒன்பதின்மர் தோன்றினர். முருகனின் துணைவர்களாகிய வீரவாகு தேவர் முதலிய நவ வீரர்கள், அம்மகளிர் ஒன்பதின்மர்பால் தோன்றியருளியவரேயாவர் என்பது வரலாறு, அம்மையின் ஊடலுக்குத் தற்குறிப்பேற்றமாகக் காரணம் கற்பித்தவாறு.] (55)

குருகுவரை கொன்றனே :

அம்பிகை, பெரியவர்களின் உள்ளங்களியே கோயிலாசக் கொண்டு உறைகின்றாள். அதற்குக் காரணம், அவ்வுள்ளங்களைத் தன் தந்தை ஆகிய மலையரையனின் மரபு என்று அவள் கருதுவதே யாகும். ஆயினும், அவள் கிரவுஞ்சம் என்னும் மலையின் மீது சிறிதும் இரக்கம் காட்டாமல், குறிஞ்சி நிலத்துக்குரிய முருகப் பெருமானின் திருக்கையில் வேலாகச் சென்று புகுந்து, அதனை அழித் தொழித்தாள். அதற்குக் காரணம், கிரவுஞ்சம் என்னும் அம்மலையானது, முனிவர்களாகிய பெரியவர்களுக்குப் பலவகை இடுக்கண்கள் புரிந்துவந்தமையேயாகும்.

[இறைவன் வீற்றிருக்கும் தன்மை, அளப்பரும் பெருமை மெய்யொளி தழைக்கும் தூய்மை, ஓங்கியுயர்ந்திலங்கும் மாட்சிமை, ஆகிய பல ஒப்புமைகளால் பெரியவர்களின் உள்ளங்கள் திருக்கயிலாயம் போல விளங்கும் (பெரிய புராணம்—22) ஆதலின், அவற்றைத் தன் தந்தையாகிய மலையரையனின் மரபு என்று கொண்டு, அம்பிகை அவற்றில் எழுந்தருளி விளங்குவாள். இதுபற்றியே, 'தந்தை தன் மரபு என்று அரியவர் சிந்தை ஆலயம்புகுவாள்' என்றார். குருகுப்பேர் ஒருவரை என்றது, கிரவுஞ்சம் என்னும் மலையை. முருகனுக்கு வேற்படைய அளித்தவள் அம்பிகையே யாதலாலும், 'சக்தி' என்பது அதற்கு ஒரு பெயர் ஆதலாலும், குருகுப்பேர் ஒருவரை கொன்றனே என்றார், நல்லதிற் புகுந்தும் அல்லதை அழித்துக, நடுவுநிலைமை காத்தமையின் 'அழகே' என்றார்.] [56]

கிள்ளை ஏந்தினை :

நினது மருமகள் ஆகிய வள்ளியம்மையினது தாயின் மரபைச் சேர்ந்தது என்று கருதிச் சிவபெருமான், தன் திருக்கையில் மானை ஏந்தினான்; வள்ளியாகிய அழகிய மானைக் கண்டெடுத்த

நம்பி என்னும் வேடர் குலத்தலைவனது தாயின் மரபைச் சேர்ந்தது என்று, நீ கிளியை ஏந்தினுய் நீயும் நின் கணவரும் விரும்பிப் புரியும் ஆடலை, யான் எங்ஙனம் புகழவல்லேன்.

[வள்ளியம்மை மான் வயிற்றிற் பிறந்தவள். ஆதலின் அவளது தாயின் மரபு என்று சிவபிரான் மானை ஏந்தினுன்; வள்ளியம்மையைக் கண்டெடுத்த வேடர் குலத்தலைவனின் தாய் தத்தை (கிளி) என்னும் பெயரினள், ஆதலின் 'மகன் தாய் மரபு என நீ கிள்ளை ஏந்தினை' என்ருர், இது தற் குறிப்பேற்றம்] [57]

விலக்கிட விதி எவன்?

மேகமானது அழகுறக் கறுத்து, நீர் ஆகிய மழையைப் பொழியும். அங்ஙனமே, நீயும் பசுமை நிறம் பெற்று இரக்கம் கொண்டு, கருணை ஆகிய மழையைப் பொழிவாய். மேகமானது எல்லா இடத்திலும் மழை பொழியும்; எந்த இடத்தினையும் விலக்குவதில்லை. அவ்வாறே, நீயும் எல்லோருக்கும் அருள் புரிதல் வேண்டும். என்னை மட்டும் அருள் செய்யாமல் நீ விலக்குவது ஏன்? அங்ஙனம் ஒரு விதி எந்நூல்களிலேனும் உள்ளதோ? (58)

பக்தியில்லாத பாடல்:

அகிலாண்ட நாயகியே! மூடன் ஆகிய யான் பாடுகின்ற பக்தியில்லாத பாடல், மணம் இல்லாத மலர், இனிமை இல்லாத சொல், கண் இல்லாத முகம், பொறுமை இல்லாத தவம், குழந்தை இல்லாத வீடு, தண்ணீர் இல்லாத ஓடை, நீதி முறை இல்லாத அரசாட்சி, சந்திரன் இல்லாத இரவு முதலியவற்றைப் போன்று பயனற்றதேயாகும். (59)

சிலந்தியின் பந்தர்:

நற்குணம் இல்லாத யான் பாடுகின்ற பாடல்கள் இனிமையில்லாதவை என்ருலும், அவற்றை ஏற்றுக் கொண்டு அருள் புரிதல், நினக்கே தக்கதாகும். எளிய சிலந்தி இயற்றிய எச்சிலாகிய நூலின் பந்தரையும், நின் கணவர் ஆகிய சிவபெருமான் விரும்பி ஏற்றுக் கொண்டு அருள் புரிந்தருளினுர்! அந்தப் புராண வரலாற்றை நீ அறிந்திருக்கின்ருய் அன்ருே?

[''சிலந்தியும் ஆனைக் காலில் திரு நிழற்பந்தர் செய்து உலந்தவண் இறந்த போதே கோச் செங்கணனுமாகக், கலந்த நீர்க் காவிரிசூழ் சோணுட்டுச் சோழர் தங்கள் குலந்தனிற் பிறப்பித் திட்டார்'' எனவரும் அப்பர் தேவாரமும், ''தெருண்ட வாயிடை நூல் கொண்டு சித்திரப் பந்தர் சக்கன இயற்றச் சுருண்ட செஞ்சடையாய், அது தன்னைச் சோழன் ஆக்கிய தொடர்ச்சி கண்டு அடியேன்,'' எனவரும் சுந்தரர் தேவாரமும் பிறவும், இங்கு உணர்தற்குரியன.] [60]

தோற்றதும் விசேடம்:

திருவானைக்கா அகிலாண்ட நாயகியே! நினது விழியின் அழகுக்குத் தோல்வியுற்ற மானும், நெற்றிக்கு ஒப்பாக மாட்டாத பிறைச் சந்திரனும், நின் அல்குலின் சிறப்பிற்கு அஞ்சிப் புறங்கொடுத்து ஓடும் கொடிய பாம்பும், நின்னுடைய நுண்ணிடைக்குச் சமம் ஆக இயலாத உடுக்கையும், குற்றமற்ற அழகு நிறைந்த நின் உறுப்புகளுக்குத் தோல்வியடைந்ததும் ஒரு வகையில் விசேடமேயாகும், என்னும் கருத்துப் பற்றியே, சிவ பெருமான் அவற்றை ஏற்றுச் சுமந்து கொண்டிருக்கின்ருன் போலும்!

[அம்பிகையின் விழி மான் போலவும், நெற்றி பிறைச் சந்திரனைப் போலவும், அல்குல் அரவைப் போலவும், இடை துடியைப் போலவும் இருத்தலைச் சுவையமையக் குறிப்பிட்ட படி. 'கான முயல் எய்த அம்பினில், யானை பிழைத்த வேல் ஏந்தல் இனிது' என்பது திருக்குறள். ஆதலின், 'நின் உறுப்பினுக்குத் தோற்றதும் விசேடம்' என்ருர்.] (61)

உறுப்புக் குறை:

பொறுமை, இரக்கம், பணிவு, அன்பு, உபசாரம், ஒழுக்கம், வாய்மை முதலிய பண்புகள் ஒன்றும் இல்லாத குறைகளையுடையவன் யான்! என்ருலும், யான் நினக்கு அடிமையே யாவன். 'அடிமையல்லன்' என்று நீ என்னைத் தள்ளுதல் கூடாது. உறுப்புக் குறை யுடையவர்களையும் கூட, உலகத்தோர் மக்கட் பிறவியினர் என்றே சிறப்பித்துக் குறிப்பிடுவர். (62)

ஆரம் பூண்டவன்

அகிலாண்ட நாயகியே! வெள்ளை நாவல் மரத்தின் கீழ்வீற்றிருப்பவர் ஆகிய சிவபெருமான் (ஜம்புகேசுவரர்), 'ஆரம் பூண்டவன்' என்னும் ஒரு பெயரை முன்பு பெற்றிருக்கின்ருர். நீயும் என்னுடைய பாடலை ஏற்று அணிந்து கொள்வாயாயின், 'பாடல் பூண்டவள்' என்னும் ஓர் அழகிய பெயர் நினக்கும் உண்டாகும்.

[''ஆரம் நீரோடு ஏந்தினுன் ஆனைக்காவு சேர்மினே'' எனச் சம்பந்தரும், ''ஆரம் கொண்ட எம் ஆனைக்கா வுடை ஆதியை நாளும் ஈரம் உள்ளவர் எம்மையும் ஆளுடையாரே'' எனச் சுந்தரரும், திருவானைக்காப் பெருமான் ஆரம் பூண்டவன் எனப்பெயர் பெற்ற செய்தியைக் குறித்தல் காணலாம்.] [64]

திருவடி நிழல்:

சிவபெருமான் வெள்ளை நாவல் மரத்தின் கீழ் உறைகின்ருர். அவருடைய ஒரு பாகத்தில்

நீ உறைகின்றாய். உன்னுடைய திருவடி நிழலில் என்ஞான்றும் யான் உறையும்படி நீ புரிந்தருளினால், நினக்கு மிக்க புண்ணியம் உண்டு. (65)

நீ மெல்லியல் :

திருவானைக்காவில் வெண் நாவல் மரத்தின் கீழ் எழுந்தருளியுள்ள சிவபெருமான், அரிமர்த்தன பாண்டியன்பால் பிரம்பு அடி பெற்றும், சாக்கிய நாயனார்பால் கல்லடி ஏற்றும், அர்ச்சுனன்பால் வில்லடி கொண்டும், அவர்களுக்கு நிரம்பவும் அருள்புரிந்தான். வலிமை மிக்க அவனைப் போல, நீ அவற்றையெல்லாம் ஏற்று இன்னருள் புரிபவள் அல்லள். நீ மெல்லிய இயல்பை யுடையவள்! (66)

விட விதிஎன் ?

பற்பலரும் அறியும்படி 'பித்தன்' என்று கூறி இகழ்ந்து, 'வேதியக் கிழவனே, யான் உனக்கு அடிமையல்லேன். போ' என்று வெகுண்டு பழித்துக் கூறியவர்களையும், சிவபெருமான் 'விட மாட்டேம்' என்று வலிந்து ஈர்த்து ஆட்கொண்டு காத்தருளினார். அவ்வாறு இல்லாமல், யானே நின்னைப் பெரிதும் துதித்து வா என்கின்றேன். நீ என்னைக் காப்பாற்றாமல், கைவிடுவதற்கு விதி எங்கே யுள்ளது ? (67)

அம்மையின் அருட்டிறம் :

'தேவியோடு வந்து சிவபெருமான் அடியார்களுக்கு அருள் புரிந்தான்' என்று கூறுகின்றனரே யன்றி, 'உயிர் போன்ற கணவரோடு வந்து அம்மை அடியார்களை ஆண்டு கொண்டாள்' என்று கூறுகின்றவர்கள் இலர். இதற்குரிய காரணம் இன்னதென நீ எனக்கு விளம்பியருளல் வேண்டும்.

[அருளே வடிவாகிய அம்மையின் தனிமுதன்மைப் பெருஞ் சிறப்பியல்பினை விளக்கியவாறு.] [68]

பவளவாய் அமிர்தப் பயன் :

பிரமன் திருமால் இந்திரன் முதலிய தேவர்களெல்லாம் நடுங்கும்படி பொங்கி எழுந்த கொடிய நஞ்சினைச் சிவபெருமான் முன்பு அஞ்சாது உண்டருளினான். அதற்குக் காரணம், நின்னுடைய பவளம் போலும் திருவாயில் ஊறும் அமிர்தம் விளைக்கவல்ல பயனை, அவன் உணர்ந்திருந்ததே யாகும். இல்லையேல் அக்கொடிய நஞ்சினை யுண்பதற்கு இறைவன் எங்ஙனம் துணிவு கொண்டிருப்பான்? (69)

அம்மையின் நெற்றிக்கண் :

ஒளி மிகுந்த சம்புலிங்கேசுவரர் போல நீயும் நெற்றிக்கண் பெற்றிருக்கின்றாய். அவர் தமது நெற்றிக் கண்ணால் மன்மதனை எரித்தார். அம்மா! நீ நின் நெற்றிக் கண்ணால் யாரை எரித்தாய்? பாவியாகிய என்னுடைய பாவங்களை யெல்லாம் எரிப்பாய் எனின், அவரைவிட நினக்குப் பெரிய புகழ் ஏற்படும். (70)

ஒற்றுமை நயம் :

அகிலாண்ட நாயகியே! திரிபுர சங்கார காலத்தில் மேருமலையாகிய வில்லைப் பிடித்தவள் நீயே என்று யான் உணர்வேன். ஆனால், உலகிற் சிலர் சிவபிரான் பிடித்தான் என்று கூறுகின்றார்கள். அவர்களின் கருத்து யாதோ? நீயும் அவனும் ஆகிய இருவரும் வேறு அல்லீர் என்பதை யுணர்ந்தே, "ஒற்றுமை நயம்" பற்றி அவர்கள் அங்ஙனம் கூறுகின்றனர் போலும்!

[சிவபிரான் மேரு மலையை வில்லாகக் கொண்டபோது, அதனைப் பிடித்த இடப்பக்கத்துத் திருக்கை, அம்மையின் பாகத்தைச் சேர்ந்த தாகலின், "நெடுவலி கொடு மாமேரு விற் பிடித்தாய் நீ! அஃது உணர்குவன் யானும்" என்றார். இக்கருத்து, திருநாவுக்கரசு சுவாமிகள் பாடிய "கற்றார் பயில் கடல் நாகைக் காரோணத்து எம் கண்ணுதலே! வில் தாங்கிய கரம் வேல் நெடுங்கண்ணி வியன்கரமே; நற்றாள் நெடுஞ் சிலை நான் வலித்த கரம் நின்கரமே; செற்றார்புரம் செற்ற சேவகம் என்னைகொல் செப்புமினே?" என்னும் தேவாரத் திருப்பாடலைத் தழுவியது] (71)

மேருவிற் பிடித்தாய் :

மிகுந்த வலிமை கொண்டு, மிகப் பெரிய மேருமலை ஆகிய வில்லை, நீயே நின் கையினாற் பிடித்தாய். இதனை யான் நன்றாக உணர்வேன். ஆனால் ஒரு சிலர் சிவபெருமானே, அதனைப் பிடித்தான் என்று கூறுவர். அங்ஙனம் கூறுபவர்களின் கருத்துயாதோ? நுண்ணிய இடையை யுடைய நீயும், சிவபெருமானும் ஒருவரே, வேறு வேறு அல்லீர் என்பதை அவர்கள் உணர்ந்திருக்கின்றார்கள் போலும்!

[இடக்கையில் வில்லைப் பிடித்து, வலக்கையால் அம்பைப் பெய்து ஈர்த்துச் செலுத்துதல் வேண்டும், ஆதலின், "மேரு விற் பிடித்தாய் நீ. அஃதுணர்வேன்' என்றார், இப்பாடல், "கற்றார் பயில் கடல் நாகைக் காரோணத்து எம் கண்ணுதலே விற்றாங்கிய கரம் வேல் நெடுங்கண்ணி வியன் கரமே..." என வரும் திருநாவுக்கரசர் பாடற் பொருளைத் தழுவியது] (72)

தேர்ந்து ஒருவழி நின்றேன் :

அகிலாண்ட நாயகியே ! யான் ஒரு சமயம், தில்லையம்பலத்தில் நடனம் ஆட எடுத்த திரு வடியே துணை என்று சொல்லுவேன்; மற்றொரு சமயம், மலையரசனின் முற்றத்தில் நிகழ்ந்த திரு மணத்தின் போது, அம்மியின் மீது வைத்த திரு வடியே துணை என்று சொல்லுவேன். நூல் களின் உண்மைப் பொருளைத் தெளியாதவன் என்று நீ இகழ வேண்டா! எல்லாவற்றையும் ஆராய்ந்து பார்த்தே, யான் ஒரு வழியைக் கைக் கொண்டு கடைப்பிடித்து நிற்கின்றேன்.

[அம்பலத்தில் ஆட எடுத்த திருவடியும், திருமணத்தின் போது அம்மியில் வைக்கப் பெற்ற திருவடியும், அம்மையின் திருவடியே என்பது கருத்து. நூல்கள் பலவகை வழிகளைக் கூறினும், அம்மையின் திருவடிகளைப் புகலிடமாக அடைதலே அருட்பேற்றுக்குச் சிறந்த நெறியாதலின், 'மெய்ப்பொருள் துணியான் என்று எனை இகழேல்; தேர்ந்து ஒரு வழி நின் றேன்' என்றார்.]

முயலகனை மிதித்த கால் :

ஒப்பற்ற தில்லையம்பலம் ஆகிய சபையில், முயலகன் என்னும் குறட் பூதத்தின் முதுகின் மேல் பதியும்படி செய்தல் தகாது எனக் கரு தியே, பேரறிவுடைய சிவபெருமான், வேதம் ஆகிய சிலம்பை அணிந்த கால்களுள், வலக் காலை ஊன்றி, இடக்காலை அதிர எடுத்து வீசி ஆடினான். பாண்டிய மன்னன் இதன் அருமை யறிய மாட்டாமல், தவறு செய்தான் எனினும், அப்பிழையை நீ பொறுத்துக் கொண்டாய். அது நின் அருட்டன்மைக்கு, அழகே யாகும்.

[இப்பாடல் "கால் மாறி ஆடிய திருவிளையாடல்" பற்றி யது. கணவனை யன்றிப் பிறரைத் தீண்டவும் கற்புடை மகளிர் கூசுவர் ஆதலின், பெருமான் அம்மையின் பாகத்துக்குரிய இடப்பக்கத்துக் காலை, முயலகன் மீது இயைத்திடல் தகாது எனக் கருதி, அவன் மீது தன் வலக்காலை ஊன்றி ஆடினார் என்பது, கவிஞரின் தற்குறிப்பேற்றம். அம்பிகையின் அருளி யல்பைப் புலப் படுத்திய தாகவும் கொள்ளலாம்.] (74)

நின்பதம் மென்பதமோ ?

வெண் நாவல் மரத்தின் கீழ் எழுந்தருளி யுள்ள சம்புகேசுவரர் ஆகிய சிவபெருமானின் இடப் பக்கத்துத் திருவடியைச் சிக்கெனப் பிடித்துக் கொண்டுள்ள என் முன்னே வரு வதற்கு, வலிமை மிக்க தண்டாயுதத்தைத் தாங்கியுள்ளவன் ஆகிய கூற்றுவன், தன்னை முன்னொரு காலத்தில் மார்க்கண்டேயனின் பொருட்டு உதைத்தது அந்தத் திருவடியே என்று உணர்ந்து, உள்ளம் நடுங்கி அஞ்சுவான். சிவபெருமானின் அந்த இடப்பக்கத்துத் திருவடி உனக்குரிய திருவடியே அன்றோ! அதனை 'வன்பதம்' என்னாமல், 'மென்பதம்' என்று கூறுவது ஏன் ?

[கூற்றை யுதைத்த இறைவனின் திருவடி, அம்மைக்கு உரியது எனவே, அம்மையை வழிபடுதலால் இறப்பச்சம் நீங்கப் பெறலாம் என்பதும், அம்மையின் பாதங்கள் மெல்லிய இயல் புடையவை யாயினும், தன் அடியார்களின் இடர் களைந்து காத்தலில் மிகவும் வலிமை வாய்ந்தவை என்பதும் கருத்து.] (75)

திருநீறிட்டான் திருமதில் :

ஒரு கரிய பன்றியின் உருவை எடுத்துக் கொண்டு உன் கணவனின் திருவடி மலரைக் காண விரும்பி, திருமால் இப் பெரிய நிலத்தை அகழ்ந்து கொண்டு சென்றனரே, எற்றுக்கு ? திருவானைக்காக் கோயிலிலுள்ள திருநீறிட்டான் திருமதில் அடியினைக் கண்டாற் போதுமே! அது செய்திருத்தல் கூடாதா ? அவர்.

[இறைவன் ஒரு சித்தராகப் போந்து, திருநீற்றையே கூலி யாகக் கொடுத்துக் கட்டுவித்த மதில், ஆதலின் திருவானைக் காக் கோயிலின் மதில், "திருநீறிட்டான் மதில்" என்னும் சிறப்புப் பெயர் பெற்றது.] (76)

மெல்லியலா, வல்லியலா ?

திரிபுரம் எரிப்பதற்காக ஒப்பற்ற பெரிய மேருமலையையே எளிதாகக் குழைத்து வளைத்த வலிமை மிக்கவர் சிவபெருமான்! அவருடைய நீண்ட பெரிய வலிமை மிக்க தோள்களையே, நின்னுடைய சிறந்த முலைத் தடத்தாற் குழைத்து நெகிழ்வித்தருளிய நினக்கு. "மெல்லியல்" என்னும் பெயர் எவ்வாறு பொருந்தும் ? வல்லவனையும் குழைத்த "வல்லியல்" அல்லையோ நீ ! (77)

எச்சில் உண்டவன் :

கருநிறம் படைத்த திருடன் ஆகிய ஓர் ஆண் மகனின் வாயினின்று எள்ளெச்சிலை வாங் கியுண்ட வரகுண பாண்டியனுக்கு அருள் புரிந்து, நின் கொழுநன் ஆகிய சிவபெருமான், சிறந்த புகழ் அடைந்தான்; நீ எனக்கு அருள் புரிந்தால், அழகிய பெண்மகளின் இழிதகைய எச்சிலை யுண்டவனுக்கு அருள்புரிந்தாள் என்று, நீ நின் கணவனிலும் மேலான புகழை அடையப் பெறலாம். (78)

தவளைகட்குப் பரிசு :

நீரில் வாழ்கின்ற தவளைகள் கத்துதலைக் கேட்டு, அவைகள் நின் கணவரின் திருப் பெயரைக் கூறி வழுத்துவதாகக் கருதிக் கொண்டு மகிழ்ந்து உள்ளம் உருகி வரகுண பாண்டியன் என்னும் அரசன் ஒருவன், அவற்றிற்குப் பரிசாகப் பொற்காசுகளை வாரி வீசினான். ஆனால் யானோ நின் திருப் பெயர்களைக் கூறி வழுத்தி வழிபடுகின்ற அடியவர் திருக் கூட்டத்திற்குள் புகவும், அவர்களைத் தொழவும் புகழவும் மாட்டேன். யான் எவ்வாறு உய்தி யடையப் போகின்றேன். (79)

பேதையும் பித்தனும் :

அகிலாண்ட நாயகியே! அண்ட கோடிகள் என்று சொல்லப்படும் சிற்றில் இழைத்து நீ விளையாடுவாய்; பிறைச் சந்திரனைச் சூடிய சிவபெருமானோ, அவற்றை அழித்து விளையாடுவான். இங்ஙனம் இடைவிடாது மாறி மாறி நீவிர் இருவரும் விளையாடுதல் பற்றியே, நின்னைப் பேதை என்றும், நின் கணவனைப் பித்தன் என்றும் வேதங்கள் கூறுகின்றன போலும்! (81)

அறியாமை :

மலையரையன்பால் நீ தோன்றியருளிய போது, அவனது மனைவி நின்னை மகள் என நினைத்துத் தாய் (அம்மா) என அழைத்தாள். அவளது செயல் பெரிதும் அறியாமை யுடையதாகும். அஃது எதுபோலும் என்னில், பிரமன் முதலிய எல்லா உயிர்களுக்குமே தாயாகிய நின்னை. விநாயகர், முருகர் ஆகிய இருவர்க்கு மட்டுமே தாய் என்று உலக மக்கள் கூறுகின்ற அறியாமைச் செயலைப் போலும். (82)

அறம் முப்பத்து மூன்று ஆம் :

விளங்குகின்ற அறங்கள், முப்பத்திரண்டு வகைப்படும் என வகுத்து, அவற்றை முறையே குறைவறச் செய்து, உயிர்கள் எல்லாவற்றையும் காத்து வருகின்ற நீ, கொடியவனாகிய எனக்கும் அருள் புரிந்து காத்தல் ஆகாதோ? காத்தால், அது முப்பத்திரண்டு அறங்களுள் ஒன்றாக அமைவதோடு, அறங்கள் முப்பத்து மூன்று என்னும் பெருமையையும் அடையும் அன்றோ? (83)

கேட்டோ முகில்மழை வழங்கும் :

அம்மையே! யான் உன்னை வருந்தி வந்தடைந்து பலகால் இரந்து இரந்து துதித்த பின் தான், நீ என்னை ஆட்கொண்டு காத்தல் வேண்டுமோ? நீயே முன்வந்து நின் அருளால் என்னைக் காத்தல் ஆகாதோ? கேட்பதனாலா, மேகங்கள் மழை பொழிகின்றன? கேளாமலே மேகங்கள் மழைபொழிவது போல, யான் இரந்து துதியாமலே நீ எனை ஆட்கொண்டு காத்தால், அது நினக்கு அளப்பரும் புகழை விளைவிக்கும் அன்றோ? (84)

நொந்தவர் வைவர் :

அம்மையே, யான் குற்றங்கள் பல உடையவன். என்றாலும், பேதை என்னும் நின் பெயருக்கு ஏற்ப, நீ அவற்றை மனத்திற் கொள்ளாது ஆட்கொண்டு காத்தல் வேண்டும். ஆட்கொள்ளாமற் போனால், ஒருவரால் ஏதேனும் வருத்த முற்றோர் அவரை வைது இகழ்வது உலக இயல்பு ஆதலின், நின்னை இகழும் முறையில், யான் நினக்கு மாற்றாள் ஆகிய கங்கையைப் புகழத் தொடங்கி விடுவேன்.

உணரவல்லார் யார் :

அம்மையே! நின் கணவர் தம் சடைமுடியின் மீது, நீ அறியாதபடி ஒரு பெண்ணை மறைத்து வைத்திருக்கின்றார். இது யார்? என்று அவரை நீ ஐயுற்று வினவினால், அவர் இது வெறும் நீர் என்று கூறி மறைப்பார். அது கேட்டு நீ வறிது இருந்து விடாதே. இடையிடையே முகம் தெரிகின்றதே, இது ஏன்? என்று கேள். அதற்கு அவர், நின் அழகிய திருமுகத்தின் நிழலே அங்ஙனம் உனக்குத் தெரிகின்றது என்பார். இல்லை என்று நீ மறுத்தால், அதற்கு அவர், நீ பார்த்தால் அங்ஙனம் தான் உனக்குத் தெரியும். வேறு யாரையாவது பார்க்கச் சொல்லிக் கேட்டுத் தெரிந்து கொள் என்பார். அங்ஙனம் பார்த்துணர்ந்து சொல்ல வல்லவர்கள் யாவருளர்? (86)

அனைவரையும் புகழ்வேன் :

அம்மையே! நீ எனக்கு அருள்புரிந்தால், நின்னை மட்டுமேயன்றி, உனக்கு இனியர் ஆகிய கணவர், தந்தை மைந்தர் தோழியர் அடியவர் ஆகிய எல்லோரையுமே யான் புகழ்வேன். (87)

அன்பின் ஐந்திணை விளக்கவோ ?

மன்மதனை வென்றவர் ஆகிய சிவபெருமான், முன்பு ஒரு காலத்தில் திருப்பூவணம் என்னும் தலத்தில் பொன்னனையாள் என்னும் விலைமகளின் இல்லத்திற்குச் சென்றது எற்றுக்கு? 'அன்பின் ஐந்திணை' எனும் தமிழ் இலக்கண நூல்கள் கூறும் அகப்பொருளின் திறனை விளக்குவதற்காகவே, அங்ஙனம் அவன் செய்தருளினன் என்றால், நீ உலகப் பெண்களுள் ஒருத்தி என்றன்றோ முடியும் ?

கவர்ந்தது ஏன் :

சிவபெருமான் ஆகிய எங்கள் தலைவரின் திருமேனியில் நீ ஒரு பாதியும், நின் தமையன் ஆகிய திருமால் ஒரு பாதியுமாக முழுவதையுமே பகிர்ந்து கொண்டமை, இவன் பேயொடு நடிக்கும் பித்தன், கதியிலி, தாய்தந்தையிலி என்னும் காரணம் பற்றியோ ? (89)

நீயே அவன் :

மோகினி வடிவம் கொண்டு ஒரு முறை புணர்ந்த நின் தமையனுக்கும் ஒரு பாதி ; அழியா இயல்பின் அழகையுடைய நினக்கும் ஒரு பாதி, எங்கள் பெருமானின் திரு மேனியில் என்றால், நீயே அவன் எனத் தெரிந்து கொண்டேன். நீ அவன் அல்லை, நீ அவனின் வேறு என்றாற் பொறுப்பாயோ ? (90)

படைப்புத் தொழில் :

அம்மையே ! நின்னுடைய நாயகர் ஆகிய சிவபெருமானின் கையிலுள்ள துடி (உடுக்கை) யானது, சிருட்டி ஆகிய படைப்புத் தொழிலைப் புரியும் என்பர். பல உலகங்களையும் ஈன்றருளிய நினது திருவயிற்றுக்கு அருகேயுள்ளதாகிய நினது இடைக்கு முழுவதும் ஒப்பாதல் இல்லையாயினும், ஏதோ ஒரு வகையில் சிறிது ஒப்புமையுடைதாக இருத்தலினாலேயே, அந்தத் துடிக்கு அப்படைப்பு ஆற்றல் அமைவதாயிற்றுப் போலும். (91)

புல்லும் படையாம் :

அம்மையே ! மிக்க வல்லமையுடைய மேரு மலையை வில்லாக வளைத்த சிவபெருமானை, நீ நின் கரும்பு ஆகிய வில்லினாற் போரிட்டு வெற்றி கொண்டு புன்முறுவல் பூத்து மகிழ்ச்சி கொள்வாய் ! இச் செயலால், 'வல்லவனுக்குப் புல்லும் படையாம்' என்னும் பழமொழியின் பொருளை நீ எங்களுக்கு விளக்கிக் காட்டி விட்டாய் ! (92)

தலைமதியன் :

சிவபெருமான் சிதம்பரம், வேய்வனம், திருமுல்லைவாயில், கயிலை ஆகிய தலங்களில் மிகவும் விரும்பி எழுந்தருளி விளங்குகின்றான். அதற்குக் காரணம், சிதம்பரம் நின் இடையையும் வேய்வனம் நின்தோள்களையும், திருமுல்லைவாயில் நின் அழகிய பற்களையும், திருக் கயிலைமலை நின் முலைகளையும் ஒத்திருக்கும் தன்மையேயாகும். சிவபெருமான் " தலை மதியன் " அல்லனோ ? அதனால் தான், இவ்வொப்புமைகளையுணர்ந்து, இத்தலங்களை விரும்பி யருளினான்.

[இடை உண்டோ இல்லையோ என ஐயம் விளைவித்து இரகசியமாய் விளங்குதலின், அதற்குச் சிதம்பரம் ஒப்புமை யுடைதாயிற்று. தலைமதியன் என்பது இரட்டுற மொழிதல் ; தலையில் மதியை அணிந்திருப்பவன் ; தலை சிறந்த மதிநலம் வாய்ந்தவன் என இருபொருட் குறிப்புக் காண்க.] [93]

சுவை மிகுந்த கனிகளைத் தருகின்ற பனைமரம், வாழைமரம், மாமரம், நெல்லிமரம், நாவல் மரம் என்பவற்றின் நிழலில், முறையே திருப்பனந்தாள் (வன்பார்த்தான் பனங்காட்டூர், புறவார் பனங்காட்டூர்), திருப்பைஞ்ஞீலி (திருமருகல், திருக்கழுக்குன்றம்), திருவேகம்பம், திருநெல்லிக் காவல், ஜம்புகேசுவரம் ஆகிய திருவானைக்கா என்னும் தலங்களில் எழுந்தருளி விளங்கும் சிவபெருமான், பித்தன் ஆதலினாலேயே வச்சிரவனம் (திருப்பாலைவனம்) என்னும் தலத்தையும் விரும்பி மகிழ்ந்து எழுந்தருள் வானாயினன். (94)

பிழை இலான் :

அம்மையே ! நின் கணவர் ஆகிய சிவபெருமானுக்கு வழிபாடு புரியுங்கால், தேவர்கள் எண் வகை மங்கலப் பொருள்களுள் ஒன்றாகிய கண்ணாடியை, அவர்தம் திருமுன் காட்டுவர். அதனை நீ மறைவாகப் பார்த்து, நும் வலப்பக்கத்தில் ஒரு பெண் தங்கியிருப்பது ஏன் ? என்று, அவருடன் ஊடல் கொள்ள வேண்டா. அவன் ஒரு பிழையும் இல்லாதவன். இடப்பக்கமுள்ள நின் திருவுருவமே அக் கண்ணாடியில் வலப்பக்கத்தில் உள்ளது போல் மாறித் தெரிகின்றது. (95)

ஒரு கதியிலை :

பிறப்பு கொடியது ; இறப்பு அதனினும் கொடியது. ஆதலின் பிறப்பு இறப்பு ஆகிய

இரண்டையுமே நீக்கிக் கொள்ள யான் நினைத்தேன். தந்தை தாய்: இல்லாதவனும், கூற்றுவனை உதைத்தவனும் ஆகிய சிவபெருமான் பால், 'இவன் என் அடியவன்' என்று நீ அறிமுகம் செய்து வைத்தருள். அங்ஙனம் செய்யாமல், என்னை விலக்கி விடுவாயானால், எனக்கு உன்னைத் தவிர வேறு யாதொரு புகலிடமும் இல்லை. (96)

விதிவிலக்கு இலான் :

சிவபெருமான் வேதாகமங்களில் 'ஊன் உண்ணற்க' என்று வலியுறுத்தி விதித்திருந்தும், கண்ணப்பர் ஆகிய வேடுவர் அளித்தபோது தானே ஊனைச் சுவைத்து உண்டு மகிழ்ந்தான். அதுதான் போகட்டும். 'பெண்கள் மயக்கத்தை விளைப்பவர்கள், அவர்களை விரும்பற்க' என்று அனைவர்க்கும் தானே கூறிவைத்திருந்தும், தான் மட்டும் பெண்ணாகிய நின்னை விரும்பி, நின்பால் மயங்கி, நினக்குத் தன் உடலிற் பாதியையும் கொடுத்து விட்டிருக்கின்றான். இங்ஙனம் தானே தன் கூற்றுகளுக்கு மாறாகச் சிவபிரான் நடந்திருத்தலின், அவன் தனக்கு "விதி விலக்குகள் இல்லாதவன்". எனவே, என்னை ஆட்கொள்ளுவதிலும் அவன் விதிவிலக்குகளைக் கவனிக்க மாட்டான். ஆதலின், என்னை ஆட்கொண்டு அருள்புரியும் வண்ணம், நீ அப்பெருமானிடம் கூறிச் சிபாரிசு செய்தருள்க. (97)

கருணை எங்கு இனி :

கரிய மேகம் மழை பொழியாவிட்டால், உலகில் பயிர்கள் வளர்வது உண்டோ? என்னுடைய கவலைகளைத் தீர்க்கும்படி, நின்னிடம் யான் பலகால் விண்ணப்பம் செய்தலை உணர்ந்தும், இரக்கம் இல்லாதவள் போல நீ இருந்தால், அருள் என்பது இனி எங்கே இருக்கும்? (98)

சிவமயம் :

அம்மையே! சிவபெருமானின் திருமேனியில் ஒரு பாதியைத் திருமாலாகவும், மற்றொரு பாதியை மனைவியாகவும் நீயே கவர்ந்து கொண்டாய்! அதனால் சிவபிரான் தமக்கெனத் திருமேனியின்றி மறைந்தே இருக்கின்றார். ஆயினும், இவ்வுலகமானது 'சக்தி மயம்' என்னாமல் 'சிவமயம்' என்றே கூறிவருகின்றது. இதற்கு யாது காரணம் கூறியருள்க. (99)

திருவடிகள் :

குளிர்ந்த நின் திருவடியாகிய தாமரைகள், இமயமலையின் உள்ளம் மகிழும்படி மெல்லென நடக்கும்; ஊடற்காலத்திற் சிவபிரானின் திருமுடியிலுள்ள மதியைத் துண்ணெனத் தாக்கும். இத்தகைய திருவடிகளை, நீர்நிலைகளில் உள்ள முட்கள் பொருந்திய தாமரை மலர், தாங்கப் பெறுமோ? நின் திருவடிகள் தம்முள் இணையானவை அல்ல போலும்! (100)

முடிவுரை :

உலகப் பெரும் கவிஞர்களுள் தலை சிறந்த ஒருவராக மதிக்கப் பெறுபவர் வில்லியம் ஷேக்ஸ்பியர் என்பவர். அவர் தம் அழகிய கவிதைகளை எத்தனையோ பற்பல அறிஞர்கள் ஆராய்ந்து வியந்து பாராட்டி வருகின்றார்கள். அவர்களுள் பேராசிரியர் டௌடன் (Prof. Dowden) என்பவர், 'ஷேக்ஸ்பியரின் நூல்கள் தொடக்கத்திற் பற்பல குறைபாடுகளைக் கொண்டனவாக இருந்து, பின்னரே படிப்படியாக வளர்ந்து சிறந்து முதிர்ந்து பெருமையுற்றன' என்று, ஆராய்ந்து விளக்கிக் காட்டி யிருக்கின்றார். ஷேக்ஸ்பியரின் நூல்களை அவர் தொழிற்கூடத்தில் (In the Workshop), உலகத்தில் (In the World), ஆழத்தினின்று (Out of the Depths), உச்ச நிலையிற் சென்று (On the Heights) இயற்றப்பட்டன என்று, நான்கு வகைகள் அமையப் பிரித்து வைத்து ஆராய்கின்றார். வயதும், அறிவும், அநுபவமும் வளர வளரத்தான், கவிஞனின் கவிதைத் திறம் முதிரப் பெறும் என்பது, அவர் ஆராய்ந்து விளக்கும் அரிய சிறந்த கருத்து ஆகும்.

'அகிலாண்ட நாயகி மாலை' என்னும் இந்நூல், மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்களால், தமது இளமைக் காலத்திலேயே பாடப் பெற்றிருந்தும், 'இறங்குதுறை நீத்தாயிற்று' என்பதற்கு ஏற்ப, அவ்விளம் பருவ நிலையிலும், கவிதை இயற்றத் தலைப்பட்ட தொடக்க காலத்திலுமே, அவர் அடைந்துவிட்டிருந்த புலமையின் நிறைவையும், கவிதைத் திறனின் முதிர்ச்சியையும் தெளிவுற விளக்க வல்லதாகத் திகழ்கின்றது. சாத்திரம், தோத்திரம், இலக்கணம், இலக்கியம், கற்பனை, கவித்திறன், சொல் நயம் முதலிய பற்பலவற்றின் சிறப்புக்களும், இந்நூலிற் பொற்புற அமைந்திருத்தல் காணலாம்.

இத்தகைய சிறந்த இந்த நல்ல இனிய நூலை, அம்பிகையின் துதி நூல் வரிசைகளுள் ஒன்றாகப் பெரிதும் மதித்துப் போற்றி, நாம் அனைவரும் அன்புடன் ஓதி, நலம் பெற்றுய்ய முயலுவோமாக!

— ஆசிரியர்.

உபதேச நூல்களின் உயர்த்தி

(ஸ்ரீமத் பி. ப. அண்ணங்கராச்சாரிய சுவாமிகள், காஞ்சிபுரம்)

முற்றொடர்ச்சி

எம்பெருமானை நிர்ஹேதுக கிருபாளுவென்றும், அவ்யாஜதயாளு என்றும், நாம் சொல்லி வருகின்றோம். சுவாமி எம்பெருமானார், "அநாலோசித விசேஷ அசேஷ லோக சரண்ய!" என்று அடிக்கடி எம்பெருமானை விளிக்கின்றார். இதன் பொருள் என்ன? சிலரிடத்தில் ஏற்றமும் சிலரிடத்தில் தாழ்வுமாகிய வேறுபாடு பாராமல், எல்லோரையும் ஒருங்கே காக்க வல்லவனே! என்பது தானே இதன் பொருள். வேதாந்த தேசிகனும் "நிஷ்கிஞ்ச நஜநஸ்வயம் ரட்சாதீட்சா ஸமதிக ஸமிந்தாந யசஸே" என்று ஓலமிடுகிறார். ஒரு கைம்முதலும் இல்லாதவர்களைத் தானாகவே மேல் விழுந்து காப்பதிலேயே நோக்குக் கொண்டு, அதனால் புகழ்மிக்கவன் எம்பெருமான் என்பதன்றோ இதன் பொருள். இங்ஙனமே நம் முன்னோர்கள் ஏககண்டமாக அருளிச் செய்யுமவற்றை உற்று நோக்குமிடத்து, நம்மிடத்தில் ஒருவகையான கைம்முதலும் இருக்கலாகாது என்றும், ஏதாவது இருந்தால் அது எம்பெருமானுடைய திருவருளுக்கு இடையூறாகும் என்றும், தெரியவருகிறது அல்லவா? இதுவே சாத்திரப் பொருளாயின், "மந்மநா பவ மத்பக்தோ மத்யாஜீ மாம் நமஸ்குரு" இத்யாதிகளான பல்லாயிரம் விதிகள் பழுதாகி ஒழியுமன்றோ? குருவியின் கழுத்திலே பனங்காயைக் கட்டினாற் போலே எத்தனை கர்த்தவ்வியங்களை ஏறிட்டுச் சாத்திரங்கள் விதித்திருக்கின்றன என்று பார்த்தால், அவை கங்குகரையில்லாமல் அன்றோ காண்கின்றன! அவை எல்லாம் பொருளில்லாத சொற்களென்று சொல்லி விடுவது? நாம் அகிஞ்சநர்களாய் இருக்க வேண்டுமென்பது சாத்திரப் பொருளா? விதி சாத்திரங்களுக்குக் கட்டுப்பட்டு விகிதங்களைக் குறையச் செய்ய வேண்டும் என்பது சாத்திரப் பொருளா? என்று வேதாந்திகளுக்குள் வேறுபட்ட எண்ணம் தோன்றக் கூடியது உண்டு. இதைப்பற்றி இங்கு விமரிசிக்கின்றோம்.

பகவத் விஷயம் ஈடு முப்பத்தாறுயிரப் படியில் (5-7-3) "கருளப் புட்கொடி சக்கரப்படை" என்கிற வானமாமலைப் பாசுரத்திற்கு அவதாரிகை இங்ஙனே உள்ளது :—

"அருளாய் என்றீர்; அருளக் கடவோம்; அதிலொரு தட்டில்லை; ஆனாலும் "சாத்திர பலம் ப்ரயோக்தரி கர்த்தா சாஸ்த்ரார்த்தவத்த்வாத்" அன்றோ? அருள்பெறுவார் பக்கலிலேயும் சிறிது உண்டாக வேணுங் காணுமேயென்ன, இது மேலுத்தைக்கு இட்ட மரியாதையோ? கீழுத்தைக்கும் ஏதேனும் உண்டோ? ஆனபின்பு இத்தலையில் கிஞ்சித்காரத்தை விட்டு உன் கிருபையாலே செய்தருளாய் என்றார். இவ்வளவும் வர இதற்கு முன்பு நீ காரணமின்றியே விஷயீகரித்த பின்பு மேலும் நீயே செய்தருள வேணும் என்றார்" என்று சகல சாத்திர தத்துவம் உணர்ந்தவர்களின் தலைவரான நம்பிள்ளையினுடைய இந்த ஸ்ரீ சூக்தியினால், என்னவிதமான சாத்திரப் பொருள் தேறுகிறது என்று பார்க்க வேணும். இதில் எம்பெருமானுடைய ஒரு வாதமும், ஆழ்வாருடைய பிரதிவாதமும் அமைக்கப்பட்டிருக்கின்றது. எம்பெருமானுடைய வாதம் எவ்விதமானது? ஆழ்வாருடைய பிரதிவாதம் எவ்விதமானது? என்று முன்னம் பார்க்க வேணும். ஆழ்வாருடைய பிரதிவாதம் யுக்தமான முறையில் உள்ளதோ? என்று பிறகு பார்க்க வேணும். எம்பெருமானுடைய வாதம் என்னவென்றால், பேறுபெற வேண்டியவர்கள் ஒரு கைம்முதலும் இல்லாமல் வாளா பெற்று விடமுடியாது; பேறு பெறுதற்குரிய வழிகளை நான் சாத்திரங்களில் பல்வகையாகத் தெரிவித்திருக்கிறேன். அவற்றை அனுட்டிக்கும் அவர்களுக்குப்

பேறு கிடைக்குமே ஒழிய, 'என்பக்கல் ஒன்றும் இல்லை' என்பார்க்கு ஒரு பேறும் கிடைக்காது. ஒரு முதலும் இல்லாதவர்களும் பேறு பெற்றுவிடுவது என்றால், எல்லாருமே வீடு பேறு அடைவர் என்னும் நிலை ஏற்படும். சாத்திரப் பொருள்களும் கலங்கிப் போகும். அங்ஙனம் ஆகாமைக்காக நான் நூல் வரம்பு இட்டிருக்கிறேன். அதைக் கடக்கல் ஆகாது. அதைப் பரிபாலனம் பண்ணினார்க்கு ஒழிய மற்றையோர்க்குப் பேறு கிடைக்காது. ஆழ்வீர்! நீர் என் பக்கலில் ஒன்றும் இல்லையென்று சொல்லிக் கொண்டு பேறுபெற விரும்புவது பயனற்றது, என்கிற இது எம்பெருமானுடைய வாதம். இதில் ஒருவிதமான குறையும் சொல்ல முடியாது. மயர்வற மதிநலம் அருளப் பெற்ற ஆழ்வார் இதை உள்ளபடி தெரிந்து கொள்ளாதவரும் அல்லர். ''வணக்குடை த்தவ நெறி வழிநின்று, புறநெறி களைகட்டு உணக்குமின் பசையற அவனுடை உணர்வு கொண்டு உணர்ந்தே'' (திருவாய்மொழி 1-3-5) என்பது முதலான பாசுரங்களில் இதனை ஆழ்வார்தாமே வெளியிட்டும் இருக்கிறார். ஆனால் எம்பெருமானுடைய வாதத்திற்கு ஆழ்வார் செய்யும் பிரதிவாதம் என்ன என்றால், கேண்மின்.

பிரானே! எமக்கு நீ கரணகளேபரங்களைக் கொடுத்து, எம்மை நீ உண்டாக்கினது நாங்கள் பிரார்த்தித்தோ? உன்னுடைய, காரணமின்றியே பெருகும் பெரும் பேரருளின் திறனாலன்றோ, கரணகளேபரங்களைக் கொடுத்தருளினாய். இதனால் உலக மக்கள் பக்கலில் உனக்குள்ள பெருங் கருணைத் திறன் தெரிய வருகின்றதல்லவா! அந்தக் கருணை நித்தியச் செல்வமும் நித்திய மங்கமுமாக எப்போதும் விளங்கக் கடவதே யன்றி ஒருகால் இருந்து மற்றொருகால் மறையுமது அன்றே. அந்தக் கிருபையைக் கொண்டே பரம புருஷார்த்தத்தைத் தந்தருளத் தட்டு என்ன? முதலில் ஒரு கைம்முதலையும் எதிர்பாராமல் காரியம் செய்த நீ, இப்போது மாத்திரம் பேற்றுக்குக் கைம்முதல் வேணும் என்கை பொருந்துவது ஆகுமோ? என்கிற இது ஆழ்வார் செய்யும் பிரதிவாதம்.

ஆதியில் எம்பெருமான் நமக்குக் கரணகளேபரப் பிரதானம் பண்ணினது காரணமற்ற ஓர் அருட்டிறனின் செயலே ஆயினும், கரணகளேபரங்களைக் கொடுத்து சாத்திரங்களையும் காட்டிக் கொடுத்து, அவற்றில் தன்னை அடையும் வழிவகைகளையும் தெரிவித்து அவ்வழியாகத் தன்னைப் பற்றுவார்க்கே பேறு தருவதாக வெளியிட்டிருக்கின்றான் என்னும் இடம் மறுக்க இயலாதது. இது தன்னை ஆழ்வார் அறியாதவர் அல்லர். அறிந்து வைத்து வழியல்லா வழியில் பிரதிவாதம் செய்வது எங்ஙனே சித்தம் ஆகும்? ஆகையாலே ஆழ்வாருடைய பிரதிவாதம் பொருத்தம் அற்றதுதானே? என்ன வேண்டிவரும். வேண்டா. ஆழ்வாருடைய திருவுள்ளம் என்ன என்றால், இதுதான் முக்கியமாகக் குறிக்கொள்ளத் தக்கது. இப்போது நாம் தெரிவிக்கப் போகிற விஷயம் ஆழ்வாருடைய திருவுள்ளம் மாத்திரம் அன்று. சகல ஆசாரியர்களுடையவும் சகல மகரிஷிகளுடையவும் சகல சாத்திரங்களை உடையவும் கருத்து இதுவே காணீர். எது என்னில்; இரண்டு செய்திகள் தெரிவிக்கிறோம் இங்கு. கேண்மின்:

பேற்றின் தவத்தையும், நாம் செய்யும் சாதன அநுட்டானத்தின் புன்மையையும் உற்று நோக்கும் இடத்து, அந்த கனத்த பேற்றுக்கு வேறு எதையும் சாதனமாக நினைக்கத் தகாது. அதற்கு ஏற்ற சாதனம் உலகில் கிடையவே கிடையாது. சர்வ சக்தனான சரண்யன் இதை ஒரு தலைக்கீடாகக் கொண்டு காரியம் செய்கின்றான் என்று நாம் நினைக்கலாமே ஒழிய, இதையே சாதனமாகக் கொண்டு செய்கின்றான் என்றால் நினைக்கவே தகாது. கீதையில் '' நஹி கச்சித் க்ஷண மபி ஜாதுதிஷ்டத் யகர்மக்ருத்'' என்று சொன்னபடியே நம்முடைய கரணங்கள் எப்போதும் ஏதேனும் ஒரு செய்கையைச் செய்து கொண்டே இருப்பன. ஆதலால் நாம் வெறுமனே இருக்கப் போகிறதில்லை. செய்கிற காரியங்களில் சூது சதுரங்கம் பொருவது முதலியனவாகச் சில செய்கைகளும், பகவத் பாகவத சேவை செய்தல் முதலியனவாகச் சில செய்கைகளும் தேறுகின்றன. நன்மைகளையே செய்து வருகின்றோம் என்றும் இல்லை. தீமைகளையே செய்து வருகின்றோம் என்றும் இல்லை. எல்லாவற்றையும் கலந்த கட்டியாகச் செய்து வருகின்றோம். நன்மைகளைச் செய்யும்போது நமக்கே ஒரு ஆத்ம திருப்தி உண்டாகிறது; நம்முடைய சன்ம சாபல்யம் பெற்றதாகவும் நினைக்கின்றோம். புழு குறித்தது எழுத்தாமா போலே, நம்முடைய செயல்கள் அவன் திருவுள்ளத்திலே நல்லதாகப் பட்டு விட்டால், இது அவனது கருணையின் திறம் என்று கொள்ள வேணுமே யல்லாது, வேறொன்றும் கொள்ளத் தகாது. ஞானசக்தி

களில் குறையற்ற ஆளவந்தார், தேசிகன் முதலிய மகான்களும் அகிஞ்சனேகம் என்று தான் உள்ளபடி அனுசந்திக்கின்ருர்கள். ஆகிஞ்சந்யம் ஆவது என்ன? தங்களிடம் ஒரு விதமான கைம்முதலும் இல்லாமை தானே. இப்படித் தங்களை அகிஞ்சநர்களாகச் சொல்லிக் கொள்ளும் பரிபூரணர்களுடைய கருத்து யாது? கனத்த பேற்றுக்குத் தகுதியான கைம்முதல் உண்மையில் ஒன்றுமில்லை, என்பதுதான். ஒரு சிறிதளவு இருந்தாலும் கூட அதுதானும் அடைவு கேடாகச் செய்தது செய்யாததனேடு ஒக்கும் என்கிற நியாயத்தின்படி அசத் கல்பமே ஆகும். ஆகவே சாதனம் ஆகக் கூடியது நம்மிடம் ஒன்று மில்லை ஆயிற்று

இனி மற்ரெரு விஷயமாவது,

"ஜாயமாநம் ஹி புருஷம் யம் பச்யேத் மதுசூதன,
ஸாத்விகஸ் ஸது விஜ்ஞேயஸ் ஸவை மோக்ஷார்த்த சிந்தக:"

என்கிற பிரமாணத்தினல், ஜாயமாந கடாட்சம் பெருதவர்களுக்கு மோட்சம் பற்றிய சிந்தையே உண்டாக மாட்டாது. ஜாயமாந கடாட்சம் ஆவது, கருக்குழியில் கிடக்கும்போதோ, கருக்குழியினின்று வெளிவரும் போதோ நேருகிற இறைவனின் திருவருள். அஃது உள்ளவர்களுக்கே நல்லனவற்றில் ஈடுபடும் திறம் ஏற்படும். அஃது இல்லாதவர்களுக்கு ஒரு காலும் நற்செயல்களில் முயற்சி உண்டாகாது என்பது நூற்கொள்கை இதை அடியொற்றியே, 'கருவிலே திரு இலாதீர்' என்று, ஆழ்வார் திருமாலையில் அருளிச் செய்தது.

சேதனர்களுக்கு விளையும் சகல நன்மைகளுக்கும் பகவானே மூலகாரணம் என்று முடிந்த பின்பு, நம்மிடத்தில் ஏதோ சுகிருதம் இருப்பதாகவும் அது பேற்றுக்குச் சாதனமான கைம்முதலாகவும் கொள்வதற்கு நியாயமே இல்லை. இதுதான் சகல சாத்திரங்களினுடைய சாரமான பொருளாகும். ஆகவே ஆழ்வாருடைய பிரதிவாதம் மிகவும் பொருத்தம் உடையதே என்று முடிந்தது. நமக்கு நன்மைகளில் குறை இருக்கக்கூடாது: நன்மை குறை யற்றிருப்பதனல் தான் பேறு கிடைக்கிறது என்று நினைக்கவும் கூடாது. அவனது நிர்ஹேதுகமான கிருபையே நமக்குத் தஞ்சம் என்கிற நம்பிக்கை ஒன்றே நமக்குப் புகல்; என்கிற இதுதான் சாத்திரப் பொருள்களின் துணிபாகும். இவ்விஷயத்தை எத்தனை தடவை வாசித்தாலும் கேட்டாலும் உடனுக்குடனே மறந்துபோம். என் செய்வது?



★

ஸ்ரீ இராமனுர் நூல் நிலையத் திறப்பு விழாவில், திரு. கே. வேங்கடசாமி நாயுடு, B. A. B. L. அவர்கள் வரவேற்புரை நிகழ்த்துதல் (24-8-69).

★

திருவள்ளுவம்

(பொருட்பால்)

இறைமாட்சி

(1) படை, குடி, கூழ், அமைச்சு, நட்பு அரண் என்னும் ஆறு உறுப்புக்களையும் உடையவன் அரசருள் ஏறு போல்வான் (2) அரசனுக்கு இலக்கணமாவது அஞ்சாமை, கொடைத் தன்மை, அறிவு, மன எழுச்சி என்னும் நான்கு பண்புகளும் இடைவிடாது இருத்தல் ஆகும். (3) உலகை ஆளும் அரசனுக்குச் செயலாற்றலில் விரைவுடைமையும், அவையறிதற்கேற்ற கல்வியுடைமையும், எதனையும் தயங்காது கடிதிற் செய்யும் ஆண்மையுடைமையும் ஆகிய இம்மூன்று பண்புகளும் ஒரு காலும் நீங்க மாட்டா. (4) அறத்தின் வழுவாமல் ஒழுகி, அறமல்லாத தீய செயல்கள் தன் நாட்டின் கண்ணும் நிகழாமற் கடிந்து போக்கி, வீரத்தின் வழுவாத பெருமிதம் உடையவனே அரசனாவான். (5) பொருள்கள் வரும் வழிகளை மேன்மேல் உளவாக்கலும், அங்ஙனம் வந்தவற்றை ஒரு வழித் தொகுத்தலும், தொகுத்தவற்றைப் பிறர் கொள்ளாமற் காத்தலும், காத்தவற்றை அறம் பொருள் இன்பங்களின் பொருட்டு முறையே செலவிடுதலும் வல்லதே அரசு ஆகும். (6) முறை வேண்டினார்க்கும் குறை வேண்டினார்க்கும் எளிதில் காண்பதற்கு இயல்பவன், எவரிடத்தும் கடுஞ்சொற் கூறுபவன் அல்லன் என்றால், அவ்வரசனது நாட்டை உலகம் புகழ்ந்து கூறும். (7) இனிய சொல்லுடனே ஈதலைச் செய்து குடி மக்களுக்கு நலிவு வராமற் காக்கவல்ல அரசனுக்கு, இவ்வுலகம் தன் புகழொடு பொருந்தி, தான் கருதிய அளவிற்று ஆகும். (8) தான் முறை செய்து, பிறர் நலியாமற் காத்தலையும் செய்யும் அரசன், பிறப்பால் மனிதனே ஆயினும், செயலால் மக்களுக்குக் கடவுள் என்று தனிச்சிறப்பாக மதித்துப் போற்றப் பெறுவான். (9) இடித்து உரைக்கத்தக்கார் கூறும் சொற்கள் தன்னுடைய செவிக்குக் கசப்பாக இருப்பினும், அச்சொற்களை அவற்றின் பயன் நோக்கிப் பொறுத்துக் கொள்ளும் சிறந்த உணர்வினையுடைய அரசனின் குடைநிழற் கண்ணே உலகம் தங்கும். (10) வேண்டுவார்க்கு வேண்டுவன கொடுத்தல், எவரிடத்தும் முகமலர்ந்து இன்சொற் பேசுதல், நீதி நெறி தவறாதிருத்தல், தளர்ந்த குடிமக்களை ஆதரித்துக் காத்தல் ஆகிய இந்நான்கு செயலையும் உடையவன் அரசர்களுக்கெல்லாம் சிறந்த ஒளிவிளக்கு ஆவான்.

கல்வி

(1) ஒருவன் கற்கத்தக்க நூல்களைக் குற்றம் அறும்படி கற்க; அங்ஙனம் கற்றால், அக்கல்விக்குப் பொருந்த அவை சொல்லுகின்ற நெறியின் கண்ணே நிற்க. (2) எண் (கணிதம், அறிவியல்) என்று சொல்லப்படுவனவும், மற்றை எழுத்து (இலக்கியம், கலையியல்) என்று சொல்லப் படுவனவும், ஆகிய கலைகள் இரண்டினையும், மக்கட் பிறப்பினர்க்குக் கண் என்று சொல்வர் அறிந்தோர். (3) கண்ணுடையவர் என்று சிறப்பித்துச் சொல்லப்படுவர் கற்றவரே. மற்றைக் கல்லாதவர், முகத்தில் இரண்டு புண் உடையவரே ஆவர். (4) எவரிடத்தும் அவர் உவக்குமாறு சந்தித்துக் கலந்து பழகி, இனி இவரை யாம் எங்ஙனம் கூடுவோம் என எண்ணுமாறு நீங்குதலாகிய அரிய தன்மையை உடையது, கற்றறிந்தாரது தொழில். (5) செல்வர் முன்னே வறியவர் பணிந்து நிற்குமாறு போல, ஆசிரியரும் தாமும் பணிந்து நின்று கற்றவரே தலையாயினர் எனப் படுவர். அங்ஙனம் பணிந்து நிற்பதற்கு நாணமுற்றுக் கல்லாது ஒழிந்தவர், என்றும் இழிந்தவரே ஆவார். (6) மணலின்கண் கேணி தோண்டிய அளவிற்றாக ஊறும். அது போல மக்கட்கு அறிவு, கற்ற அளவிற்றாக

ஊரும். (7) கற்றவனுக்குத் தன் நாடும் தன் ஊரும் மட்டுமேயன்றி, யாதாயினும் ஒரு நாடும் நாடாம்; யாதாயினும் ஓர் ஊரும் ஊராம். இங்ஙனமாகவும் ஒருவன் தான் இறக்கும் அளவும் கல்லாது கழிகின்றது எது கருதி? (8) ஒருவனுக்குத் தான் ஒரு பிறப் பின்கண் கற்ற கல்வி ஏழு பிறப்பினும் சென்று, நன்னெறிக்கண் உய்த்து உதவுதலை உடையது. (9) தாம் இன்புறுதற்கு ஏதுவாகிய கல்விக்கு உலகம் இன்புறுதலால், அச் சிறப்பு நோக்கிக் கற்றறிந்தார் பின்னும் அக்கல்வியையே விரும் புவர். (10) ஒருவனுக்கு அழிவு இல்லாத சிறந்த செல்வமாவது கல்வியே. அஃது ஒழிந்த மணியும் பொன்னும் முதலாயின செல்வம் ஆகா

கல்லாமை :

(1) அறிவு நிரம்புதற்கு ஏதுவாகிய நூல் களைக் கல்லாமல், ஒருவன் அவையின்கண் ஒன்றினைச் சொல்லுதல் அரங்கினை வரையாமல் வட்டு ஆடுதலை ஒக்கும். (2) கல்வியில்லாத ஒருவன் அவையின்கண் ஒன்று சொல்லுதலை விரும்புதல், இயல்பாகவே இருதனமும் இல்லாத வள் ஆகிய ஒருத்தி, பெண்மையை அவாவினாற் போன்று, நகைப்பை விளைக்கும். (3) கற்றறிந் தவர்களின் முன்னே எதனையும் சொல்லாதிருத் தல் கூடுமாயின், கல்லாதவரும் மிகமிக நல்லவரா வர். (4) கல்வியறிவில்லாதவனது நுண் அறிவு ஒரோவழி மிக நன்றாயிருப்பினும், அறிவுடையார் அதனை மதிக்கமாட்டார். (5) கல்லாத ஒருவன் 'யான் அறிவுடையேன்' எனத் தன்னைத்தானே மதித்துக் கொள்ளும் மதிப்பு, அவற்றைக் கற்றவன் கண்டு உரையாடுங்கால் வழுப்பட்டு அழிந்தொழியும். (6) கல்வியறிவில்லாதவர், காணப்படுதலால் உள்ளனர் என்று சொல்லப் படும் அளவினராதலன்றித் தமக்கும் பிறர்க்கும் பயன்படாமையால் விளையாத களர் நிலத்திற்கே ஒப்பாவர். (7) நுண்ணிதாய் மாட்சிமைப்பட்டுப் பல நூல்களிலும் சென்ற அறிவு இல்லாதவனு டைய எழுச்சியும் அழகும் சுதையால் மாட்சிமைப் படப் புனைந்த பாவையினது எழுச்சியும் அழகுமே போலும். (8) கல்லாதவர் பால் உண்டாகிய செல்வம், கல்வியறிவுடைய நல்லவர்கள்பால் ஏற்பட்ட வறுமையைவிட மிகவும் கொடியது. (9) கல்லாதவர் உயர் நிலைக்கண் பிறந்தவர் என்றாலும், எளிய நிலைக்கண் பிறந்தும் கல்வி கற்றாரது அளவிற்குப் பெருமை உடையவரல்லர். (10) விலங்குகளொடு நோக்க மக்கள் எத்துணை நன்மை உடையரோ அத்துணை அளவுக்கு, விளங்கிய நூல் கற்றவரொடு நோக்கக் கல்லாத வர் தீமை உடையவராவர்.

42. கேள்வி

(1) ஒருவருக்குச் சிறப்புடைய செல்வமா வது, செவியான்வரும் செல்வம். அச்செல்வமே பிறசெல்வங்கள் எல்லாவற்றிலும் தலைசிறந்தது. (2) செவிக்கு உணவாகிய கேள்வி இல்லாத பொழுதே, வயிற்றுக்கும் சிறிது உணவு இடப் படும். (3) செவி உணவாகிய கேள்வியினை உடையார், நிலவுலகில் இருப்பவராயினும், அவியுணவினை உடைய வானுலகத்துத் தேவ ரோடு ஒப்பர். (4) உறுதி நூல்களைத் தான் கற்றது இலன் என்றாலும், அவற்றின் பொருள் களைக் கற்றறிந்தார் சொல்லக்கேட்க; அக்கேள்வி ஒருவனுக்குத் தளர்ச்சி வந்துழி, பற்றுக்கோ டாய்ப் பயன்படும் துணை ஆகும். (5) வழுக்கு தலை உடைய சேற்று நிலத்தில் நடப்பவர்க்கு ஊன்றுகோல் உதவுதலைப்போல ஒழுக்கம் உடை யவரின் வாய்ச்சொற்கள் வாழ்க்கைக்குப் பெரி தும் உதவும். (6) ஒருவன் சிறிதளவாயினும் உறுதிப்பொருள்களைக் கேட்க ; அங்ஙனம் கேட் பது அச்சிறிய அளவாலும் சிறந்த பயனைக் கொடுக்கும். (7) பொருள்களைத் தாமும் நுண்ணி தாக, ஆராய்ந்தறிந்து, அதன் மேலும் மிக நிறைந்த கேள்வி உணர்வினை உடையவர், ஒன்றனைப் பிழையாக உணர்ந்து கொண்ட இடத்தும், தமக்கு அறியாமை பயக்கும் சொற் களைச் சொல்லமாட்டார்கள். (8) கற்றறிந்தவர் பால் நூற்பொருள்களைக் கேட்டுணர்வதனால், துளை செய்யப்படாத செவிகள், தமக்குப் புல மாகிய ஓசையை மட்டும் கேட்குமாயினும், கேளாத செவிட்டுத் தன்மையவே ஆகும். (9) நுண்ணிதாகிய கேள்வியை உடையவர் அல்லா தார் பணிந்த சொல்லை உடையவராதல் இயலாது. (10) செவியால் நுகரப்படும் சுவைகளை உணராத, வாயுணர்வினை மட்டுமே உடைய மாந்தர், இறந்தாலும் வாழ்ந்தாலும் உலகிற்கு வருவது என் உளது ?

43. அறிவுடைமை

(1) ஒருவனுக்கு அறிவு என்பது, அழிவு வராமல் காக்கும் கருவியாகும். அதுமட்டுமின்றி எதிர்ப்பவர்க்கு அழிக்க இயலாத வலிய உட் கோட்டையும் ஆகும். (2) மனத்தை அது

செல்லுகின்ற பொருள்களிலெல்லாம் செல்லவிடாமல், அவ்வவற்றின் நன்மை தீமைகளை ஆராய்ந்து தீயதனின் நீக்கி, நல்லதன்கண் செலுத்துவது அறிவு. (3) யாதொரு பொருளை யாவர் யாவர் வாயினின்று கேட்பினும், அப் பொருளின் மெய்யாய பயனைக் காணவல்லது அறிவு. (4) ஒருவன் தான் கூறும் கடினமான பொருள்களையும் பிறர்க்கு எளிதாகப் புரியுமாறு சொல்லுதல் வேண்டும்; தான் பிறரிடம் கேட்பனவற்றில் நுட்பமான பொருளையும் ஆராய்ந்து காணுதல் வேண்டும்; அதுவே அறிவுடைமை ஆகும். (5) உலகத்தை நட்பாக்கிக் கொள்வது ஒருவனுக்கு அறிவின் ஒளி உடைமையாம். அந் நட்பின்கண் முன் மலர்தலும் பின் வாடுதலும் இல்லாமல் இருப்பது அறிவுடைமை. (6) உலகம் எவ்வழியில் ஒழுகுகின்றதோ, அவ் வழியில் உலகத்தோடு பொருந்தித் தானும் ஒழுகுதல் அறிவு ஆகும். (7) அறிவு உடையவர் என்பவர் இனி வரக்கூடியதனை முன்னரே அறிந்து கொள்ள வல்லவர்; அதனை அறிந்து கொள்ள முடியாதவர் அறிவில்லாதவர் எனப்படுவர். (8) அஞ்சுதற்கு உரியதனை அஞ்சாமல் இருத்தல் அறிவின்மை ஆகும். அஞ்சற்கு உரியதனை அஞ்சுதலே அறிவுடையவர் செயல். (9) இனி வரக்கூடிய துன்பத்தினை முன்னதாகவே, அறிந்து காத்துக்கொள்ள வல்ல அறிவினை உடையவர்க்கு, அவர் நடுங்கும்படி வருவதொரு துன்பமும் இல்லை. (10) அறிவு உடையவர், பிறிதொன்றும் இலர் ஆயினும் எல்லாம் உடையவர் ஆவர். அறிவு இல்லாதவர் எல்லாம் உடையவராயினும் ஒன்றுமே இல்லாதவராவார்.

44. குற்றங்கடிதல்

(1) செல்வக் களிப்பும் வெகுளியும் காமமும் ஆகிய குற்றங்கள் இல்லாதவரின் செல்வமானது மேம்பாடுமிக்க தன்மையினை உடையது. (2) வேண்டும்வழிப் பொருள்கொடாமையும், மாட்சிமையின் நீங்கிய மானமும், மாண்பு இல்லாத உவகையும் அரசனுக்குக் குற்றமாகும். (3) பழிக்கு அஞ்சுபவர் தம்மிடத்துத் தினையளவாகிய குற்றம் வந்தாலும், அதனை அச்சிறிய அளவிற்றாக அன்றிப் பனையளவு பெரிதாகக் கொள்ளுவர். (4) குற்றமே அழிவை விளைக்கின்ற பகையாகும் ஆகலின், அக்குற்றம் தன்னிடம் வாராமையையே பயனாகக் கொண்டு ஒருவன் காக்க வேண்டும். (5) குற்றம் வருவதற்கு முன்னரேயே அதனைக் காத்துக் கொள்ளாதவனின் வாழ்க்கை, நெருப்பின் முன்னர் உள்ள வைக்கோற்குவை போல அழிந்து போகும். (6) முன்னர்த்தன் குற்றத்தைக் கண்டு நீக்கிக் கொண்டு, பின்னர்ப் பிறர் குற்றத்தைக் காணவல்லவனாயின், ஓர் அரசனுக்கு நேரக் கூடிய குற்றம் எதுவும் இல்லை. (7) செய்யத் தக்க நற்செயல்களைச் செய்யாமல், பற்றுள்ளத்தால் இறுகப் பிடித்தவனது செல்வம், பின்னர் உளதாம் பான்மைத்தன்றி, வீணே அழியும். (8) பொருளைச் செலவிடத்தகும் இடத்துச் செலவிடாமல், பற்றுதலைச் செய்யும் உள்ளம் ஆகிய இவறுதல் தன்மை, குற்றங்கள் எல்லாவற்றுள்ளும் ஒன்றாக வைத்து எண்ணப்படுவது அன்று; அவ்வெல்லாவற்றுள்ளும் மிகப்பெரியது. (9) ஒருவன் எக்காலத்தும் தன்னைத் தானே பெரியவனாக மதியாது ஒழிக; அங்ஙனமே நன்மை விளைவியாத தீய செயல்களை விரும்பாது விடுக. (10) தான் காதலித்த பொருள்களைத் தனது காதலைப் பிறர் அறிந்து கொள்ளாதபடி ஒருவன் நுகர வல்லவனாயின், அவனை வஞ்சித்தற்குப் பகைவர் செய்யும் சூழ்ச்சிகள் எதுவும் நிறைவேறாது.

45. பெரியாரைத் துணைக் கோடல்

(1) அறத்தினது கூறுகளை ஆராய்ந்தறிந்து, தன்னினும் முதிய அறிவுடையவரது தொடர்பை, ஒருவன் அதனது அருமையை ஓர்ந்து, கொள்ளும் திறம் அறிந்து, கொள்ளுவானாக. (2) தனக்கு வந்த துன்பங்களை நீக்குமாறு அறிந்து நீக்கி, பின்னர் அத்தகையன மேலும் வராதபடி, முன்பாக அறிந்து காக்கவல்ல தன்மை உடையவரை, ஒருவன் அவர் உவப்பன செய்து துணையாகக் கொள்க. (3) அறிவு, ஒழுக்கம், ஆற்றல் முதலியனவற்றாற், பெரியவர்களை, அவர் உவப்பன அறிந்து செய்து, தம்மவராக நட்புச் செய்து கொள்ளுதல், அரிய பேறுகள் எல்லாவற்றுள்ளும் மிக அரியதொன்று ஆகும். (4) அறிவு முதலியவற்றால் தம்மினும் மிக்கார் தமக்குச் சிறந்த நண்பர் ஆக, அவர் வழியில் நின்று தாம் ஒழுகுதல், ஒருவர்க்கு வலிமைகள் எல்லாவற்றுள்ளும் தலையாய வலிமையாகும். (5) அமைச்சரைக் கண்ணாகக் கொண்டு ஆட்சி நடத்துதலால், அரசன் அவ் அமைச்சரைப் பல்லாற்றாலும் ஆராய்ந்து தனக்கு துணையாகக் கொள்க. (6) அறிவு ஒழுக்கங்களால் தக்கவர்கள் ஆகிய இனத்தை உடை

யவனாய்த் தானும் நீதி நெறிகளை அறிந்து வழுவாமல் ஒழுக வல்ல ஒருவனை, அவனது பகைவர் செய்யக் கிடந்தது ஆகிய ஒரு துன்பமும் இல்லை. (7) தவறு செய்யும் இடத்து இடித்துக் கூறியேனும் திருத்தவல்ல துணைவர்களைப் பெற்றிருப்பவர்களுக்குக் கேடு செய்யக்கூடிய ஆற்றலை உடைய பகைவர் இவ்வுலகத்தில் யார் உளர்? (8) இடித்துக் கூறித் திருத்துபவர்களைப் பெற்றில்லாத அரசன், காவல் அற்றவனாவான்; பகையாய்க் கெடுப்பவர் இல்லையாயினும், அவ்வரசன் தானே கேடு அடைவான். (9) முதற் பொருள் இல்லாத வணிகருக்கு அதனால் வரும் ஊதியம் இல்லை; அது போல, தம்மைத் தாங்குவதாகிய துணை இல்லாதவர்க்கு, ஒரு நிலை பேறு இல்லை. (10) தான் தனியனாய் இருந்து, பலருடன் பகை கொள்ளும் தீமையை விட, ஒருவன் பெரியவரோடு தனக்கு உள்ள நட்பினைக் கைசோரவிடுதல், பத்து மடங்கு தீமை உடையது.

— ஆசிரியர்

★

திருவல்லிக்கேணி ஸ்ரீ பார்த்தசாரதிப் பெருமாள் கோயிலுக்கு, நமது அறநிலைய ஆணையர் திரு. ரா. இராமசுப்பிரமணியம், B. Sc, B. L. அவர்கள் வருகை தந்தபோது, வரவேற்றுச் சிறப்பிக்கப் பெறுதல் (24—8—69)

★

அபிராமி அந்தாதி

(மூலமும் உரையும்)

**வல்லபம் ஒன்றறி யேன்; சிறியேன்; நின் மலர் அடிச்செம்
பல்லவம் அல்லது பற்றொன் றிலேன்; பசும் பொற்பொருப்பு
வில்லவர் தம்முடன் வீற்றிருப் பாய்; வினை யேன்தொடுத்த
சொல்அவம் ஆயினும், நின்திரு நாமங்கள் தோத்திரமே!**

(பொழிப்புரை): பசும்பொன்னால் ஆகியது போன்ற மேருமலையை வில்லாகக் கொண்ட சிவபெருமானுடன், வீறுபெற்று எழுந்தருளி எங்கும் விளங்கும் அபிராமி யம்மையே! எல்லாவற்றாலும் சிறுமையே உடையவளாகிய யான், வல்லமைச் செயல் ஒன்றையும் அறியமாட்டேன்; எல்லா உலகங்களையும் தோற்றி மலரச் செய்கின்ற, நின்னுடைய திருவடியாகிய சிவந்த தளிரை அல்லாமல், பற்றுக்கோடு வேறு ஒன்றும் எனக்கு இல்லை; தீவினையையே உடைய யான், இந் நூலின் பாடல்களாகத் தொடர்பு படுத்திய சொற்கள், பொருள் நலம் இல்லாத வீண் சொற்களே யாகும். என்றாலும், இடையிடையே நின் திருப்பெயர்களைக் கொண்டவையாதலின், ஒரு வகையில் நின்னால் ஏற்றுக் கொள்ளத் தக்க துதியே ஆகும்.

(குறிப்புரை): மாற்று உயர்ந்த பொன்போலும் ஒளியை யுடையதாகத் தோன்றுவதாகலின், மேருமலையைப் 'பசும் பொற் பொருப்பு' என்றார். அம்மலையை வில்லாக வளைத்தவர் ஆகலின், சிவபிரானைப் 'பொருப்பு வில்லவர்' என்று புகழ்ந்தார். கணவன் ஆற்றல் மிக்கவனாக விளங்குதல், மனைவியின் பெருமாட்சிமைக்கு ஏதுவாதலின், 'வில்லவர் தம்முடன் வீற்றிருப்பாய' எனப் போற்றினார். வீற்றிருத்தல்—வேறொருவர்க்கு இல்லாத சிறப்புடன் விளங்கியிருத்தல். சிறியேன் என்பது பருவமும் அளவும் குறிக்குமாயினும், ஈண்டுச் 'சிறிய தன்மைகளையே உடையேன்' என்னும் பொருளில் பண்பு குறித்து வந்தது. 'வினை' என்பது நல்வினை தீவினை என்னும் இரண்டையுமே சுட்டவல்லதாயினும், 'வினையேன்' என, ஈண்டு அஃது தீவினைகளை மட்டுமே யுணர்த்தி நின்றது. வல்லபம்—அறிவு, திறமை, ஆற்றல். 'ஒன்றறியேன்', 'ஒன்றிலேன்' என்புழி உம்மைகள் தொக்கன. மலர் அடி—உலகங்களெல்லாம் மலர்ந்து தோன்றுதற்கு நிலைக்களமாகிய திருவடி, வினைத்தொகை. 'மலர் போன்ற அடி' எனக்கொண்டு உவமைத்தொகையாகக் கொள்ளலுமாம். மென்மையுடையதாகச் சிவந்த நிறம் கொண்டு அழகுமிக்குத் திகழ்தலின், அம்பிகையின் திருவடிகளைச் 'செம்பல்லவம்' எனப் புகழ்ந்து வியந்தார். பல்லவம்—தளிர். அழகும் மணமும் பற்றி மலரடி என்றும், மென்மையும் நிறமும் உடைமை பற்றிச் 'செம்பல்லவம்' என்றும் குறிப்பிட்டார். "போற்றி அருளுகநின் ஆதியாம் பாதமலர், போற்றி அருளுகநின் அந்தமாம் செந்தளிர்கள்" என மணிவாசகர் அருளிச் செய்திருத்தல் காண்க.

"நின்னிற் சிறந்த நின்தாள் இணையவை" எனப் பரிபாடல் பாடுவதற்கு ஏற்ப, சிறப்பின் மிக்க இறைவியைக் காட்டிலும், அவளுடைய திருவடிகள் மிக்க சிறப்பு உடையனவாகும் ஆதலின், அவற்றை விதந்து ஓதி, "நின்மலர் அடிச் செம்பல்லவம் அல்லது பற்று ஒன்று இலேன்" என்றார். பாலுண்ணும் குழந்தைக்குத் தாயின் தனங்களைப் போல, அன்பினாற் பற்றி வழிபடுவார்க்கு எல்லா நலங்களும் விளைவிப்பன அம்பிகையின் திருவடிகளே யாதலின், அவற்றையே பற்றுக்

கோடாகக் கொண்டுவிட்டேன் என்பார். "அல்லது பற்றென்றிலேன்" என எதிர்மறை முகத்தாற் கூறி வலியுறுத்தினர். சொல்லையும், அது குறிக்கும் பொருளையும் தோற்றுவித்தவர் தாம் அல்லர் ஆயினும், அவற்றைத் தாம் அறிந்த பெற்றியில் ஏதோ ஒரு வகையிற் சேர்த்து இணைத்துப் பிணைத்ததொரு செயலாதல் தமக்குரியது என்பார், 'தொடுத்த சொல்' என்றார். 'சொற் பொருள்' என்னாது 'சொல்' என்றதனால் பொருளின்மை புலப்படுத்தியவாறு. தாம் செய்துபோதருவன எல்லாம் தீவினைகளே யாயினும், அவற்றுள் இஃதொன்றுதல் நல்வினையாகக் கொள்ளுதற்குத் தக்கது என்பார் 'வினையேன் தொடுத்த' என்றார். போதிய அறிவும் அன்பும் இன்றி வறிதே ஏதோ தொடுத்தனன் என்பார், 'அவம்' என்றார். 'பொய்யே புகழ்வார் புகழ்ந்தால் அதுவும் பொருளாகக் கொள்ளுதல்' இறைவிக்கு இயல்பு ஆகலின், "அவம் ஆயினும்" என்றார்.

வாச்சியப் பிரபாவம் போல் அன்று வாசகப் பிரபாவம் ஆகலானும்; வாச்சிய வத்து தூரத்தது ஆனாலும், இவை கிட்டி நின்று உதவும் ஆகலானும்; சொல்லும் கிரமம் ஒழியச் சொன்னாலும் தம் இயல்பு கெடநில்லா ஆகலானும்; வேண்டுவார் வேண்டும் நலங்களை யெல்லாம் விரைந்து கொடுக்கும் ஆகலானும் "நின் திருநாமங்கள் தோத்திரமே" எனப் புகழ்ந்து வலியுறுத்தினர். வளையாத மேரு மலையைச் சிவபிரான் வில்லாக வளைத்தார், அவருடன் வீற்றிருக்கும் நீ, ஏற்கத்தகும் அன்பு இல்லாத என்னையும், அடியவனாக ஏற்றருளல் வேண்டும் என்பது இப்பாடலின் குறிப்பு. (66)

தோத்திரம் செய்து, தொழுது, மின் போலும்நின் தோற்றம்ஒரு
மாத்திரைப் போதும் மனத்தில் வையாதவர், வண்மைகுலம்
கோத்திரம் கல்வி குணம்குன்றி நாளும் குடில்கள்தொறும்
பாத்திரம் கொண்டு பலிக்குஉழ லாநிற்பர் பார்எங்குமே.

(பொழிப்புரை) : அபிராமி யம்மையே! நின்னை மொழியால் துதிபுரிந்து, மெய்யாற் பணிந்து, மின்னலைப் போல ஒளிதிகழும் நின்னுடைய சிறந்த திருவுருவத்தினை ஒரு நொடியளவு நேரமேனும் மனத்தில் நிலைபெறுத்தி வைத்து வழிபாடு புரியாத பாவிகள், கொடைத்தன்மை, மேன்மை, குடிப் பிறப்பு, கல்வி யறிவு, நல்லியல்பு முதலியவற்றிற் குறையுற்று, பிச்சைக் கலத்தை ஏந்திக் கொண்டு, ஒவ்வொரு நாளும் குடிசைகள் தோறும் பிச்சைக்காக இரந்து, உலகம் எங்கணும் உழன்று வருந்துவர்.

(குறிப்புரை) : இறை வழிபாடு; மொழி, மெய், மனம் என்னும் மூன்றாலும் நிகழ்தல் வேண்டும் என்பார், அம்முக்கரணங்களின் செயலையும் இங்கே ஒருங்கே குறித்தார். செயற்படும் முறைபற்றி மனம், மொழி, மெய் என்பதே வழக்காறு ஆயினும், புலப்படும் முறைபற்றி மொழி, மெய், மனம் என மாற்றி அமைத்துக் கூறினார். அம்பிகை 'மின் ஆயிரம் ஒரு மெய்வடிவாகி விளங்குகின்றது அன்னாள்' (55) ஆகலின் 'மின்போலும் நின் தோற்றம்' என்றார். கைந் நொடிப்பொழுதும், கண் இமைப் பொழுதும் 'மாத்திரை' எனப்படும். மிகச் சிறிய நுண்ணிய கால அளவைக் குறைத்தபடி. அம்பிகையை வழிபடாதவர்கள் நலம் எதுவும் பெறார்; ஒரோவழி முற்செய்தவத்தாற் பெற்றிருப்பினும், அவை தேய்ந்து குன்றிச் சிதையச் சீரழிந்து வருந்துவர் என்பது இப்பாடலின் கருத்து. வண்மை—கொடைத்தன்மை. கோத்திரம் எனப் பின்னர் வருதலின், 'குலம்' என்பது ஈண்டு மேன்மை எனக் கொள்ளப் பெற்றது. பார்—உலகம்; காண்க எனினுமாம். 'பலிக்கு எங்குமே உழலா நிற்பர் பார்' என இயைத்தலும் ஏற்கும். வழிபடாதவர் இங்ஙனம் துன்புறுவர் எனவே, வழிபடுவோர் எல்லா நலங்களும் பெற்று இன்புறுவர் என்பது கருத்து. பலி-பிச்சை. உழலுதல்—அலைந்து வருந்துதல். (67)

பாரும் புனலும் கனலும்வெங் காலும் படர்விசும்பும்,
ஊறும் முருகு சுவைஒளி ஊறுஒலி ஒன்றுபடச்
சேரும் தலைவி, சிவகாம சுந்தரி சீறடிக்கே
சாரும் தவம்உடை யார்,படை யாத தனம்இல்லையே.

(பொழிப்புரை) : நிலமும் நீரும் நெருப்பும் வலிய காற்றும் விரிந்து படர்ந்த வானமும் ஆகிய ஐந்து பூதங்களும், முறையே பரவிய மனமும் சுவையும் ஒளியும் ஊறும் ஒலியும் ஆகிய தன்மாத்திரைகளும் இயையும்படி, எல்லாப் பொருள்களிலும் கலந்து நிற்கும் தலைமையுடையவள், ஆகிய சிவகாமசுந்தரி என்னும் அபிராமியம்மையின், மலர் போன்ற சிறிய திருவடிகளையே புகலாக அடைந்து நிற்கும் தவத்தையுடையவர்கள், தமக்கே உரியனவாகப் பெறாத செல்வம் எதுவும் இல்லை.

(குறிப்புரை) : அம்பிகை 'உலகெங்குமாய் நிற்பவள்' ஆதலாலும், 'அவளால் வந்த ஆக்கம் இவ்வாழ்க்கை எல்லாம்' ஆதலாலும், உலகத் தோற்றத்திற்கு அடிப்படையான ஐந்து பூதங்களும் தன்மாத்திரைகளும் முதலிய, தத்துவங்கள் யாவும் ஒன்றினொன்று தோன்றி இயங்கும்படி, அவற்றிற்கலந்து நிற்பவள் அம்பிகையே என்பார், "பாரும் புனலும் கனலும்...ஒன்றுபடச் சேரும் தலைவி" என்றார். திருக்கடவூர் அபிராமி யம்மையையே, முன்னரும் "தில்லையூரர்தம் பாகத்து உமை" எனக் குறித்தனர் ஆகலின், ஈண்டும் அவளைச் "சிவகாம சுந்தரி" எனக் கூறிச்சிறப்பித்தார். இத்தொடர் 'சிவனைக் காமிக்கும் பேரழகி' எனவும், 'சிவனாற் காமிக்கப்படும் பேரழகி' எனவும் பொருள்படும். ஆண்களின் பாதங்களை நோக்கப் பெண்களின் பாதங்கள் சிறியனவாக இருக்கும் பொதுவியல்பு பற்றி, அம்பிகையின் பாதங்களை ஈண்டுச் 'சீறடி' என்றார். 'சிறுமை + அடி' என்பது 'சீறடி' என வந்தது. அன்பாற் பணிந்து வழிபடுவார்க்கு எளிதிற் பற்றிக் கொள்ளலாம் தன்மையதாதலின் 'சிறிய அடி' என்றார் எனினுமாம். சார்தல் — இடைவிடாது நினைத்தல்; அடைக்கலம் புகுதல். அம்பிகையின் அடியைச் சார்தலே தவமாய் முடியுமாதலின், 'சாரும் தவம் உடையார்' என்றார். எல்லாச் செல்வங்களையும் எளிதில் அடைவர் என்பார் 'படையாத தனம் இல்லையே' என்றார். (68)

தனம்தரும் ; கல்வி தரும் ; ஒரு நாளும் தளர்வுஅறியா
மனம்தரும் ; தெய்வ வடிவும் தரும் ; நெஞ்சில் வஞ்சம்இல்லா
இனம்தரும் ; நல்லன எல்லாம் தரும் ; அன்பர் என்பவர்க்கே
கனம்தரும் ; பூங்குழ லாள்அபி ராமி கடைக்கண்களே !

(பொழிப்புரை): பூக்களை அணிந்த கூந்தலையுடைய அபிராமியம்மையின் கடைக்கண்கள், அவ்வம்மையின்பால் அன்பு செலுத்துபவர்களுக்குச் செல்வத்தை நல்கும்; கல்வியை அளிக்கும்; ஒரு காலத்தும் கவலையினால் தளர்ச்சியடைதலை அறியாமல், மகிழ்ச்சியே நிறைந்த மனத்தைக்கொடுக்கும்; நோயற்ற அழகிய உடம்பையும் வழங்கும்; மனத்தில் வஞ்சகம் சிறிதும் இல்லாத நல்ல உறவினரும், நண்பரும் ஏற்படச் செய்யும்; மற்றும் நல்லனவாகிய எல்லாப் பொருள்களையும் வரையாமல் வழங்கும்; எல்லா மேன்மைகளையும் உண்டாக்கும்.

(குறிப்புரை) : அம்பிகை ஏனையோரைப் போல அன்றி, என்றுமே நிலைபெற்ற சுமங்கலியாகும் சிறப்புடையவள் ஆதலின் 'பூங்குழலாள்' என்றார். அபிராமி தருவாள் என்னாமல் 'கடைக்கண்கள் தரும்' என்றது, அத்துணை எளிதிலும் விரைவிலும் இனிதாகத் தருவாள் என்பது புலப்படுத்தற்கு. "அன்பர் என்பவர்க்கே" என்றது கடைநிலைத் தீவகம். உண்மையில் அன்புடையவர்க்கு மட்டுமே யன்றி, வறிதே வாயளவிற் சொல்லிக் கொள்ளுபவர்க்கும் அனைத்தும் தந்து அருள்புரிதலின் 'அன்பர்க்கே' என்னாமல் 'அன்பர் என்பவர்க்கே' என்றார். 'இல்வாழ்வான் என்பான்' என்புழிப் போல, 'அன்பர் என்று சிறப்பித்துச் சொல்லப் பெறுபவர்க்கு' எனக் கொள்ளினும் ஆம். அம்பிகை, அன்பரின் அன்பை ஆராய்ந்து காண்டலில் அன்றிக் கொடுத்தலிலேயே பெருநோக்கு உடையவளாதலின், தருகிற செயலையும், தரும் பொருள் வகைகளையுமே ஆசிரியர் முதலிற் கிளந்து கூறினார். மரமானது தன்னை அடைந்தவர்க்கே விருப்பு வெறுப்பு இன்றி நிழல் தருதல் இயல்பாதல் போல, அம்பிகையும் தன்னை அடைந்தவர்க்கே யாவும் தருதல் இயல்பு என்க. "நலம் இலன் நண்ணார்க்கு, நண்ணினர்க்கு நல்லன்" எனவரும் திருவருட்பயன் இவ்வுண்மையை யுணர்த்தும்.

உலக வாழ்க்கைக்கு மிகமிக இன்றியமையாததாகலின், 'தனம் தரும்' எனச் செல்வத்தை முதலிற் குறிப்பிட்டார். செல்வத்தை நுகர்வதற்குத் துணையாதலின் 'கல்வி தரும்' என அடுத்துரைத்தார். 'நன்றறிவாரிற் கயவர் திருவுடையர்' என்றபடி, கல்வியும் ஒருவகையிற் பல காலும் மனச்சோர்வை விளைவிப்பதாகலின், 'ஒரு நாளும் தளர்வு அறியா மனம் தரும்' என்றார். மனநலம் பெற்றும் உடல் நலம் பெறுதவழி, ஒரு பயனும் இல்லையாமாகலின் 'தெய்வ வடிவும் தரும்' என்றார். மனநலம் உடல் நலம் முதலியன பெற்றவழியும், சூழ்ந்துள்ள நண்பரும் உறவினரும் நல்லர் அல்லராயின், எல்லையில்லாத் துன்பமே பெருகிநிற்கும் ஆதலின் 'நெஞ்சில் வஞ்சம் இல்லா இனம் தரும்' என்றார். தம்நலம் கருதி யன்றி நம் நலமே குறித்து, நம்பால் அன்பு செலுத்தும் நண்பரும் உறவினரும் இவ்வுலகில் அரியர் என்பதனைச் சுட்டியபடி. இங்ஙனம் ஒவ்வொன்றாகக் கிளந்து கூறப்புகின் அதற்கு ஓர் எல்லையின்றிச் செல்லுமாகலின். அவற்றை யெல்லாம் தொகுத்துச் சுருக்கி 'நல்லன எல்லாம் தரும்' என்றார். இங்ஙனம் அம்பிகை தருவன அனைத்தும், அன்பர் என்பவரை வாழ்வித்துப் பல்லாற்றுலும் மேம்படுத்துதற் பொருட்டேயாதலின் 'கனம்தரும்' என முடிந்தது முடித்தலாகக் குறிப்பிட்டார். (69)

கண்களிக் கும்படி கண்டுகொண் டேன் ; கடம் பாடவியில்
பண்களிக் கும்குரல் வீணையும் கையும் பயோதரமும்
மண்களிக் கும்பச்சை வண்ணமும் ஆகி, மதங்கர்குலப்
பெண்களில் தோன்றிய எம்பெரு மாட்டிதன் பேரழகே !

(பொழிப்புரை) : கடம்பங் காட்டில், பலவகைப் பண்களாற் களிப்பை விளைவிக்கும் குரலோடு ஒன்றிய வீணையும், அதனை ஏந்திய திருக்கையும், அழகிய தனங்களும், உலகமெல்லாம் கண்டு வணங்கி மகிழும் பசுமை நிறமும் கொண்டு, இசையில் வல்ல பாணர்களின் குலத்தைச் சேர்ந்த பெண்களில் ஒருத்தியாகத் தோன்றியருளிய, எங்களுடைய பெருமாட்டியாகிய அபிராமியம்மையின் எல்லையற்ற பேரழகினை, என் கண்கள் களிப்பு அமையும்படி நீடினிது நோக்கி, வணங்கிப் பெருமகிழ்ச்சி எய்தினேன்.

(குறிப்புரை) : அம்பிகை, ஒரு காலத்தில் இசையில் வல்ல பாணர் குலத்தில் தோன்றியருளினுள் என்பது வரலாறு. ஆதலின். "மதங்கர் குலப் பெண்களில் தோன்றிய எம்பெருமாட்டி" என்றார். மதங்கர்- இசையில் வல்ல பாணர்கள். அழகுக்கெல்லாம் மூலமும் விளைநிலமும் ஆதலின் அம்பிகையின் திருவுருவைப் 'பேரழகு' என்றார். அப்பேரழகின் பெற்றியினை 'வீணையும் கையும் பயோதரமும் பச்சை வண்ணமும்' எனத் திறம்தெரிந்து சிறந்தெடுத்துக் கூறிப்புகழ்ந்தார். காண இயலாத தொன்றனைக் கண்டதனுல் "கண்டு கொண்டேன்" என்றார். நோக்கிறந்து நோக்கி அகக்கண்ணுற் கண்டு களிக்கற்பாலதனைப் புறக்கண்ணுலும் கண்டு களிக்கும் அரும்பெறற் பெரும் பேறு வாய்க்கப் பெற்ற திறம் கூறுவார், "கண் களிக்கும்படி கண்டு கொண்டேன்" என்றார். (70)

—ஆசிரியர்

★

மகாபாரதம்

அருண்மொழியரசு

திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகள்.

விற்பயிற்சி.

துருபதன் அரியணை மீது வெண் கொற்றக் குடை நிழற்ற, அமைச்சர்களுடன் வெகு சிறப்பாக வீற்றிருந்தான். அழுக்கு ஆடையுடுத்துக் கொண்டு, தாடியும் மீசையும், வற்றல் உடம்புமாக வருகின்ற துரோணரைப் பார்த்தும், பாராதவனைப் போல் இருந்தான். அரச பதவியால் செருக்குற்றிருந்த அவனைத் துரோணர் பார்த்து ''துருபதனே! நான் உன் நண்பன் துரோணன். நீயும் நானும் அக்னிவேச்ய முனிவரிடம் கலை பயின்றோமே'' என்றார்.

துருபதன் ஏளனமாகச் சிரித்து, ''ஏழைப் பிராம்மணனே! உன் அறிவு திருந்தவில்லை. என்னை நண்பன் என்று துணிந்து கூறுகின்றீர்; நட்பு எப்போதுமே நிலைத்து இருப்பதன்று. எப்போதோ ஒரு காரியத்தை முன்னிட்டு நட்பு உண்டாயிற்று. கற்றவனுக்கும் கல்லாதவனுக்கும், தேர்மீது போகின்றவனுக்கும் பார்மீது நடப்பவனுக்கும், ஏழைக்கும் கோடீசுவரனுக்கும் நட்பு இராது. தனவந்தனுக்கும் தனவந்தனுக்கும், கற்றவனுக்கும் கற்றவனுக்குமே ஒற்றுமையாய் நட்பு உண்டாகின்றது. வேற்றுமையால் அஃது இல்லாமல் போகின்றது. ஆசையும் கோபமும் நட்பையழிக்கும். ஆதலால் வந்த வழியைப் பார்த்துக்கொண்டு போம்'' என்று அசட்டையாகப் பேசினான்.

துரோணருக்கு நாணமும், கோபமும், கலக்கமும் உண்டாயின. ''துருபதனே! ஒரு துரும்பை ஏவி உன்னையும் உன் நகரையும் எரிக்கும் ஆற்றல் எனக்கு உண்டு. அந்தணனுக்குப் பொறுமைதான் ஆயுதம். மூடனாகிய உன்னை நான் மன்னிக்கின்றேன். பாதியரசு தருவதாகப் பிதற்றிய நீ, மக்கட்பதடியாகப் பேசுகின்றனை. நான் ஆசையை விட்டவன். இக்குமாரனுக்கு ஒரு பாற்பசுவை நாடிவந்தேன். நான் போகின்றேன். என் மாணவன் உனக்குப் புத்தி புகட்டுவான். அவனால் நீ அவமானப்படுவாய்'' என்று கூறிவிட்டுப் புறப்பட்டுச் சென்றார்.

தனது மைத்துனர் கிருபர் அத்தினபுரத்திலே அரச குமாரர்கட்கு விற்பயிற்சி தந்து கொண்டு சுகமேயிருக்கின்றார் என்று அறிந்து, அங்கு போய் மகனைக் காப்பாற்றலாம் என்று கருதித் துரோணர் அத்தினபுரஞ் சேர்ந்தார். யாருக்கும் தம்மை இன்னார் என்று அறிவிக்காமல், கிருபருடைய வீட்டிலே தங்கியிருந்தார்.

துரோணர் ஒரு நாள் ஒரு சோலையில் அமர்ந்து ஜெபஞ் செய்து கொண்டிருந்தார், அங்கே அரசகுமாரர்கள் விளையாடிக் கொண்டிருந்தார்கள். யுதிஷ்டிரருடைய மோதிரமும் பந்தும் ஒரு கிணற்றில் விழுந்தன. அந்தப் பந்தையும் மோதிரத்தையும் எப்படி எடுப்பது என்பதை அறியாமல் திகைத்துக் கொண்டிருந்தார்கள். படித்துறையில்லாத கிணறு, இறங்க முடியவில்லை. என் செய்வது? என்று ஏங்கினார்கள். இதையறிந்த துரோணர் அவர்களைப் பார்த்துப் புன்சிரிப்புச் செய்தார். ''குழந்தைகளே! என்ன செய்கின்றீர்கள்? உங்கள் வருத்தத்துக்குக் காரணம் யாது? என்றார். அவருடைய நாகரிகமில்லாத வடிவைக் கண்டு, துரியோதனன் முதலியோர் அவரை அலட்சியம் செய்தார்கள். அர்ச்சுனன் பணிந்து, எங்கள் பந்தும், எங்கள் தமையனாருடைய மோதிரமும் இக் கிணற்றில் விழுந்துவிட்டன. எடுக்கும் வழியறியாது ஏங்குகின்றோம்'' என்றான்.

துரோணர் சீவீர்க்குப் புற்களை எடுத்து ஒன்றுபோல் நறுக்கி ''மாணவர்களே! நீங்கள்

என்ன அஸ்திர வித்தை பயில்கின்றீர்கள்! உங்கள் கலைஞானம் இவ்வளவுதானு? இதோ பாருங்கள் இந்த சீவிர்க்குப்புற்களால் பந்து, மோதிரம் இந்த இரண்டையும் எடுக்கின்றேன்'' என்று கூறி, ஒரு மந்திரம் சொல்லி ஈர்க்கினை எறிந்தார். அது நீருக்கு அடியில் சென்று பந்தைக் குத்தியது. அப்படியே ஒவ்வொரு ஈர்க்கும் ஈர்க்கின் நுனியில் தைத்தது. மேலே வந்தவுடன் பிடித்துத் தூக்கினுர். பந்து வந்து விட்டது. அதேபோல் மோதிரத்தையும் வெகு சுலபமாக அம்பை விடுத்து எளிதாக எடுத்துக் கொடுத்தார்.

பிள்ளைகட்கு ஆச்சரியமாக இருந்தது. ''முனிபுங்கவரே! உமக்கு வணக்கம். இந்த ஆற்றல் மற்று யாரிடமும் இல்லை. நீர் யார்? எங்கிருக்கின்றீர்? உங்களுக்கு நாங்கள் என்ன செய்ய வேண்டும்?'' என்று மிக்க அன்புடன் வினவினுர்கள். துரோணர் ''குமாரர்களே! இந்த நிகழ்ச்சியைப் பீஷ்மரிடம் போய்க் கூறினுல் அவர் என்னை இன்னுர் என்று அறிந்து கொள் வார்'' என்று கூறிவிட்டுச் சென்றுர். எல்லோ ரும் பீஷ்மரிடம் போய் இந்தச் செய்தியைக் கூறினுர்கள். உடனே பீஷ்மர் அவரைத் துரோணர் என்று தெரிந்துகொண்டார். இந்த வகையான அபூர்வமான மந்திர சக்திகளும், அஸ்திர வித்தைகளும் துரோணரிடம்தான் உண்டு. இதை முன்னமே அறிந்தவர் ஆதலாலும், துரோணரைப் பலகாலும் எதிர்பார்த்துக் கொண் டிருக்கின்றுர் ஆதலாலும், தக்க முறைப்படி துரோணரை வரவேற்புச் செய்து உபசரித்தார்.

ஆசாரியரே! ''இந்தப் பிள்ளைகள் இன்று முதல் உமது பிள்ளைகள். இங்கு நீங்கள் பரமசுக மாகவும், இந்த குரு நாட்டிற்கு அதிகாரியாகவும், ஆசாரியராகவும் இருந்து, இவர்கட்கு வித்தையை உபதேசம் பண்ணுங்கள்'' என்றுர்.

துரோணர், ''கிருபர் இருந்து வித்தை கற் பிக்கின்றபோது, நானும் இருக்க வேண்டுமா? அவர் வருந்தக் கூடாதே'' என்றுர். பீஷ்மர், ''சுவாமி! ஒரு முகத்தில் இரு கண்கள் இருப்பது போல், அவரும் தாங்களும் இருந்து, இப் பிள்ளைகளை முன்னேற்றம் அடையச் செய் யுங்கள்'' என்று கூறிப் பேரப்பிள்ளைகளை அவரிடம் ஒப்புவித்தார்.

துரோணருக்குத் தனியே ஒரு மாளிகை தந்தார். அம்மாளிகையில் ஆடைகள், பொன் மணிகள், தானியங்கள், பசுக்கள், ஏவலர்கள் விரிப்புகள் முதலிய சாதனங்கள் அனைத்தையும் நிரப்பினுர். துரோணரைத் தங்களில் ஒருவராக இருக்குமாறு, உயர்ந்த ஆடை, அணிகலன் களால் அலங்கரித்துச் சிறப்பித்தார். அன்று முதல் குருகுலத்தில் ஒரு மறுமலர்ச்சி ஏற்பட்டது. துரோணர் ஆசாரியராக அமர்ந்து புதிய அஸ்திர வித்தைகளைப் போதித்து வந்தார்.

ஒரு நாள் துரோணர் யாருமில்லாத இடத்தில் தருமர் முதலிய பாண்டவர்களையும், துரியோ தனன் முதலிய கௌரவர்களையும் பார்த்துச் ''சீடர்களே! என் உள்ளத்தில் ஒரு விருப்பம் இருக்கிறது. அதை நீங்கள் வித்தை பூர்த்தி யானபின் நிறைவேற்ற வேண்டும்'' என்றுர். அதைக் கேட்டு எல்லோரும் ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டு மௌனமாக இருந்தனர். அர்ச்சுனன் மட்டும் அவரைத் தொழுது ''குரு நாதா! அதுபடியே அடியேன் நிறைவேற்று வேன்,'' என்றுன். துரோணர் அர்ச்சுனனைப் பலமுறை தழுவி உச்சிமோந்து ஆனந்தக் கண்ணீர் சொரிந்தார்.

ஒரு நாள் துரோணர் அசுவத்தாமனை அழைத்து, ''மகனே! இந்த அர்ச்சுனன் உனக்கு நண்பன். இவன் என் மகன். இவனை நீ இது முதல் உயிர் போல் நேசிப்பாய்'' என்றுர். அர்ச்சுனன் அசுவத்தாமாவைத் தழுவிக் கொண் டான். ஆசாரியருடைய அடிமலர் மீது வீழ்ந்து ''குருநாதா! என் உடல், பொருள், உயிர் அனைத்தும் தங்கட்கே உரியவை'' என்று கூறினுன்.

துரோணர் தேவ சம்பந்தமான கணைகளும், மனித சம்பந்தமான கணைகளும், அவைகட் குரிய மந்திரங்களும் கற்பித்தார். கர்ணனும் அந்தக் குருகுலத்திற் சேர்ந்து கலைபயின்றுன். வேறு வேறு தேயத்து அரசகுமாரர்களும் வந்து சேர்ந்து விற்பயிற்சி செய்தார்கள். கர்ணன் அர்ச்சுனனுடைய சிறந்த விற்பயிற்சியைக் கண்டு அழுக்காறு கொண்டு, துரியோதனனுடன் சேர்ந்து பெருமூச்சு விட்டான்.

அர்ச்சுனன் ஊக்கத்தாலும், விடாமுயற்சி யாலும், குரு பக்தியாலும், அடக்கத்தாலும் அவர்கள் எல்லோரையும் விடச் சிறந்தவனுக விளங்கி, இராமரைப் போல் விற்பயிற்சியில் சமானம் இல்லாதவனுனுன்...துரோணர் அர்ச் சுனனிடம் மிகுந்த பட்சமாக இருந்தார். இவன்

என்னிலும் பன்மடங்கு உயர்வான் என்றும், அவர் தமது மனத்திற் கருதினார்.

இருளில் சாதனை.

ஒரு நாள் சமையற்காரனை அழைத்து இரவு காலத்தில் அர்ச்சுனனுக்கு மட்டும் விளக்குக்குப் பக்கத்தில் இலைபோடு. இதை யாருக்கும் கூற வேண்டாம் என்று கட்டளையிட்டார். ஓரிரவில் அர்ச்சுனன் அன்னம் புசித்துக் கொண்டிருக்கிற போது விளக்கு அணைந்து விட்டது. அர்ச்சுனன் அப்போது உணவு எடுத்த கை தவறாது வாயிடம் போவதைப் பற்றிச் சிந்தித்தான். உண்டு உண்டு வந்த பழக்கம்தான் இதற்குக் காரணம் என்றும், சாதனையால் எதனையும் சாதிக்கலாம் என்றும், இரவில் இருளிலும் சாதனை செய்து குறி வீழ்த்தலாம் என்றும் தனக்குள் எண்ணிக் கொண்டான். அன்று முதல் உறங்காதவனாகி ஒருபுறம் நின்று இருளில் குறிவைத்து அடித்துப் பழகிக் கொண்டிருந்தான்.

துரோணர் ஓரிரவில் இந்த ஒலியைக் கேட்டு வெளிப்பட்டுப் போய் ''அங்கே யார்?'' என்று கேட்டார். ''குருநாதா! அடியேன் அர்ச்சுனன். குறிவைத்து அடித்துச் சாதனை செய்கின்றேன்'' என்றான் தனஞ்சயன். அதிசயத்தால் மலர்ந்த கண்களையுடையவரான ஆசிரியர், ''அர்ச்சுனா! இருளிலா சாதனை? குறி படுகின்றதா?'' என்றனர். அருச்சுனன் ''ஆம்! தவறாமல் படுகின்றது'' என்றான்.

''ஓ! பகலிலேயே நல்ல சாதனை உள்ளவனுக்குப் பத்துக்கு எட்டுதான் படும். இவன் இருளில் பத்துக்குப் பத்து தவறாமல் படுகின்றது என்கின்றானே! என்னாலேயே இருளில் அடிக்க இயலாதே. இவன் எப்படி அடிக்கின்றான்'' என்று கருதிய துரோணர் ''அர்ச்சுனா! இருளில் எவ்வாறு தவறாமல் குறியை அடிக்கின்றாய்?'' என்று கேட்டார். ''சுவாமி! இருளில் வாய் இருக்குமிடந் தெரிந்தால், இது ஏன் தெரியாது'' என்றான் விஜயன். ''ஓ!. இவன் இருளில் உணவு உண்டான் போலும்'' என்று எண்ணினார். அவனைத் தழுவிக் கொண்டு ''என் அருமந்த மகனே, பதினாலு உலகங்களிலும் உனக்கு விற்பிடித்தவர்களில் நிகர் இல்லை என்று எண்ணும்படிச் செய்வேன், இது உண்மை'' என்றார்.

ஒரு பரீட்சை

ஒரு நாள் வருணமந்திரத்தைப் பற்றிப் பாடம் நடத்தினார். எல்லோருக்கும் வருண மந்திரம் உபதேசித்து, வருணன் மழைக்கு அதிதேவதை. மழையில்லாதபோது இம் மந்திரத்தால் மழையை உண்டாக்கலாம். நீர் வேண்டுமாயின் இதனால் நீர் பெறலாம். பகைவன் அக்கினிக் கணை விடுத்தால், நீங்கள் வருணாஸ்திரத்தை விடுங்கள். அவ்வருணப்படை மழை பொழிந்து, அக்கினிப் படையை அழிக்கும்'' என்பனவாகிய உண்மைகளை விரிவாகக் கூறினார்.

மறுநாள் பிள்ளைகளின் அறிவைச் சோதிக்கும் பொருட்டு நூற்று ஏழு பானைகளைத் தயாரித்தார். அதில் மிளகுதான் நுழையும். அத்துணைக் குறுகிய வாய். பானைகளைக் கண்டு மாணவர்கள் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டு, இவை எதற்கு என்று மெல்லப் பேசிக் கொண்டார்கள். நீந்தி விளையாடுவதற்கு இருக்கும் என்றான் துரியோதனன். கடம் வாசிப்பதற்கு இருக்கும் என்றார் தருமர். பானைகளுக்குள் தேன் முதலிய உணவுப் பொருள்கள் இருக்கும் என்றான் பீமன். மாணவர்கள் மனத்தில் இப்படி அநேக விதமான ஆராய்ச்சிகள் விதவிதமாக நடந்தன.

துரோணர் ''மாணவர்களே! இந்தப் பானைகளை ஆளுக்கொன்று எடுத்துக் கொள்ளுங்கள். ஆற்றுக்குப் போய் இதில் நீர் நிரப்பிக் கொண்டு எவன் முதலில் வருகின்றானோ அவன் சிறந்தவன். அவனுக்குப் பரிசு தருவேன்'' என்றார். புற்றீசல் எழுந்தது போல் ஆரவாரம் புரிந்து கொண்டு, நான் முன்னே நான் முன்னே என்று கத்திக் கொண்டு, பானைகளை எடுத்துக்கொண்டு அனைவரும் நதியை நோக்கி ஓடினார்கள். அர்ச்சுனன் பானையைப் பார்த்து ''மிகச் சிறியவாய். இதில் எப்படி விரைவில் நீரை நிரப்புவது'' என்று எண்ணி, வருணமந்திரத்தைச் செபித்துக் கொண்டே சென்றான். நதியின் நீரில் நனைந்த மாத்திரத்தில், அது நீர் நிரம்பி விட்டது. எல்லோருக்கும் முந்திக் கொணர்ந்து குருநாதனுக்கு முன் குடத்தை வைத்தான். அசுவத்தாமன் நீரில் நனைத்து மந்திரஞ் சொன்னான். நீர் நிறைந்தது. அடுத்துக் கொணர்ந்து வைத்தான். மற்ற குமாரர்கள் அனைவரும் குடத்தைத் தண்ணீரில் அமுத்திக் கொண்டு வளைந்து நின்றார்கள். நெடு

நேரமாகியும் அதில் நீர் நிரம்பவில்லை. எடுத்து எடுத்துக் குலுக்கிப் பார்த்துக் கொண்டார்கள்.

துரியோதனன் "பீமா! உன் குடத்தில் எவ்வளவு தண்ணீர் நுழைந்துள்ளது?" என்று கேட்டான். "ஒரு சிறிதுதான் நுழைந்துளது" என்ருன். "குருநாதர் நம்மை வேடிக்கை பார்க்கின்ருர். துவாரம் இன்னுங் கொஞ்சம் பெரிதாக வைத்திருக்க வேண்டும். அர்ச்சுனனும் அசுவத்தாமனும் இது முடியாத வேலை என்று, கூறும் பொருட்டு முதலிலேயே போய்விட்டார்கள்" என்று கூறிச் சிரித்துக் கொண்டான். பின்னர் இடுப்புவலி கண்டு அத்தனை பேரும் காலிக் குடங்களைக் கொண்டு வைத்து வரிசையாக நின்ருர்கள்.

ஆசிரியர் "என்ன, எல்லாவற்றிலும் நீர் நிரப்பிவிட்டீர்களா?" என்று கேட்டார். "வாய் பெரிதாக ஆனுல் தான் நிரப்ப முடியும்" என்ருன் துரியோதனன். "வாய் பெரிதாக வேண்டுமா? குடத்துக்கா? உனக்கா? அர்ச்சுனன் குடத்தை எடுத்துப்பார்" என்ருர் துரோணர். அதை எடுத்தவுடன் நிறைகுடமாக இருந்தது. அதிசயம் அடைந்த துரியோதனன் "சுவாமி, குயவன் இதைச் செய்யும்போதே உள்ளே நீரை வைத்துச் செய்து இருப்பான்" என்ருன். எல்லோரும் கொல்லென்று சிரித்தார்கள். "நீரை வைத்து எப்படிக் குடத்தைச் சுடமுடியும்?" என்ருர்கள்.

"அர்ச்சுன! நீ எப்படி சீக்கிரம் நீரை நிரப்பினுய்?" என்று ஆசிரியர் கேட்டார். "குரு நாதா! நேற்று முழுவதும் வருண மந்திரந்தானே போதிக்கப்பட்டது. அதனைச் செபித்தேன்; நீர் நிரம்பியது" என்ருன். "பிள்ளைகளே! எல்லோருக்குந்தானே பொதுவாகப் பாடஞ் சொன்னேன். ஏன் நீங்கள் செபிக்க வில்லை?" என்று கேட்டார் ஆசிரியர். "அக்கினியாஸ்திரம் விட்டால் தானே செபிக்கவேண்டும் என்று இருந்து விட்டோம்" என்ருர்கள் சிலர்.

"நல்லது இப்போது போய் நிரப்பி வாருங்கள்" என்ருர். மீளவும் நதிக்குச் சென்று சிலர் தான் வருண மந்திரம் கூறி நிரப்பினுர்கள். துரியோதனன் முதலிய பலருக்கு மந்திரம் நினைவில் இல்லாமல் காலிக் குடத்துடன் வந்தார்கள். குடம் காலியா? காலிகளே! மந்திரங்களை மறக்கக் கூடாது. போரில் மந்திரம் மறந்துபோனுல், எப்படி நீங்கள் பகைவனை வெல்லமுடியும்? நினைவாற்றல் இருப்பது இன்றியமையாதது. போய்க் கவனமாகப் படியுங்கள்" என்ருர் துரோணர்.

துரியோதனுதியர்க்குத் தனஞ்சயன் திறமையைக்கண்டு பொருமைப் பேய் பிடித்துவாட்டியது. கதிரவனுக்கு முன் மின்மினிகள் போல் ஆயினுர்கள். துரோணர் விற்போர், மற்போர், தேர்ச் சண்டை, குதிரைச் சண்டை, வாட்போர், கதைப் போர், ஏனைய ஆயுதங்களின் போர் ஆகிய பல கலைகளையும் மாணவர்கட்குச் சொல்லிக் கொடுத்தார்.

மதிப்புரை

அருட்பெருஞ்சோதி :

இஃது ஒரு திங்கள் இதழ். திருவருட்பிரகாச வள்ளலார் ஆகிய வடலூர் இராமலிங்க அடிகளின் சமரச சன்மார்க்கச் செந்நெறியையும், ஆன்மநேய ஒருமைப்பாட்டு உரிமையுணர்வினையும், சீவகாருணியம் என்னும் உயிரிரக்க ஒழுகலாற்றையும் பரப்பும் உயரிய குறிக்கோளுடன், நடத்தப் பெறுவது. இராமலிங்க அடிகளின் சிறந்த கருத்துக்களையும், கொள்கைகளையும், அவர் பாடியருளிய திருவருட்பாவின் சொற்பொருட் சுவைநலங்களையும், பலரும் அறியப் பரப்பும் சிறந்த திருப்பணியை மேற்கொண்டுள்ளது. சித்தவைத்திய நிபுணரும், மாவட்ட நீதிபதியாக இருந்தவரும் ஆகிய திருவாளர் **வி. பலராமையா**, B. A., B. L., அவர்களின் முதல் மகளார் **திருமதி ரா. மீராதேவி அம்மையார்** அவர்கள், இதன் ஆசிரியையாக விளங்குதல் குறிப்பிடத்தக்கது. காஞ்சிபுரம் தொண்டைமண்டல ஆதீனம் ஸ்ரீ மெய்கண்டசந்தான ஞானபீடம் சீலத்திரு. ஞானப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள், இதற்கு வாழ்த்துரையும் கட்டுரையும் வழங்கி இருக்கின்ருர்கள். திரு. வி. பலராமையா, திரு. வி. எம். கடிகாசலம், திருமதி சௌந்தராகைலாசம், ஸ்ரீ சரவணுநந்தா, திரு அழ. வள்ளியப்பா, திரு. தேவநாதன் முதலிய பெருமக்கள் பலர், கட்டுரைகள் வழங்கியுள்ளனர். உயர்மன்ற நீதிபதிகள் திரு என். கிருஷ்ணசுவாமி ரெட்டியார், திரு எம். சோமசுந்தரம், திரு. ஆர். சதாசிவம் ஆகியோர், இவ் இதழுக்கு வாழ்த்துரை வழங்கியுள்ளனர். நல்ல தாளில், சிறந்த முறையில், இவ்விதழ் பதிப்பிக்கப் பெற்றுள்ளது. சமய உணர்வும் ஒழுக்கமும் உடைய அன்பர்கள் அனைவரும், இவ்விதழின் உறுப்பினராகிப் பயன்பெறலாம். ஆண்டுச் சந்தா ரூபாய் ஆறு. பின்வரும் முகவரிக்குச் சந்தா அனுப்பலாம், "ஆசிரியர், அருட்பெருஞ்சோதி, அரும்பாக்கம், சென்னை-29"

—ஆசிரியர்

கன்னகத்தில் காதல்

சிவஸ்ரீ தத்புருஷ தேசிகர் அவர்கள், தேவகோட்டை

உயிர்களை மூன்று வகையினவாக ஞான சாத்திரங்கள் வகைப் படுத்திக் கூறுகின்றன. அடிப்படையில் அவைகளிடத்தில் வேறுபாடு இல்லையாயினும், அவைகளைச் சார்ந்திருக்கின்ற மலங்களின் எண்ணிக்கை பற்றி, அவ்வேறுபாடு அமைந்திருக்கின்றது. ஆனவம், கன்மம், மாயை ஆகிய மூன்று மலங்களில், ஆணவ மலம் ஒன்று மட்டும் உடைய உயிர்கள் ''விஞ்ஞான கலர்'' என்றும், அதனுடன் கன்ம மலமும் உடைய உயிர்கள் 'பிரளயா கலர்'' என்றும், அவற்றுடன் மாயா மலமும் உடைய உயிர்கள் ''சகலர்'' என்றும், சொல்லப் பெறுவார்கள்.

இவர்கள் மூவருக்கும் மூன்று நிலைகளில், இறைவன் திருவருள் வந்து கூடும். விஞ்ஞான கலரின் உயிர்க்குயிராயிருந்து, அவர்களது அறிவுக்கறிவாய்த் தன்மைப் பொருளாகி, ஆண்டவன் அவர்களுக்கு அருள் புரிவார். பிரளயாகலரின் முன்பு, நீல கண்டம் நெற்றிக்கண், நாற்றோள் முதலியன காட்டி, உருவத் திருமேனி கொண்டு தோன்றி, முன்னிலைப் பொருளாகி அவர்களுக்கு அருள் செய்வார். சகலருக்கு அவர்களைப் போன்றே மானிட வடிவம் கொண்டுள்ள ஆசாரியர்களை நிலைக்களமாகக் கொண்டு எழுந்தருளியிருந்து கருணை புரிவார். இதனை ''மலபரி பாகம் வருமளவிற் பன்னுள், அலமருதல் கண்ணுற்றருளி உலவாது, அறிவுக் கறிவாகி'' என்றும்; கன்ம மலத் தார்க்கு மலர்க் கண் மூன்றும் தாழ்சடையும், வன் மழுவும் மானுமுடன் மால் விடைமேல் மின்னிடத்துப் பூத்த பவளப் பொருப்பொன்று வெள்ளி வெற்பில், வாய்த்தனைய தெய்வ வடிவாகி'' என்றும், ''பிரியாக்கருணைத்திருவுருவாய்க் காசினிக்கே தோன்றி'' என்றும் கந்தர் கலி வெண்பா விளக்குகிறது.

சிவபெருமானது நல்லருளைப் பெற விரும்புகின்ற சாதகர்கள் மேற்கொள்ள வேண்டிய சாதனங்கள், நான்கு என்று நமது ஞான நூல்கள் கூறுகின்றன. அவை சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பன. இவற்றுள் முன்னுகவுள்ள மூன்று சாதனங்களிலும் நின்று, ஒருவர் முற்றுதல் பெற்ருரானுல், நான்காவதாகிய ஞானம் இறைவனருளால் தானே வந்து கூடும். இந்த ஞானமே, முத்திப்பேற்றை வழங்குவதாகும். உயிர்கள் பொருட்டுச் செய்யக் கடவனவாகிய பசு புண்ணியங்களை நிறையச் செய்து நிறை வேற்றியவருக்கே, பதிபுண்ணியங்களில் முதலாவதாகிய சரியைத் தொண்டு செய்யும் பேறு கிட்டும். சரியைத் தொண்டு முற்றுதலுறும் வேளையில் கிரியையும், அது முற்றுதலுறும் வேளையில் யோகமும், ஒன்றன்பின் ஒன்ருக வந்து கூடும். இது ஒரு பிறப்பிலேயே ஒருவருக்கு நிகழ்ந்தாலும் நிகழும். அல்லது ஒரு பிறப்பில் விட்ட குறை, மறுபிறப்பில் தொட்ட குறையாகப் பல பிறப்புக்களைப் பற்றி நிகழுவதும் உண்டு. எங்ஙனமாயினும் இந்த நால்வகைச் சாதனங்களிலும் பயின்றே, உயிர்கள் கட்டு நீங்கி முத்தியை அடைய வேண்டும்.

சரியைத் தொண்டு செய்வோர், உடம்பாற் செய்யத்தக்க பணிகளை இறைவனுக்குச் செய்யும் கடமையுடையவர். கிரியையாளர், உடம்பாலும் உள்ளத்தாலும் பணியாற்றுவர். யோகியர், உள்ளத்தால் இறைவனுடன் ஒன்றுபட்டுக் கூடுவர். இங்ஙனம் இம்மூவருக்கும் பணிசெய்தற்குரிய கருவிகள் குறிக்கப் பெறுமாயினும் உடம்புடன் வாழுகிறவரையிற் கிரியையாளருக்குச் சரியைத் தொண்டும், யோகியருக்குச் சரியை கிரியைத் தொண்டுகளும் இன்றியமையாதன என்பதை, உறுதியாக உணர்ந்து கொள்ளுதல் வேண்டும். சிவஞான போதம் பன்னிரண்டாம் சூத்திரத்தின் உட்கிடை இதுவேயாகும்.

எங்கும் நிறைந்திருக்கின்ற சிவபெருமானது திருவருளை, விஞ்ஞானகலர் அவர்களுக்

குள்ளேயே பெற்றுப் பயனடைகின்றார்களெனவும் சிவயோக சித்தி கைவரப் பெற்ற மெய்ஞ்ஞானியர், உள்ளத்துள்ளே கூடி அத்திருவருள் நலத்தை நுகர்ந்து இன்புறுகின்றார்களெனவும், பெருநூல்கள் கூறும் உண்மையைத் திருமூலதேவ நாயனார், தமது திருமந்திர மாலைக் கடவுள் வாழ்த்து முப்பத்தொன்றாவது செய்யுளில், தெளிவு செய்கின்றார். அந்தத் திருப்பாட்டு,

மண்ணகத் தான்ஒக்கும்
வானகத் தான்ஒக்கும்
விண்ணகத் தான்ஒக்கும்
வேதகத் தான்ஒக்கும்
பண்ணகத் தின்னிசை
பாடலுற் றானுக்கே
கண்ணகத் தேநின்று
காதலித் தேனே''

என்பதாகும்.

சிவபெருமானது சொரூப இலக்கணம் எல்லாவற்றையும் கடந்திருப்பது. அவரது தடத்த இலக்கணம், எல்லாவற்றிலும் கலந்திருப்பது. கடந்திருப்பதாகிய சொரூப இலக்கணத்தை மட்டும் ஒப்புக்கொண்டு தடத்த இயல்பை மறுப்பவர்களும், கலந்திருப்பதாகிய தடத்த இலக்கணத்தை மட்டும் ஒப்புக் கொண்டு சொரூப இயல்பை மறுப்பவர்களும், கடவுளுக்கு உண்மையல்லாதனவும், சுருதி யுக்தி அநுபவங்களுக்குப் பொருந்தாதனவுமாகிய பலவற்றை ஏற்றியுரைப்பவர்களுமாகச் சமய வாதிகள் பலர் உலகில் உள்ளனர். இவர்கள் அனைவராலும் கூறப்பெறும் கடவுளிலக்கணங்கள், அவரை முழுமுதற்பொருளாக வைக்காமல், கீழ்ப்படிக்கு இழுத்து வந்து விடுகின்றன என்பதைக் காய்தல் உவத்தல் அகற்றிச் சிந்திப்பவர் நன்குணர்வர்.

எனவேதான் திருமூலதேவர், இந்தத் திருப்பாடலின் மூலம் சிவபெருமானது முழுநிறைவுச் சிறப்பை நமக்கு உணர்த்த முற்படுகிறார். இறைவனை ''மண்ணகத்தான்'' என்று சொல்லுகிறீர்களா? உண்மை, அவனது நிறைவு, பருப்பொருள்களில் தலையானதாகிய மண்ணகத்தில் உள்ளது. அடுத்து ''வானத்தான்'' என்று சொல்லுகிறீர்களா? அதுவும் உண்மைதான். நுட்பப் பொருள்களில் தலையானதாகிய பூத வெளியிலும், அதிநுட்பப் பொருளாகிய பரவெளியிலும், அவனது நிறைவு இருக்கத்தான் செய்கிறது. தேவர்களில் ஒருவனென்று அவனைச் சொல்லுகிறீர்களா? உண்மை. அவனது நிறைவு, பருப்பொருள்களில் தலையானதாகிய மண்ணகத்தில் உள்ளது. அடுத்து ''வானகத்தான்'' என்று சொல்லுகிறீர்களா? அதுவும் உண்மைதான். நுட்பப் பொருள்களில் தலையானதாகிய பூத வெளியிலும், அதிநுட்பப் பொருளாகிய பர வெளியிலும், அவனது நிறைவு இருக்கத்தான் செய்கிறது. தேவர்களில் ஒருவனென்றும் அவனைச் சொல்லுகிறீர்களா? ஆம். அதுவும்சரிதான். பிரமவிட்டுணுவாதி தேவர்களும், அவனது ஆணை வழி நிற்கும் அவனது பிரதிநிதிகளே! இரும்பையும் பொன்னாக்க வல்ல யோகசித்தன் அவன் என்று சொல்லுகிறீர்களா? அதற்கும் தடையில்லை. யோக சித்தர்கள் செய்யும் அத்தனை செயல்களும், அவனது திருவருள் வலிமையைக் கொண்டுதான் நிகழ்த்தப்பெறுகின்றன.

இப்படி மண்ணகத்திலும், வானகத்திலும், விண்ணகத்திலும், வேகத்திலும் தங்கியிருந்து விளையாடல்கள் பலவற்றைச் செய்தருளுகின்ற ஆண்டவன், அந்த அளவிலேயே அடங்கி விடவில்லை. பாடற்பண்ணில் இசைபோல, உயிர்க்குயிராக எல்லாரிடத்திலும் தங்கியிருந்தும், இன்னருள் புரிந்து வருகின்றான். புறப்பொருள்களில் இறைவனைக் காண்கின்ற காட்சியைவிட, உயிர்க்குயிராக நமக்குள்ளேயே அவன் எழுந்தருளியிருந்து அருள்புரிவதை, அநுபவ வாயிலாக அறிந்து கொள்ளுவது, எவ்வளவு சிறப்புடையதாக இருக்கும்? ''உரைசேரும் எண்பத்து நான்குநூறாயிரமாம் யோனிபேதம், நிரைசேரப் படைத்தவற்றின் உயிர்க்குயிராய் அங்கங்கே நின்றான்'' என்று ஆளுடைய பிள்ளையாரும், ''உயிர்தொறும் ஒளித்து நின்ற கள்வன்'' என்று பரஞ்சோதி முனிவரும் சிவபெருமானைக் காணுகிறார்கள்.

சிவபெருமானது அட்டமூர்த்த வடிவங்களென்று நிலம், நீர், நெருப்பு, காற்று, வானம், திங்கள், கதிரவன், உயிர் ஆகிய எட்டும் சொல்லப்பெறும். ''இருநிலனாய்த் தீயாகி நீருமாகி இயமமானனாய் எறியும் காற்றும் ஆகி, அரு நிலைய திங்களாய் ஞாயிறாகி ஆகாசமாய் அட்ட மூர்த்தியாகி'' என்பது, அப்பரடிகள் திருவாக்கு. ஆண்டவன் ஆன்மாக்களுக்கு அருள்செய்யும் முறைமையில் மண்ணகத்தார் போல வந்து அவருக்கும் விண்ணகத்தார்போல வெளிப்பட்டு அவருக்கும், வானகத்தார் போலத் தோன்றி அவருக்கும்,

வேதகத்தார் போல விளங்கி அவருக்கும் பயன் வழங்குவாரென்பது உணரத்தக்கதாகும். இது "வானத்தான் என்பாரும் என்க;மற்று உம்பர்கோன் தானத்தான் என்பாரும் தாமென்க; ஞானத்தான் முன்நஞ்சத்தா லிருண்ட மெய்யொளிசேர் கண்டத்தான், என் நெஞ்சத்தான் என்பன் யான்" என்ற அற்புதத் திருவந்தாதியாலும் நன்கு உணரப்பெறும்.

இங்ஙனம் எல்லாமாயிருக்கின்ற இறைவனது இயல்பைப் பாடற்பண்ணிலுள்ள இசை போன்றது என்று சொல்லலாம். பாடற் பண்ணில் இசை பிரிவின்றி நிற்பதுபோல, எந்தப் பொருளிலும் இறைவன் பிரிவின்றி நிற்பான். "பண்ணையும் ஓசையும் போல" என்பது சிவஞான போதம். இதனைப் "பண்ணகத்தின் னிசை பாடலுற்றான்" என்று ஆசிரியர் மூன்றுவது வரியில் உரைத்தருளினார்.

புறத்தும் அகத்துமாய் எங்கும் நிறைந்திருக்கின்ற இறைவனை, அகத்தே விளங்கக் காணும் பரமஞானியரில் திருமூலதேவ நாயனாரும் ஒருவராதலின், அப்பெருமானைக் "கண்ணகத்தே நின்று காதலித்தேனே" என்று உரைத்து இறைவனை உயிர்க்குயிராகக் காண்பதும், விரும்பி அநுபவிப்பதுமாகிய தமது பெருநிலையை, இந்தத் திருப்பாடலின் மூலம் நமக்கு உணர்த்தியருளினார்.

(தொடரும்)

செய்திச் சுருக்கம்

(1) ஆவணிமூலத் திருநாள் :

தருமை ஆதீனத்தில், கயிலைக் குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்கள், திருவுளப் பாங்கின்படி சிறப்புற நடைபெற்றது. அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ் ஆராய்ச்சித்துறைத் துணைப் பேராசிரியர் வித்துவான் திரு.க. வெள்ளைவாரணனார் அவர்களுக்குத் 'திருமுறை ஆராய்ச்சிக் கலைஞர்' என்னும் சிறப்புப் பட்டம் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களால், வழங்கப் பெற்றது. *(23-8-1968)*

(2) நூலகத் திறப்பு விழா :

திருவல்லிக்கேணி ஸ்ரீ பார்த்தசாரதி சுவாமி தேவத்தானத்தில் "ஸ்ரீ இராமானுசர் நூலகத்தை" நமது அறநிலைய ஆட்சித்துறை அமைச்சர் மாண்புமிகு கே. வி. சுப்பையா, B. A., அவர்கள் திறந்து வைத்தார்கள். மேற்படி திறப்பு விழாவிற்கு அறநிலைய ஆட்சித்துறை ஆணையாளர் திரு. ஆர். இராமசுப்பிரமணியம், BSc. BL., அவர்கள் தலைமை தாங்கினார்கள். *(24-8-1969)*.

(3) மண்டப அடிக்கல் நாட்டுவிழா :

திருத்துறைப் பூண்டி, பிறவி மருந்தீசுவரர் கோயிலில், அறநிலைய ஆட்சித்துறை ஆணையாளர் திரு. ஆர். இராமசுப்பிரமணியம், B.Sc., BL., அவர்கள், அறங்காவலர்கள் கூட்டமண்டபத்திற்கு அடிக்கல் நாட்டினார்கள். அவ்விழாவில் தஞ்சைத் துணை ஆணையர் திரு. டி. என். சிங்காரவேலு, B. A., B. L., அவர்களும், நாகை உதவி ஆணையர் திரு. பி. புலியூர் உடையான் அவர்களும், கலந்து கொண்டார்கள். *(20-8-1969)*

ஒட்டக்கூத்தர் விழா :

சென்னைத் திருமயிலை வெள்ளீசுவரர் கோயிலில், திரு. மா. ப. தியாகராச முதலியார், B.A. அவர்கள் தலைமையிற் சிறப்புறக் கொண்டாடப் பெற்றது. 'திருக்கோயில்' ஆசிரியர், புலவர் திரு. ந. ரா. முருகவேள், M. A., M. O. L. அவர்கள், ஒட்டக்கூத்தரின் புலமைச் சிறப்பினையும், அவர் இயற்றியருளிய தமிழ் இலக்கியங்களின் சிறப்பினையும், விளக்கிச் சொற்பொழிவு நிகழ்த்தினார். அறங்காவலர் திரு. வே. இராமநாதன், M. A. அவர்கள் நன்றியுரை நவின்றார். *(22-8-69)*

தருமபுர ஆதீன சமயப் பிரசார நிலயத்தில் பாராட்டு நிகழ்ச்சி

முன்னுரை :

சென்னைத் தியாகராய நகர்த் தருமபுர ஆதீன சமயப் பிரசார நிலயத்தில், தருமபுர ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ கயிலைச் சுப்பிரமணிய தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் திருவுளப் பாங்கின்படி, தவத்திரு. குன்றக்குடி அடிகளாரைத் தமிழக அரசு மேலவை உறுப்பினராகத் தேர்ந்தெடுத்திருப்பதை முன்னிட்டு அடிகளார் அவர்கட்கும், சென்னைப் பல்கலைக் கழகத் துணை வேந்தராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் திரு. நெ. து. சுந்தரவடிவேலு அவர்கட்கும், தமிழக உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதி கோ. வீராசாமி அவர்கள் தலைமையிலும், தமிழக முதல்வர் மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் முன்னிலையிலும், 26-8-69 அன்று மிகவும் சிறப்பானதொரு பாராட்டு விழா நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியின் முற்பகுதியில், வேலூர்த் தேவஸ்தான இறைபணி மன்ற மண்டபத்துக்கான கால்கோள் விழாவை, அறநிலைய அமைச்சர் மாண்புமிகு. திரு. கே. வி. சுப்பையர், B.A., அவர்கள் நடத்தி வைத்தார்.

திருமதி சௌந்தரா கைலாசம், திரு. கீ இராமலிங்கனார், சிலம்புச் செல்வர் ம பொ. சிவஞானம் ஆகியோரும் விழாவில் பங்கேற்றுப் பேசினர். வித்துவான் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள், அனைவரையும் வரவேற்றுச் சிறப்பித்தார்.

முதலமைச்சர் பாராட்டுரை :

மாண்புமிகு. முதல்வர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் பாராட்டிப் பேசுகையில் கூறியதாவது :

" தருமை ஆதீனத்தார், உணர்ச்சியோடும் உற்சாகத்தோடும் நடத்துகின்ற இந்தப் பாராட்டு விழாவில் கலந்து கொள்கிற வாய்ப்பினை எனக்கு அளித்தவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சிலருக்குக் கருணாநிதியா! தருமபுர ஆதீனத்திலா! கலந்து கொள்வதா! என்று கூட ஆச்சரிய மேற்படலாம். அத்தகைய ஐயமேற்படலாம். நான் இங்கு வரத் துணிந்தது ஆச்சரியமல்ல.

ஆனால் என்னை இங்கு அழைக்க இவர்களுக்குத் துணிவு வந்ததே! அதுதான் ஆச்சரியம்!

ஒரு மடாதிபதியை இன்னொரு மடாதிபதி பாராட்டுவதென்பது புரட்சிகரமானது என்று ம. பொ. சி கூறினர். ஒரு வேளை இந்த நியமனத்தை வேறு சில மடாதிபதிகள் எதிர்க்கக் கூடும் என்று எண்ணிக் கொண்டிருந்து, அப்படி ஏதும் நிகழாதது கண்டு, அதையே புரட்சிகரமானது என்று அவர் கூறியிருக்கக் கூடும்.

தமிழ் நாட்டில் ஒரு தமிழன் புகழும் பெருமையும் அடைவதை எண்ணி, மற்றொரு தமிழன் பாராட்டுகின்ற அந்தப் பண்பை நீண்ட காலத்துக்கு முன்பே தமிழன் கைவிட்டு விட்டான். அந்தப் பண்பை மீண்டும் பெறுகிற யுகத்தை நாம் பெற்று வருகிறோம், என்பதற்கு எடுத்துக்காட்டாகவே இந்த விழா நடக்கிறது.

தமிழ் நாட்டு மடாதிபதிகள் ஒற்றுமையாக இருந்து காரியங்களைச் செய்தார்கள் என்பதே இந்த ஐந்தாறு ஆண்டுகளுக்குப் பின்தான். குன்றக்குடி அடிகளாரை மற்ற மடாதிபதிகள் ஏற்றே இரண்டு ஆண்டுகள்தான் ஆகின்றன.

மடாதிபதிகளுக்குள் இழையாக இருந்து அத்தனை பேரையும் ஒரு மாலையெனச் சேர்த்த பெருமை குன்றக்குடி அடிகளாரைச் சாரும்.

குன்றக்குடி அடிகளார் மேலவை உறுப்பினராக ஆனதற்கு, ஆக்கப்பட்டதற்குப் பாராட்டுக்கள் என்று இங்குப் பேசியவர்கள் குறிப்பிட்டார்கள். அடிகளாரைப் பாராட்டுவதில் ஒன்றுமில்லை. அடிகளார் ஏதோ இந்தப் பதவியைப் பெறப் பெரிய முயற்சியிலீடுபட்டார்—வெற்றி பெற்றார் என்று சொல்லி, அவரைப் பாராட்ட இயலாது. சாதாரணமாக எந்த இடத்திலும் பாராட்டுக்களை உதறி விடுகிற நான், இப்போது தெரிவிக்கப்பட்ட பாராட்டுக்களை முழுக்க முழுக்க ஏற்றுக் கொள்கிறேன்.

மேலவை உறுப்பினராக ஆகும்படி நான்தான் நீண்ட நேரம் தொலைபேசியில் அவருடன் பேசி, ஏற்றுக் கொள்ளும்படி சொன்னேன்.

யோசித்துக் கூறுங்கள் என்று சொன்னேன். அவர் ஏற்றுக் கொண்டபோது, நான்தான் அவருக்கு நன்றி சொன்னேன். ஆகவே பாராட்டுக்களுக்கு உரியவன் நான்தான். அவரல்ல.

கலாச்சாரம், கலை, இலக்கியம், விஞ்ஞானம் சமூகப்பணி என்ற தலைப்புகளில், கவர்னர் அவர்களது நியமனங்கள் செய்யப் படுகின்றன என்றும், இவற்ருேடு, சமயம் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும் என்றும், திரு. ம. பொ. சி. கூறினர். சமயத்துக்கென்று பிரித்து வைத்து விட்டால் சமயத் தொண்டு மட்டும் செய்தால் போதும். இலக்கியமெல்லாம் தேவையில்லை என்று சமயத்தோடு நின்று விடுவார்கள். இலக்கியத் தொண்டுக்கு இடமில்லாமற் போய்விடும். ஆகவே சமயம் என்பதை அந்தந்த சமயத்துக்கு வைத்துக் கொள்வோம். சமயம் என்று பிரித்து வைத்து அந்தக் கோட்டுக்குள் அவர்களை வைத்துவிட வேண்டாம் என்று நான் நினைக்கிறேன்.

மடாதிபதிகளுக்கு மேலவை என்பது வேறு எங்கோ இருப்பது. மக்கள் தொண்டாற்ற ஒரு மேலவை இங்கு உள்ளதென்று அவர்களை இங்கு அழைத்து வந்தேன். மகேசன் தொண்டாற்றி அடைய எண்ணுகிற மேலவை வேறு! அடிகளாரை மேலவை உறுப்பினராக்க வேண்டும் என்ற எண்ணம் எனக்குத் திடீரென்று ஏற்பட்டது என்பது உண்மை. கருணாநிதியாக இல்லாதிருந்தால் ஏதோ ஒரு சக்தி என்னுள் தோன்றி இப்படி ஆணையிட்டது என்று கூறியிருக்கலாம்.

கழக அரசைக் குறித்து மக்களிடத்தில் ஒரு தவருன கருத்துப் பரப்பப்பட்டுள்ளது. முன்னேற்றக் கழக அரசின் கீழ், ஆலயங்களுக்கு ஆளும் கட்சிக்காரர்களாலும், அவர்களுடைய ஆதரவைப் பெற்றவர்களாலும், கொடுமை நிகழுவதாக, இன்றளவும் நாகரிகமான நடுநிலை ஏடுகள் என்று நாம் எண்ணிக் கொண்டிருக்கிற பெரிய ஏடுகள், தலையங்கங்களை எழுதித் தீர்த்தன. நாங்கள் எவ்வளவோ எடுத்துச் சொன்னேம். நாங்கள் அளித்த விளக்கங்களும் கொள்கைகளும் ஏடுகளால் சரியாகப் பிரசுரிக்கப் படுவதில்லை. அந்த அளவுக்கு அவர்களுக்கு எரிச்சல். ஏனென்றல் நாங்கள் சாமானியர்கள். ஆகவே தான் நாங்கள் தருகிற செய்திகளையும் கொள்கை விளக்கங்களையும் அவைகள் அலட்சியம் செய்து விடுகின்றன.

அடிகளாரைப் போன்றவர்கள் நேரடியாகப் பார்த்துச் சொல்லட்டும். அப்படிச் சொன்னல் நாட்டு மக்களுக்கு அது நன்கு தெரியும், என்ற சுயநலத்தோடுதான் அடிகளாரை மேலவைக்கு அழைத்து வந்தேன்.

அமைச்சர் திரு. சுப்பையா எடுத்துக் கூறிய கடவுளை நேசிக்கும் மனிதன்—கடவுளால் நேசிக்கப்படும் மனிதன்—ஆகிய இரண்டு வகைப் பட்ட மனிதருள், அடிகளார் இரண்டு வகைப் பட்டியலிலும் இடம் பெற்றுள்ளார். நாங்கள் கடவுளால் விரும்பப்படுகிறவர்கள் என்ற பட்டியலில் இடம் பெற்றிருக்கிருேம். எங்களுக்குள்ள இதர பட்டியலெல்லாம் சிறைகளில் எங்களுக்கிருந்த பட்டியல்தான்.

என்னுடைய இளமைப் பருவத்தில் மதக் கருத்துக்களோடு வேறுபட்டு அவைகளுக்கெதிராகப் போராடியவன் நான். ஆனல் எல்லா மக்களுக்கும் பொறுப்பான ஆட்சிப் பொறுப்பை ஏற்றபின் அனைவருக்குமாகத்தான் செங்கோல் பிடிக்க வேண்டும். எனது கருத்துக்களுக்காக மட்டுமென்று சொல்லித் தனிச்செங்கோல் பிடிக்க முடியாது. எங்களை எல்லாம் ஆளாக்கி விட்டு மறைந்த அண்ணனிடமிருந்து கற்றவை இவை.

தவத்திரு அடிகளார் அவர்களும், 'தாமரைச் செல்வர்' திரு. சுந்தரவடிவேலு அவர்களும், துறவியும் வேந்தரும் ஆக இங்கே அமர்ந்திருக்கின்ருர்கள். "துறவிக்கு வேந்தனும் துரும்பு" என்பார்கள். இவர்கள் இருவருமாகச் சேர்ந்து, இந்த ஆட்சியைப் பகைவர்களுக்கு இரும்பாகவும், நண்பர்களுக்குக் கரும்பாகவும் ஆக்கட்டும்!

எனத் தமிழக முதல்வர் மாண்பு மிகு கலைஞர் மு. கருணாநிதி அவர்கள், தமது அரிய இனிய பாராட்டுரையினை வழங்கினர்கள். கூடியிருந்த மக்கள் அனைவரும் மகிழ்ச்சிப் பெருக்கில் அவ்வப்போது கைதட்டிப் பாராட்டி இன்புற்று உவந்தனர்.

முடிவுரை

தருமையாதீனத் தலைவர் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகா சந்நிதானம் அவர்களின் அருளாசியுடன், அவர்களின் சார்பில், பாராட்டுப் பெற்றவர்களுக்கும், தலைமை நீதிபதி, முதலமைச்சர், அறநிலைய அமைச்சர் ஆகியோர்களுக்கும், ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் பொன்னடை போர்த்துச் சிறப்பித்தார்கள். சமயப்பிரசார நிலையத் தமிழ்ப் புலவர் வகுப்பு மாணவ மாணவியரின் சார்பிலும், தவத்திரு அடிகளார், துணைவேந்தர் முதலிய பெரு மக்களுக்கு மாலைகள் அணிவிக்கப்பட்டன. இறை வணக்கத்துடன் பாராட்டு விழா நிகழ்ச்சி இனிது நிறைவுற்றது.

—ஆசிரியர்

துளசியின் சிறப்பு

(என். எஸ். தாத்தாசாரியர் — தஞ்சை).

ஓரடியும் சாடுதைத்த ஒண்மலர்ச்
சேவடியும் ஈரடியும் காணலாம்
என்நெஞ்சே! — ஓரடியில் தாய
வனைக் கேசவனைத் தண்
துழாய் மாலைசேர் மாயவனையே
மனத்து வை.

முன்னுரை :

திருமால் ஆலயங்களில் திருமாலுக்கு இட்ட, புனித நீரையும், 'சடகோபம்' என்ற எம்பெருமான் திருவடி நிலையையும், திருத்துளவத்தையும் அடியார்களுக்குக் கோவில் அருச்சகர்கள் வழங்குவதை இன்றும் காணலாம். திருமால் வழி பாட்டில் இதுவே சிறப்புப் பகுதியாகும். இவைகளை ஏற்காமல் திரும்புவது கூடாது என்பார்கள். இவைகளைத் தீர்த்தம், சடகோபம், பிரசாதம் என்று முறையே அழைப்பார்கள். திருமாலுக்கு ஆட்பட்டு வாழாட்பட்டு நிற்கும் நிலையில் இப்பகுதியே முதற்படியாகும். திருமாலுக்கு இட்ட சேடத்தைத் தவிர்ந்த வேறு எப்பொருளையும் வைணவர்கள் தமக்கென்று உகக்க மாட்டார்கள். பெரியாழ்வாரும், தமது திருப்பல்லாண்டில்,

"உடுத்துக் களைந்தநின் பீதக வாடை
உடுத்துக் கலத்த துண்டு
தொடுத்த துழாய்மலர் சூடிக் களைந்தன
சூடுமித் தொண்டர்களோம்"

என்ற அடியால் இக் கருத்தினை அருளிச் செய்தார். மேலே கடைசியாகக் கூறப்பட்ட துளசிப் பிரசாதத்தை இறைவன் திருமுன் பணிவுடன் ஏற்று, முகர்ந்து, வலது காது மேற்புறத்தில் இட்டு உச்சிமேல் மெச்சுவார்கள் வைணவர்கள். துளசி தளத்தை அணிந்திருப்பதினால், திருமாலே பரம் பொருளாக நின்றான் என்பது ஆழ்வார் திருவுள்ளம். 'தன் முடிவு ஒன்று இலாத தண் துழாய் மாலையானை' என்று நம்மாழ்வார் அருளிச் செயல். இப்பாசுரத்தின் ஈட்டுரையில்—"எல்லை காணவொண்ணாத வஸ்துவுக்கு லக்ஷணம் போலே திருத்துழாய் மாலை" எனத் திருவாக்கிடப்பட்டுள்ளது. இத்தகைய துளசியைப் பற்றி நூல்களில் மிகச் சிறப்பாகப் பேசப்பட்ட வற்றுள் சிலவற்றை ஈண்டுக் காண்போம்.

துளசியின் வகை :

'துளசி' என்ற சொல்லுக்கு இணை கடந்த செடி என்று பொருளாகும். இதனைத் திருத்துழாய், துளவம், சுரசை, கௌளரை, பத்திரை, விஷ்ணுவல்லபை, அரிப்பிரியை என்னும் 37 பெயர்களால் அழைப்பார்கள். தாவரங்களை மரம் செடி, கொடி புல் பூண்டு எனப் பிரித்த பெரியோர்கள், ஆல் அரசு வில்வம் குருந்தம் வேம்பு புன்னை பாரிஜாதம் கொன்றை மகிழம் முதலிய மரங்களையும், முல்லை மலலி மாலதி முதலிய கொடிகளையும், அறுகம்புல்லையும், துளசி தும்பை போன்ற செடிகளையும் இறைவன் உகந்தவைகளாகப் பேசினர். இவைகள் சிறந்த மருந்துப் பொருளாகவும் உள்ளவை. இவைகளில் துளசிக்குத் தனிச் சிறப்புண்டு. "சுக்கு சுருங்கினாலும் காரம் விடாது" என்பது போல் துளசி சருகானாலும் அதன் மணத்தையும், குணத்தையும் விடாது என்பர். துளசிக்குத் தோன்றும்பொழுதே நறுமணம் உண்டு. துளசித் தோட்டத்தை 'நந்தவனம்' என அழைக்கிறார்கள். நந்தன் (கண்ணன்) + வனம் (தங்கும் தோட்டம்) நந்தவனம்

எனப் பொருளாகும். திருமால் அவரது ஆலயங்களில் 'நந்தவனம்' இடுவதையும் துளவத் தொண்டு செய்வதையும் மிகவும் உகக்கிறார் என்பது புராண நூல்களின் கருத்தாகும். ஆகவே தான் தொண்டரடிப் பொடியாழ்வார் தம்மைத் "தொடையொத்த துளவமும், கூடையும் பொலிந்து, தோன்றிய தோள் தொண்டரடிப் பொடி என்னும் அடியனை" என அழைத்துக் கொண்டார். திருமகள் துளசிச் செடி உள்ள இடத்தில் நிலைத்து இருப்பாள் என்பதை,

நளின மலர் தன்னிலே, கூவிளந் தருவிலே
நறை கொண்ட பைந் துளவிலே,
கற்புடையார் வடிவிலே, கடலிலே, கொடியிலே
சொற்பெரும் கோதை மலர்மங்கை
வாழுமிடம் என்பர் கண்டாய்"

என ஒரு தனிப்பாடல் கூறிற்று. சரும நோய்களைத் தீர்த்து, உடலில் வெட்ப தட்பத்தைச் சீராக்கும் துளசி மணிமாலையை அடியார்கள் அணிந்து கொண்டு திருமாலை வழிபடுவார்கள்.

விஞ்ஞானத் துறையில் :

துளசி ஒரு கார்ப்பு மணமுள்ள மூலிகை. இது நல்ல துளசி, கிருஷ்ண துளசி, இராம துளசி, செந்துளசி, கர்ப்பூரத் துளசி, சிவத்துளசி, சிறு துளசி, நிலத்துளசி, பெருந்துளசி எனப்பலவகைப் படும். இது லேபியேட்டி (Labiatae) என்ற செடிவகையைச் சேர்ந்தது. ஸ்பெர்மாபைட் (Spermaphyte) என்ற இரட்டை விதைத் தாவர இனத்தின் வகையாய் 1/2 அடி முதல் 2 அடிவரை வளரும் செடியாகும். இதில் 200 பிரிவுகளும், 300 உட்பிரிவுகளும் உண்டென்பர். தும்பை, கஞ்சாங்கோரை, திருநீற்றுப் பச்சிலை என்பவைகளும் துளசி இனத்தைச் சேர்ந்தவைகளே. துளசியைப் பொது இடங்களில், திருக்கோயில்கள், வீடுகள், இவற்றுள் நட்டு வளர்த்தால், ஈ கொசு தேள் பாம்பு போன்ற நச்சுப் பூச்சிகள் வாரா. 'டைலர்ஸ்' என்ற மேனாட்டு மருத்துவ வல்லுநர், இறந்த சடலத்தைப் பல நாள் துளசி நீரில் இட்டுப் பார்த்ததில், அச்சடலம் கெடாமல் இருந்ததாம். "வேம்பையும், துளசியையும் விடாதே" என்பது தமிழ்ப் பழமொழி. வீட்டில் துளசிச் செடி இருந்தால், கிருமி நோய் எதுவும் அண்டாது. தைமால் (Thymol), ஸபோனின் (Saponin) என்ற ஜீவாதாரச் சத்துக்கள் துளசியில் உள்ளன என ஆங்கிலவார இதழ் கூறிற்று. அதிகாலையில் உடலுக்குத் தேவையான "ஓசோன்" (ozone) என்கிற காற்றை நம்மேல் படச் செய்வதும் துளசியே என்கிறார்கள்.

சமயத்துறையில் :

பாவப்பிரகாசம், பிரம்மவைவர்த்தம், காளிகா புராணம், பாத்மோத்தர காண்டம், முதலிய நூல்களில் துளசியின் சிறப்பு கூறப்பட்டுள்ளது. துளசி பூசையால் அம்பாள் பராசக்தி மகிழ்கிறாள் என்பது காளிகா புராணக் கருத்தாகும். பத்மோத்திரத்தில், துளசி கொண்டு அரியையும், அரனையும் அருச்சித்தால் விரும்பிய நலன்கள் கைகூடும் எனக் கூறப்பட்டுள்ளது. பிள்ளையாருக்கு மட்டும் துளசி பூசை கூடாது என பிரம்ம வைவர்த்த புராணம் கூறுகிறது. ஆழ்வார்கள் தமது அருளிச் செயல்களில், திருமாலையும் துளசியையும் சேர்த்துப் பாடியுள்ளார்கள்.

"நாடும் ஊரும் அறியவே போய் நல்ல துழாயலங்கல்" எனப்பட்டர் பிரானும், "நாற்றத் துழாய் முடி நாராயணன் நம்மால்" என ஆண்டாளும், "அமரர்கள் எல்லோரும் கண்டு வணங்கும் கண்ணபுரத்தெம்மான் வண்டு நறுந்துழாய் வந்தூதாய் கோத் தும்பி" எனத் திருமங்கை மன்னனும், "மட்டவிழ் தண்ணந் துழாய் முடியானை வணங்கி அவன் திறத்துப் பட்ட பின்னை, இறையாகிலும் என் மனத்துப் பிரிவிலேனே" எனத் திருவாய் மொழியும், இப்புடையிலே ஆழ்வார்களின் திருத்துழாய் பற்றிய அருள்வாக்கு வெள்ளமிடுகிறது. பெரும்பாலும் திருமால் பூசைக்குக் கிருஷ்ண துளசியையே பயன்படுத்துவார்கள். குறிப்பிட்ட துதிகளை ஓதிக் கொண்டு மும்மூன்று தளங்களாக, நகம்படாமல் கொய்து திருமாலுக்கு அருச்சிக்க வேண்டும் என்பார்கள். பாற்கடலில் தோன்றிய துளசிக்கு 'அம்ருதோத்பவா' எனத் திருப்பெயரானதால் திருமால் திருப் பாதங்களிலும், திருமுடியிலும் திருமார்பிலும் துளசி மாலையை அணிவிப்பார்கள். பருவ நாட்கள், துவாதசி, மாதப் பிறப்பு, எண்ணை தேய்த்துக் கொண்ட நாள், நடுப்பகல், மாலை வேளை, வெள்ளிக் கிழமை இந் நாட்களில் துளசியைக் கொய்வது திருமால் தலையைக் கொய்வதற்கு ஒப்பாகுமானதால் அந் நாட்களில் துளசியைப் பறிக்க மாட்டார்கள். துளசியின்

பெயரைப் பெண்களுக்கு இடும் வழக்கம் மகா ராஷ்டிரத்தில் அதிகம் உண்டு. ஸ்ரீ இராமா நுசருடைய குருவான பெரிய நம்பிகளின் திரு மகளுக்கு "அத்துழாய்" என்றே திருப்பெயர் இருந்தது. பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் என்ற பெரும்புலவர் எப்பொழுதும் 'துளசி' என்ற திருப் பெயரைச் சொல்லிக் கொண்டிருப்பாராம். வீர சிவாஜிக்குத் துளசி அம்மனிடம் அளவற்ற பக்தியாம். துளசியை வணங்கி விட்டு அவர் போருக்குச் செல்வாராம். இந்திக் கவிஞர் துளசிதாஸர் துளஸியிடம் அளவற்ற பக்தி கொண்டவர்.

புராணக் கதைகள் :

சாவித்திரியும், தமயந்தியும் துளசியை வணங்கிக் கணவனை அடைந்தார்கள். குந்தி யும், சீதையும் துளசியை வழிபட்டு நாட்டை அடைந்தார்கள். கண்ணன் வடமதுரையில் 'மாலாகாரர்' என்ற பக்தர் சூட்டிய துளசி மாலையினால் கம்சவதம் செய்து வெற்றி கொண் டார். கிருஷ்ண துலாபாரக் கதையில் உருக்கு மிணி வெற்றி பெற்றதும் துளசியால்தான். விஷ்ணு புராணத்தில் வரும் ஜலந்திரன்-பிருந்தை இவர்களின் கதையால் துளசி அம்பாள் பிரிந்த தம்பதிகளைக் கூட்டி வைத்தாள் என்பதை அறியலாம். பார்வதியும் சிவபெருமான் உத்திர வினால் காஞ்சியில் துளசி பூசை செய்து சிவ பெருமான் திருவருள் பெற்றாள், என்பன போன்ற பல புராணக் கதைகள் துளசியின் சிறப்பினை உணர்த்தின. துளசிச் செடியை ஒரு பெண் தெய்வமாக வழிபடுவது நமது மரபாகும்.

துளசி ஒரு மூலிகை :

துளசி ஒரு ஒப்பற்ற மருந்துச் செடி என் பதைத் தமிழ் நூலாகிய பதார்த்தகுண சிந்தா மணி உரைக்கிறது.

"ஐயம் வயிறு உளைச்சல் அஸ்தி
சுரம் தாகமும் போம் ;
பைய சுரம்தான் பறக்கும்
காண்; — மெய்யாக
வாயின் அரோசகம் போம் ;
வன் காரம் சூடுள்ள
தூய துளசி தனைச் சொல்"

என்ற பாடல் பல நோய்களுக்கு மருந்தாகத் துளசியைக் கூறிற்று.

மருத்துவத் துறையில்

எலுமிச்சங் காயளவு துளசியை அரைத்து, உருட்டி, நாள்தோறும் இருவேளை உண்ண வேண்டும். பசும்பால், கஞ்சி, உப்பு கூடாது.

நாள்தோறும் தினம் ஒரு இலையாக வெறும் வயிற்றில் ஒரு வாரம் உண்ணவும். நீர் மட்டும் அருந்தி, உண்ணாமல் சில நாள் இருப்பதால் நீர் அழிவு நோய் குணப்படும். மற்றும் பல்நோய், தொண்டைக்கம்மல், வாய் வேக்காளம், உதட்டுப் புண் இவைகள் தீரும். சிறிது தேனை நாக்கில் தடவவேண்டும்.

துளசி இலை 25, கிராம்பு 10 இவைகளைச் சேர்த்து அரைத்து வெங்காயச் சாற்றை 10 அவுன்சு சேர்த்து 2 மணிக்கு ஒரு தடவை 1/2 அவுன்ஸ் வீதம் கொடுக்கக் குணம் காணலாம். இவ்வாறு 18 வித நோய்களுக்குத் துளசியைப் பயன்படுத்தும் முறையை டாக்டர் வீராசாமி நாயுடு என்பவர் கூறுவர். நாள்தோறும் துளசி தீர்த்தம் பருகிவந்தால் 'மறதி' என்ற கொடிய மூளை நோய் குணப்படும்.

இத்தகைய சிறப்புடைய துளசியை நாம் ஏதோ ஒரு பயனற்ற செடியாக நினைத்து அதனைப் புறக்கணிக்காமல் வணங்கி, பயன்படுத்தி வந் தால் இறைவன் திருவருளும் ; உடல் நலமும் பெருகும்.

வார் ஆயின முலையாள் இவள்,
வானோர் தலைமகனும்
சீர் ஆயின தெய்வநல் நோய்இது ;
தெய்வத் தண்ணந்துழாய்த்
தார்ஆயினும், தழை ஆயினும், தண்
கொம்பது ஆயினும், கீழ்
வேர் ஆயினும், நின்றமண் ஆயினும்
கொண்டு வீசுமினே !

— திருவிருத்தம்

திருக்கோயில் 11-ஆம் ஆண்டில் வெளிவந்த கட்டுரைகளின் பட்டியல்

(1968 அக்டோபர் முதல் 1969 செப்டம்பர் வரை)

ஆசிரியர் எழுதிய கட்டுரைகள்

	தலைப்புகள்		பக்கம்
1.	அண்ணாவிற்கு அஞ்சலி (கவிதை)	...	247
2.	அந்தகக் கவி வீரராகவர்.	...	21
3.	அபிராமி அந்தாதி.	...	11, 73, 114, 161, 225, 270, 327, 465, 516,
4.	அப்பரும் காந்தி அடிகளும்.	...	1
5.	இந்தியப் பெருந் தத்துவ ஞானிகள்	..	16, 79
6.	இராமலிங்கரும் திருக்குறளும்	...	263
7.	இளங்கோவடிகளும் சேக்கிழாரும்	..	97
8.	இறைவழிபாடும் திருவள்ளுவரும்	..	257
9.	உண்மை விளக்கம்	...	449 520
10.	எண்குணத்தான்	..	260
11.	ஒட்டக் கூத்தர்	...	156
12.	கடவுளுணர்ச்சி	...	265
13.	கம்பர் கவியுள்ளம்	...	545
14.	கயிலை மால்வரை (மொழிபெயர்ப்பு)	...	242
15.	கனகமன்றில் அனகநாடகன்	...	152
16.	குடம்பையும் புள்ளும்	..	407
17.	குருஞான சம்பந்தர்	..	417
18.	சமயமும் விஞ்ஞானமும்	...	119
19.	சிந்தனையும் தத்துவமும் (மொழிபெயர்ப்பு)		410
20.	சிவராத்திரி விரதச் சிறப்பு	...	278
21.	சேக்கிழாரும் சைவசித்தாந்தமும்	...	49
22.	சைவசித்தாந்தத்தில் தனையியல்	..	497
23.	ஞானமிர்தம்	...	364
24.	தஞ்சைப் பெரிய கோயில்	...	89
25.	தணியா அதிமோக தயாபரன்	...	505
26.	தருமையாதீனத்திற் பாராட்டு நிகழ்ச்சி	...	585
27.	திருக்குறட் கருத்து வளம்	..	323
28.	திருக்குறளும் சிவபிரானும்	...	214
29.	திருக்குறளும் செந்தமிழ்த் தாயும்	...	216
30.	திருக்குறளின் சொற் பொருட் சிறப்பு	...	318
31.	திருக்குறளும் தருக்க நூலும்	..	222
32.	திருக்குறளும் திருவாசகமும்	...	218
33.	திருமணியின் கூறும் குருமணி	...	109
34.	திருமந்திரச் சிறப்பு	...	305
35.	திருமால்நெறியும் திருக்குறளும்	...	311
36.	திருமுறைகளின் சிறப்பு (கவிதை)	..	474
37.	திருவள்ளுவம்	..	358, 457, 511, 570
38.	திருவள்ளுவர் விளக்கும் தெய்வச் செந்நெறி	...	353
39.	திருவானைக்கா அகிலாண்ட நாயகி மாலை	...	553
40.	திருவேற்காடு	...	282
41.	தெய்வப் புலவர் திருவள்ளுவர்	...	209
42.	தொன்மைக் கோலம்	...	231
43.	நாதனுர் ஆடும் நடம்	..	145
44.	நெடுநாளைய தேட்டம் (மொழிபெயர்ப்பு)	..	330
45.	பாண்டிய நாட்டுத் தலங்கள்	..	25, 61, 234
46.	மதிப்புரைகள்	...	133, 221, 301, 317, 409
47.	வாழ்வின் பயன் (கவிதை)	...	237
48.	வேத விழுப்பொருள்	...	268
49.	வேலூர்க் கலம்பகம்	...	449

பிற அறிஞர் கட்டுரைகள்

அண்ணங்கராசாரியர் :

இராமாயண ரசப்பிரவாகம் ... 28, 83, 141, 197
உபதேச நூல்களின் உயர்த்தி ... 533,
பக்தியின் தத்துவம் ... 294
ஸ்ரீவசநபூஷணம் ... 351
வடநாட்டுத் தலங்களின் யாத்திரை ... 443, 493

அழகரடிகள் :

திருக்குறள் மாட்சி ... 372
மணிவாசகரும் திருக்கழுக்குன்றமும் ... 40, 128, 206

இராமகிருஷ்ணன் :

வில்வத்தின் சிறப்பு ... 125
வெந்தயத்தின் மேன்மை ... 302

இராமகிருஷ்ண ஐயங்கார் :

திருமகள் களிநடம் ... 238
செல்வச் செழிப்பு ... 344
செவிச் செல்வம் ... 439

கலைஞர் மு. கருணாநிதி

திருவாரூரான் திருமண மண்டபத் திறப்புரை ... 469
பாரிவிழாவில், தலைமைக் கவிதை ... 392

குன்றக்குடி அடிகளார் :

நீங்காத நினைவு (கவிதை) ... 245
நீளுலகில் வாழ்வாய் நிலைத்து (கவிதை) ... 250
தமிழ் அமுது ... 425

சண்முகசுந்தரம் செட்டியார் :

தோட்டிமை யுடைய தொண்டர் ... 203
விழுமிய விமானம் ... 297

சௌந்தரா கைலாசம் :

அப்பர் தமிழினைப் போல வாழி (கவிதை) ... 438
காரணபத்தியம் (கவிதை) ... 525

ஸ்ரீகாந்தராமானுசர் :

இறைவனின் எளிவரும் இயல்பு ... 194
திருமால் திருநெறியும் திருக்குறளும் ... 540,
நலம்தரும் சொல் ... 336

தத்புருஷ தேசிகர் :

உறவு ஆர் உளர் ... 387
கண்ணகத்திற் காதல் ... 582
ஞானமும் நந்தியும் ... 488
தொழுதால் ஆம் ... 200
புண்ணியம் ஆம் ... 254
புந்தியிற் புகுந்தான் ... 291
வழித்துணை ... 348

தாத்தாசாரியார் :

இயற்கைக் காட்சியில் இன்பச் சுவை ... 46
துளசியின் சிறப்பு ... 587
பாலைக்குப் பின் சோலை ... 251
மாலையில் மலர்ந்த மலர் ... 434
வேழம் காட்டும் விழுப்பொருள் ... 122

வேங்கடசாமி, சீனி :

திருமெழுக்குப்புறம் .. 165
வரகுணபாண்டியனின் தொண்டுகள் ... 37

தனிக் கட்டுரைகள்

1. அருணை வடிவேல் முதலியார். சி. — தென்றமிழ்ப் பயன் .. 188
2. இராமசாமி அடிகள் — திருக்குறள் கூறும் செல்வம் .. 428
3. ஊரன் அடிகள் — திருக்குறளும் ஞானிகளும ... 382
4. கிருபானந்த வாரியார் — மகாபாரதம் 33, 94, 134, 182, 287, 339, 389, 430, 483, 529,
5. சானகிராமன். சி. — வியர்வை சிந்தும் வேலன் ... 63
6. சிங்காரவேலு. கொ. நீ. — உயிரின் இலக்கணம் .. 173
7. சீநிவாசன் சி. ஆர். — கல்வெட்டில் தேவாரம் ... 397
8. சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் — வைத்தீசுவரன் கோயிற் சிறப்பு 536
9. தண்டபாணி தேசிகர். ச. — சடங்குகளும் தத்துவமும் ... 167
10. திரிவிக்கிரம நாராயணன் — கயிலைமால் வரை .. 242
11. துரை அரங்கசாமி மொ. அ. — மெய்ந் நூல்களின் பிழிவு ... 178
12. தேவசேனாபதி வ. ஆ. — நெடுநாளைய தேட்டம் ... 330
13. மகா சந்நிதானங்கள் — 'திருக்கோயில்' இதழுக்கு வாழ்த்துச் செய்திகள் 65
14. மதுரை ஆதீனத் தலைவர் — திருக்குறளில் ஓர் ஐய விளக்கம் 378
15. மகாதேவன் டி. எம். பி. — சிந்தனையும் தத்துவமும் ... 410
16. முருகேச முதலியார். நல். — சிறுவரம் பேடு ... 285
17. வச்சிரவேல் முதலியார். க. — வேதப்பயனும் சைவம் ... 191
18. வரதராசனுர். மு. — ஞானத் தொண்டர் ... 421

CONNEMARA PUBLIC LIBRARY
12 JUL 1973
MADRAS



திருவுசாத்தானம்
ஸ்ரீ மந்திரபுரீசுவரர் தேவத்தானம்

திருவல்லிக்கேணி ஸ்ரீ பார்த்தசாரதிப் பெருமாள் கோயிலில், அறநிலைய ஆணையர் திரு. இரா. இராமசுப்பிரமணியம் B.Sc., B.L., அவர்கள் தலைமையில், நமது அறநிலைய அமைச்சர் மாண்புமிகு கே. வி. சுப்பையா B.A. அவர்கள் "ஸ்ரீராமானுசர் நூலகம்" திறந்து வைத்தார்கள்.

Edited and Published by the Commissioner, Hindu Religious and Charitable Endowments (Admn.) Dept., Madras-34.
Printed at General Printers, 14, Poonamallee High Road, Madras-3.